விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 27 புதன்கிழமை (11.03.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 082

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# பொறுப்புக் கூறலை பிரிட்டன் மறந்து விடாது

## பிரதமர் கமரூன் தெரிவிப்பு



*(லண்டன்)*

*இலங்கையில் மக்களுக்கு இழைக்கப்பட்ட துயரங்களுக்கு பொறுப்பு கூறப்பட வேண்டும் என்ற விடயத்தை பிரிட்டன் ஒரு போதும் மறக்காது. அதேபோன்று செப்ரெம்பரில் ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கை வெளியாகி விவாதிக்கப்பட வேண்டும் என்பதிலும் நாங்கள் உறுதியாகவுள்ளோம் என பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.*

23ஆம் பக்கம் பார்க்க....

## அபிவிருத்திக்கு ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

இலங்கையில் பாரிய இரண்டு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க ஜப்பான் அரசு கடனுதவி வழங்கவுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச விமான் நிலையத்தின் 2ஆம் கட்ட நிர்மாண பணிகள் மற்றும் மின் உற்பத்தி நிலையம் அமைத்தல் ஆகிய திட்டங்களை நடைமுறைப்படுத்த 600 மில்லியன் அமெரிக்க டொலர் (7,800 கோடி) கடனுதவி வழங்கவுள்ளது.

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் தெற்காசிய விவகாரங்கள் தொடர்பான பணிப்பாளர் மியோ மயோதா, இலங்கைகான ஜப்பான் உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலார் சந்திப்பின் போது இதனை தெரிவித்தார்.

ஒரு வீத வட்டி அடிப்படையில் வழங்கப்படவுள்ள குறித்த கடனை 40 வருடங்களில் திருப்பிச் செலுத்த இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்த விஜயத்தின் போது மியோ மயோதா, ஜனாதிபதி மைத்திரி

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.தே.கவில் போட்டியிட ஹெகலிய விருப்பம்!

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் சில உறுப்பினர்கள் எதிர்வரும் பொது தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடவுள்ளனர்.

சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஐ.தே.கவின் ஊடக பேச்சாளரும் அமைச்சருமான அகில விராஜ காரியவசம் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி எதிர்வரும் பொது தேர்தலில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பமளிக்குமாறு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் 3 உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி கண்டி மாவட்ட பாரா

23ஆம் பக்கம் பார்க்க....

## உதவி வழங்க அமெரிக்கா தயார்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்க உதவிகளை வழங்கத் தயார் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

நாட்டில் மீளவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் காயங்களை ஆற்றுப்படுத்தவும் உதவிகளை வழங்கத் தயார் என குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் சாதகமான மாற்றங்கள் உருவாகியுள்ளதாக அமெ

23ஆம் பக்கம் பார்க்க....

## தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி பிணையில் விடுதலை

## மேலும் எண்மருக்கு பிணை



(கொழும்பு)

பயங்கரவாதத்தை மீண்டும் உருவாக்குவதற்குத் துணையாக இருந்து செயற்பட்டார் என்கிற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி பாலேந்திரன் கொழும்பு

24ஆம் பக்கம் பார்க்க....

## சுஷ்மாவிடம் மன்னிப்பு கோரினார் ரணில்!

(கொழும்பு)

தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்வோம் என்று கூறியதற்கு இலங்கை பிரதமர் வருத்தம் தெரிவித்துள்ளதாக இந்திய மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் கூறினார்.

தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன பிடிக்க செல்லும் போது அடிக்கடி இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுகின்றார்கள். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் எல்லை தாண்டி வரும் தமிழக மீனவர்களை சுட்டுக் கொல்ல சட்டம் அனுமதி அளிக்கிறது.

23ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதிக்கு எதிராக லண்டனில் தமிழர் பேரவை ஆர்ப்பாட்டம்



(லண்டன்)

அதிகாரபூர்வ பயணம் மேற்கொண்டு லண்டன்சென்றுள்ள ஜனா

23ஆம் பக்கம் பார்க்க....

## சகல பல்கலைக்கழகங்களினதும் பேரவைகளை கலைக்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

அனைத்துப் பல்கலைக் கழகங்களினதும் பேரவைகளை கலைக்குமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் புதிய தலைவர் மொஹான் டி சில்வா அறிவித்து உள்ளார்.

அவர் கடந்த 4 ஆம் திகதி புதிய தலைவர் பதவியேற்ற நிலையில் இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராக ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் மொஹான் டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தற்போது அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நில்வும் முரண்பாடுகளை கருத்தில் கொண்டு சகல பேரவைகளையும் கலைத்து புதியவர்களை நியமிப்பதற்கு புதிய தலைவரினால் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான அறிவித்தல்கள் பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ)

## 19 ஆவது திருத்தச் சட்டம் குறித்த இறுதி முடிவு இன்று வெளியாகும்

(கொழும்பு)

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை மட்டுப்படுத்தல், அரசமைப்பின் 17ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் உட்பட முக்கிய சில சரத்துகளடங்கிய அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டமூலம் தொடர்பில் இன்று புதன்கிழமை இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது. அமைச்சரவைக்கும் மேலான சபையான தேசிய நிறைவேற்றுச் சபையின் வாராந்த கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திலேயே மேற்

24ஆம் பக்கம் பார்க்க....

## சிறுபான்மை மக்களுக்கு எதிராக செயற்படுகின்றார் பிரதமர் ரணில்

### பிரபா கணேசன் காட்டம்



(கொழும்பு)

நல்லிணக்க அரசாங்கத்தை அமைக்கிறேன் என்று கூறி ஆட்சியமைத்த ரணில் விக்கிரமசிங்கவின் இன்றைய நடவடிக்கை சிறுபான்மை மக்களுக்கு எதிராக செல்வதை இட்டு அதிருப்தி அடைகிறேன் என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவர் பிரபா கணேசன் தெரிவி

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி திருநகரில் சகல வசதிகளுடன் ஐந்து றூம் இரண்டு (Hall) மொட்டை மாடி அத்துடன் தாராளமான வாகன தரிப்பிட வசதிகளுடன் பயன் தரும் மரங்களும் உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு பொருத்தமான இடம் ஏனையவர்களும் தொடர்பு கொள்ளலாம். தொடர்புகளுக்கு : 077-6984751

(C-331)


# ஆட்சி மாற்றத்தால் எதுவும் மாறவில்லை

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் எந்த மாற்றத்தையும் இது வரையில் உணரவில்லை என முன்னாள் அமைச்சரும், ஈ.பி.டி.பி. கட்சியின் பொதுச் செயலாளருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் எவ்விதமான நலன்களையும் இதுவரையில் பெற்றுக்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய நிறைவேற்றுப் பேரவையில் அங்கம் வகிக்கும் தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வித காத்திரமான தீர்வுகளையும் முன்வைக்கவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய நிறைவேற்றுப் பேரவையின் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்படும் என பேரவையில் அங்கம் வகிக்கும் தரப்பினரே கூறி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் இந்த நபர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வித தீர்வுகளையும் வழங்கவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய நிறைவேற்றுப் பேரவையில் எவ்வாறான பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன என்பது பற்றி தமிழ் மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளதாகவும் நூறுநாள் திட்டத்தில் தமிழ் மக்களுக்கு எவ்வித நலன்களும் வழங்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுளளார்.

இந்த சந்தர்ப்பத்தை சரியான முறையில் பயன்படுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் முனைப்பு காட்டியதில்லை என அவர் தெரிவித்துள்ளார். சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள தவறியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி காராளசிங்கம் இலட்சாவதி (பேபி)



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும், வட்டு.கிழக்கு சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட காராளசிங்கம் இலட்சாவதி (பேபி) 10.03.2015 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி -அன்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கற்பகம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற காராளசிங்கத்தின் மனைவியும், நடேஸ்வரி, சிவராமா, அரிராமா, நகுலேஸ்வரி, காலஞ்சென்ற சோதிராமா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் சந்திரவதனா, சுசிலாதேவி, தில்லைத்திருச்சிற்றம்பலம் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், பரமநாதன், பத்மநாதன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(11.03.2015) காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாற்று இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தொடர்பு:
கா.சுரேஸ் - 021 225 0672
கா.நிர்மலன் - 0776679313

(9742)

## P.K.குமாரகுலசிங்கம்



(இளைப்பாறிய ஓவசியர்-நீர்ப்பாசனத் திணைக்களம்-புத்தளம், மன்னார்)

சிவலிங்கப்புளியடி வண்ணார்பண்ணையைப் பூர்வீகமாகவும் பிறப்பிடமாகவும் தேவாலய வீதி ஒட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பி கந்தையா குமாரகுல சிங்கம் (இளைப்பாறிய ஓவசியர் நீர்ப்பாசனத் திணைக்களம்) 08.03.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கந்தையா செல்லமுத்து தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற P.K பாலசிங்கம் (படியாதவன்) இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்), கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர்) மற்றும் யோகேஸ்வரி கந்தையா (இளைப்பாறிய பிரதி அதிபர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி), திருமதி இராஜேஸ்வரி சுந்தரநடராஜா (இளைப்பாறிய பிரதி அதிபர் முஸ்லிம் மகா வித்தியாலயம், வவுனியா), திருமதி இரட்ணேஸ்வரி ஜெயபாலன் (இளைப்பாறிய முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், யாழ்ப்பாணம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் P.K.B.பாலஸங்கர் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம்-கோப்பாய்), P.K.B.பாலமயூரகன் (கனடா) ஆகியோரின் சிறிய தகப்பனும், J.சாந்திபூஷன் (கனடா), திருமதி மேனகாசாந்தி சுதாசன் (கனடா), திருமதி ஜெனித்தாசாந்தி மணிபல்லவன் (லண்டன்), திருமதி துதிப்பிரியா சிவகுமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பொது வைத்தியசாலை, வவுனியா), திருமதி பிரியலக்ஷனா சாந்தரூபன் (முகாமைத்துவ உதவியாளர் நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சிவபதிமலர் பாலசிங்கம், N. சுந்தரநடராஜன் (இளைப்பாறிய அதிபர் கணேசபுரம் விநாயகர் வித்தியாலயம், வவு னியா) மற்றும் காலஞ்சென்ற R.ஜெயபாலன் (நிர்வாக உத்தியோகஸ்தர், நெல் சந்தைப்படுத்தும் சபை கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்டம்) ஆகியோரின் அருமை மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (12.03.2015) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல்10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

விதானை சங்கரியர் வளவு
478/3 K.K.S.வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

தகவல்:-
P.K.B.பாலஸங்கர்
(பெறாமகன்)

(C-329)

# பேராயர் ஜெபநேசனின் பவளவிழா நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயரும் யாழ்.பல்கலைக்கழக தமிழ் முதுமாணிக் கற்கைநெறி வருகை விரிவுரையாளருமாகிய அதி வண. கலாநிதி எஸ்.ஜெபநேசனின் பவளவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அருட்தந்தையும் விழா நாயகரின் சகோதரருமாகிய வண.எஸ்.மனோபவன் தலைமையில் நடைபெறும், வழிபாட்டு நிகழ்வுகளில் மன்னார் மறை மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு யோசப் ஆண்டகை அருளுரை வழங்குவார். உடுவில் மகளிர் கல்லூரியினரின் வழிபாட்டுப் பாடல்கள் இடம்பெறும்.

தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் துணை அதிபர் ச.லலீசனின் முன்னிலைபடுத்தலில் பகிரங்கக் கூட்டம் இடம்பெறும். இந நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் இலங்கைத திருச்சபையின் நுவரேலியா மறைமாவட்டக குருமுதல்வர்வண.எஸ்பி. நேசகுமாரும்வழங்குவர்.

பவளவிழாவையொட்டி பேராயரால் எழுதப்பட்ட கண்டதும் கேட்டதும என்ற நூலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள்தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா வெளியிட்டு வைப்பார். பேராயரின் அபிமானிகளையும் மாணவர் களையும் இவ் விழாவில் கலந்து கொள்ளுமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கோரியுள்ளனர். (எ-11)


## வேலை ஆட்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு கணனி அறிவுள்ள வேலை ஆட்கள் தேவை, ஆரம்ப மாதவேதனமாக ரூபாய் 12000/= வழங்கப்படும் வயது எல்லை 18 தொடக்கம் 23 வரை ஆண்கள் மட்டும்.

கிங்ஸ் எலெக்ரோனிக்ஸ், T.P: 021 222 3857
11 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(9741)


# மரண அறிவித்தல்

## திருமதி மொன்பேட் மேரி ஜோன்ஒவ்ஆர்க் (பேபி)



சுன்னாகம் சூராவத்தை நாக்கியம்புலத்தைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மொன்பேட் மேரி ஜோன்ஒவ்ஆர்க் (பேபி) நேற்று (10.03.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற யோசெப் தம்பதியரின் அன்பு மருமகளும், மொன்பேட்டின் (சிற்றி மோட்டோர்ஸ்) பாசமிகு மனைவியும், நிறோஜினி, வினோஜினி (ஆசிரியர்-யா/கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் தாயாரும், பொனி பிரான்சிஸ் (கெனடி வோர்ச் வேக்ஸ் - பரமேஸ்வராச் சந்தி), டனிஸ்ரன் விஜயகுமார் (ஆசிரியர் - யா/புனித ஹென்றியரசர் கல்லூரி-இளவாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், மைக்கலின், மக்ஸன், றொனால்டோ ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற அற்புதராஜா, அருள்ராஜா மற்றும் யசிந்தா, லூசியா, ஜெயராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (11.03.2015) புதன்கிழமை பி.ப 3 மணிக்கு திருநெல்வேலி புனித சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக ஏழாலை சேமக்காலைக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.272/1, புகையிரத வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்: கணவர், பிள்ளைகள்
021 222 0206

(9743)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.சிறைச்சாலையில் கைதி ஒருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

**கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற உத்தரவிற்கமைய சிறைச்சாலையில் விளக்க மறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.சிறைச்சாலையில் உயிரிழந்துள்ளார்.**

இதில் 2 ஆம் குறுக்குத்தெரு பாரதிபுரம் கிளிநொச்சியைச் சேர்ந்தவரும் ஐந்து பிள்ளைகளின் தந்தையுமான தேவதாஸ் குணசீலன் (வயது-46) என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிரழந்தவராவார்.

கடந்த ஐந்தாம் திகதியன்று கிளிநொச்சியிலுள்ள வீட்டில் சாப்பிட்டு விட்டு பின்னர் அங்கிருந்து யாழ்ப்பாணம் திருநகர் பகுதிக்கு குறித்த குடும்பஸ்தர் வந்திருந்தார். இதன்போது யாழ். பிரதான வீதியிலுள்ள சென்சாள்ஸ் மகா வித்தியாலயத்திற்கு அருகில் வைத்து கஞ்சா வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட குடும்பஸ்தர் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில் குடும்பஸ்தரினை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டதற்கு அமைய யாழ்.சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில் நேற்று அதிகாலை திடீரென நெஞ்சுக்குத்து ஏற்பட்டதாகவும் இதன் பின்னர் உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்ததாகவும் இதன்போது வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதாகவும் சிறைச்சாலை அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறுகின்ற சிறை அதிகாரிகள் அவர் உயிரிழந்ததன் பின்னராக 3 மணிக்கே தமக்கு அறிவித்தல் தந்திருந்தனர். ஆனால் அவருக்கு முன்னர் இவ்வாறான நோய்கள் இல்லை என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நிலையில் பிரேத பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேற்படி சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## ஏல விற்பனை

யாழ்.நீதவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது. இப் பகிரங்க ஏல விற்பனை மு.ப. 10 மணிக்கு ஆரம்பிக்கப்படும். மணல் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் செலுத்த வேண்டும்.

காசோலை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் மணலை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ-3)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 30 09 1952

ஆண்டவன் அடிதனில் 10 02 2015

**அமரர் தெய்வேந்திரம்பிள்ளை சௌந்திரேஷ்வரி (ராணி)**

கண்ணீருக்கு தடைபோட்டது போல
உம் நினைவுகளுக்கு தடைபோட முடியவில்லை
நினைவுகளை மட்டும் நிறையவே தந்துவிட்டு
நீர் எங்கு சென்றீரோ!

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்**

கடந்த 10.02.2015 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு எல்லாவகையிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை இணைந்து நின்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நாளை 12.03.2015 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

4-ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

(9737)

தகவல்
பிள்ளைகள்
சுரேஷ், ரமேஷ், சிவதீபனா



## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை வட்டாரம்:-14, ஆதன இலக்கம்:152,கல்வளை றோட், சண்டிலிப்பாய்.**

வட்டாரம் 14 கல்வளை வீதி ஆதன இலக்கம் 152 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப்பகுதி, மானிப்பாய், கோவில்பற்று, சண்டிலிப்பாய் இறை "கருகியந்தோட்டமும் மரக்காய் புளியடியும் மறு பிரிவும்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 04 கொண்ட இவ்வாதனமானது சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த தம்பிராசா கைம்பெண் நாகம்மா ஆகிய இவர்களால் சீதன உறுதி மூலம் சண்டிலிப்பாயைச் சேர்ந்த தம்பிஐயா பெண் அன்னவதனா என்பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் திரு.பொன்னம்பலம் சுந்தரலிங்கம் முகதாவில் நிறைவேறிய 1384 ஆம் இலக்க 10.10. 2004 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். "கருகியந்தோட்டமும் மரக்காய் புளியடியும் மறு பிரிவும்" நிலப்பரப்பு 04 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரி மையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் தம்பிஐயா பெண் அன்னவதனா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

(க-323) தவிசாளர், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.



## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல.J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2014 ஆம் ஆண்டு 28.02.2014 இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2015) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.04.2015 ஆம் திகதி விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறிய தருகின்றோம்.

உரிமையாளர் A.S.Surendran

இல.370,
கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். 021 490 0311

இல.09,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.021 222 5046

(க-325)


## இராசி பலன்

11.03.2015
மாசி 27, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
பஞ்சமி முற்பகல் 7.27 மணிவரை
விசாகம் முன்னிரவு 8.50 மணிவரை
இராகுகாலம் 12.23-1.53 மணிவரை
சுபநேரம் 4.53-6.23 மணிவரை
சித்தாமிர்தம்

வளவன்

**மேடம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர்கள் வழியில் சுபவிரயங்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**இடபம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், எடுத்த காரியம் எளிதில் கைகூடும், வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்:** தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், வீட்டை பராமரிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** மனதிற்கு இனிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், சுப நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு. வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முன் வருவீர்கள்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காணும் நாள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வல்லவர்களின் உதவியை நாடுவீர்கள், நேற்றைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரும், உடன்பிறப்புக்களின் வழியில் உதவிகள் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த தனவரவுகள் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கி சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** விரும்பிய காரியங்கள் விரும்பிய படி நடைபெறலாம், குடும்ப உறவுகளை அனுசரித்து செல்வது நல்லது, வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு.

**தனுசு:** சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், பக்குவாக பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், பயணத்தால் பலனுண்டு.

**மகரம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வருமானம் வரும் வழியை கண்டுகொள்வீர்கள்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், கொடுத்த வாக்கினை காப்பாற்றி மகிழ் வீர்கள், நீண்டநாள் ஆசையொன்று நிறைவேறும் நாள், சுபதகவல்களால் செவி குளிரும் நாள்.

**மீனம்:** சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறலாம், விருப்பங்கள் நிறைபெற விநாயகரை வழிபட வேண்டிய நாள், தொழில்ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீ 159

## பயத்தை எதிர்கொள்ளல்

நமது பயங்களையெல்லாம் ஐந்து பெரிய பிரிவுகளாக வகைப்படுத்தலாம். முதலாவது- செல்வம், வசதிகள், பெயர், புகழ், பெருமை மற்றும் மற்ற வெளியுலக விடயங்களை இழந்துவிடும் பயம். இரண்டாவது- ஆரோக்கியத்தை இழக்கும் பயம்; ஏதேனும் விபத்து அல்லது நோயின் காரணமாக உடல் உறுப்புக்களை இழந்துவிடும் பயம்- நமது உடல் ஆரோக்கியத்தைக் குறித்த பயம். மூன்றாவது- நமது மனநலம் மற்றும் மனதின் ஸ்திரத்தன்மையை இழந்துவிடும் பயம். நான்காவது- நாம் நேசிப்பவர்களையும் அவர்களது அன்பையும் இழந்துவிடும் பயம். ஐந்தாவது- தெரியாதவர்களைப் பற்றிய பயம்- கடவுளைப் பற்றிய பயம். பேய்களை, ஆவிகளைப் பற்றிய பயம் மற்றும் இறப்பையும் பற்றிய பயம்.



உண்மையில் நமது பயங்களை நீங்கள் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் இந்த ஐந்து வகை பயங்கள் அனைத்துமே மரணம் பற்றிய பயம் மட்டுமே என்பதைப் புரிந்துகொள்வீர்கள். அதுவே பல்வேறு விதங்களிலும் வெளிப்படுகிறது. அவ்வளவுதான்.

மக்கள் மரணத்தைக் கண்டு பயப்படுவதன் முக்கியக் காரணம், அவர்கள் தங்கள் வாழ்க்கையை முழுமையாக வாழாததே. அவர்கள் இன்னும் வாழ்க்கையை போதுமான அளவு வாழாதது குறித்த அவநம்பிக்கையில் இருப்பதால் அஞ்சுகிறார்கள். அவர்கள் இதுபோன்று உணர்வதற்குக் காரணம், வாழ்க்கை முழுவதும் கடந்த கால நினைவுகளிலும் எதிர்காலக் கவலைகளிலும் மற்றவர்களுக்காகவும் வாழ்ந்துவிட்டதும், ஒருபோதும் நிகழ்காலத்தில் வாழாததும் போன்றவையே.

நம்முடைய ஒவ்வொரு செயலுக்கும் காரணம், ஒருவருக்கொருவர் அஹங்காரத்தினாலும் ஆசைகளினாலும் உணர்ச்சிகளினாலும் இன்னும் பலவற்றாலும் இழுபறி செய்து கொண்டிருப்பதே ஆகும். நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்தாலே நான் சொல்ல முயற்சிப்பதைப் புரிந்து கொள்வீர்கள். நீங்கள் உங்கள் வாழ்க்கையை உங்கள் பெற்றோர்கள் விட்ட இடத்திலிருந்து ஆரம்பிக்கிறீர்கள். நீங்கள் தலைமுறை தலைமுறையாக கைமாற்றப்படும் ஆசைகள், குற்ற உணர்வு, பயம் ஆகிய வற்றாலான மகுடத்தை வெறுமனே எடுத்துக்கொண்டு உங்கள் வாழ்க்கையை வாழ்ந்த பின்னர் இறப்பதற்கு முன் அதை அடுத்த தலைமுறைக்கு கொடுத்துவிட்டுச் சென்றுவிடுகிறீர்கள்; அவ்வளவே. நீங்கள் ஒருபோதும் முழுமையாக வாழ்ந்ததேயில்லை.

முழுமையாக வாழ்தல் என்றால் என்ன? வாழ்க்கையை இன்னும் தெளிவுடன் வாழ முயற்சி செய்யுங்கள்; அவ்வளவே. மற்றவர்கள் அர்த்தமற்ற எதையும் உங்கள் மீது திணிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள். தெளிவாக இருப்பீர்களானால், உங்களுடைய சொந்த ஆசைகளையும் மற்றவர்கள் உங்கள் மீது திணித்த ஆசைகளையும் மற்றவர்களிடம் இருந்து கடன் வாங்கப்பட்ட ஆசைகளையும் உங்களால் தெளிவாகப் பிரித்து அடையாளம் காண முடியும். மற்றவர்களுக்கோ அல்லது அவர்களது உடமைகளுக்கோ எந்தவிதமான ஊறும் விளைவிக்காமல் முதல் வகையான ஆசைகள் மட்டுமே நிறைவேற்றிக் கொள்ளப்படலாம். மற்ற இரண்டும் மனத்தெளிவின் உதவியுடன் விட்டுவிடப்பட வேண்டியதாகும்.

நீங்கள் இவ்வாறு வாழ்ந்தீர்களானால் ஒருபோதும் மற்றவர்களின் ஆசைகளை நிறைவேற்றிக்கொண்டிருக்க மாட்டீர்கள்; ஒருபோதும் மற்றவர்களின் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்க மாட்டீர்கள். உங்கள் சொந்த வாழ்க்கையை வாழ்ந்து மனநிறைவை அனுபவித்து காலம் வரும் பொழுது இறக்கத் தயாராக இருப்பீர்கள். உங்களிடம் பதுங்கிக் கொண்டிருக்கும் குழப்பமும் மரணத்தைப் பற்றிய அச்சமும் இருக்காது. நான் உங்களை சுயநலத்துடன் இருக்கச் சொல்லவில்லை.

(தொடரும்)

**பரமஹம்ஸ சுவாமி**

# அதிசய உலகம்

### உலக நாடுகளின் கொடிகளைக் கேட்டால் அடுத்த நொடியில் சொல்லும் சிறுவன்

கரூர் மாவட்டத்தில் நான்கு வயது சிறுவன் ஒருவன், உலகத் தலைவர்களின் பெயரையும், நாட்டின் கொடிகளையும் உடனே கண்டுபிடித்து சொல்லும் அளவுக்கு அதிக ஆற்றலோடு உள்ளான்.



கரூரை சேர்ந்த ரோசாப்பூ பெரியசாமி- பூங்குறளி, தம்பதியினரின் மகன் பெ.சுகனேஸ் (4). இச்சிறுவன் கரூர் அருகே உள்ள வேட்டமங்கலம் ராசமா மெட்ரிக் பள்ளியில் யு.கே.ஜி படித்து வருகிறான்.

இந்நிலையில் இச்சிறுவன் 200 உலக நாடுகளின் கொடி எது என கண்டுபிடித்து உடனே சொல்லும் நினைவாற்றல் படைத்தவன் ஆவான்.

மேலும் 30 திருக்குறளையும், 80 உலக தலைவர்களின் பெயர்களையும் கூறுவதோடு இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும், அதன் தலைநகரங்களையும், மாநில தலைவர்களின் பெயர்களையும் கூறி வருகிறான்.

இதுமட்டுமில்லாமல் தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களையும் கூறிவருகிறான். கடந்த 2 வருடங்களாக இவனின் நினைவாற்றல் கூடி வருகிறது.

# சமைப்போம் சுவைப்போம்

## முடக்கத்தான் தோசை!



**தே.பொருட்கள்:-**

புழுங்கல் அரிசி - 1 கப்

முடக்கத்தான் இலை - 2 கப்

வெந்தயம் - 1 டீஸ்பூன்

**செய்முறை:**

அரிசியையும், வெந்தயத்தையும் ஊற வைத்து தோசைமாவுக்கு அரைப்பதுபோலவே அரைத்து, அதனுடன் முடக்கத்தான் இலையையும் நன்கு கழுவிப் போட்டு அரைத்து விடவும்.

மூன்றையும் ஒன்றாகவே போட்டு அரைக்கலாம். மிகவும் நைசாக முதல் நாள் இரவே அரைத்து வைத்துவிடவும். மறுநாள் தோசைக்கல்லில் தோசை போல வார்க்கவும். இதற்கு தேங்காய் சட்னி, பூண்டுச் சட்னி - இரண்டுமே நன்றாக இருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசளிப்பு தின நிகழ்வு இன்று

யாழ். மூளாய் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு தின நிகழ்வு இன்று புதன் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதி பர் இ.லோகேஸ்வரன் தலைமை யில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி பு.பஞ்சாட்சரமும் சிறப்பு விருந்தினராக அல் மையூடா நிலைய இணைப்பாளர் ஜே.ரமணதாஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)


**LED**

Reduced energy consumption and cooler lights mean lower electricity bills. Saving money

**6 Months Warranty**

**PLASTIC LED BULB**

2W Rs.80/= | 3W Rs.120/=
5W Rs.180/= | 7W Rs.260/=
9W Rs.360/= | 12W Rs.420/=
15W Rs.550/= | 18W Rs.750/=

Buy same item 10pcs
Get 10% Discount



**LED TV STAND**
**RS.7750/=**



No 11A, Stanley Road,
Jaffna. Tel : 0212223857
Hotline : 0727949242

KINGS ELECTRONICS

www.kingselectronics.lk



## விற்பனைக்கு

கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள 3 மாடிக்கட்டடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 873 6561

(9733)

## தேவை

துறைமுகம்/ விமான நிலையம் சேவைக்கு கல்வித்தகைமை உள்ள/ அற்ற பயிற்சியுடைய/ பயிற்சியற்ற 18-55 வயதிற்கு இடைப்பட்டவர்கள் உடனடியாக தேவை. (உணவு, தங்குமிடத்துடன் உயர்ந்த சம்பளம்) தொடர்புகளுக்கு:- 077 2926 934 (9634)



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 48 1/4 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: HNDA, AAT/ அரச தொழில்
தொ.இ: B/4260

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 23 3/4 செவ் 2 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4275

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 12
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்
தொ.இ: B/4278

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை கி.பா: 35 1/2 செவ்12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: B.COM/ முகாமையாளர் டுபாய்
தொ.இ: B/4279

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 35 1/2 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/4273

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பர்: 35 செவ் 4 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/4274

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 77
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: மருத்துவபீட இறுதியாண்டு மாணவி லண்டன்
தொ.இ: G/4276

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 48 சூரிசெவ் 6 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: IAB, AAT, CIMA/ கணக்காளர்
தொ.இ: G/4277

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


# திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தின் 306 B1 இன் மாவட்ட ஆளுநர் வருகை...

லயன்ஸ் கழகத்தின் 306 B 1 இன் மாவட்ட ஆளுநர் லயன் இக்நேசியஸ் கமிலஸ் அவர்களின் லயன் கழகங்களிற்கான வருகை கடந்த 05/03/2015 மாலை 6.00 மணியளவில் கோட்டல் கிறீன் கிறாசில் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினால் அதன் தலைவர் லயன் அரியநாயகம் ரஞ்சித் இன் தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.இதன்போது முள்ளந்தண்டு நோயால் பாதிக்கப்பட்ட யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்ட நோயாளிகளிற்கு திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினால் முச்சக்கர வண்டியும் கிளிநொச்சியின் பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கான பாடசாலை உபகரணங்களும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முச்சக்கர வண்டி மற்றும் இரத்த பரிசோதனை உபகரணங்களும் வறிய நிலையில் உள்ள எழுத்தாளன் தனது புத்தகத்தினை வெளியிடுவதற்கான உதவித் தொகையும் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகத்தினால் வழங்கப்பட்டது. மேற்படி நிகழ்வில் இரண்டாவது மாவட்ட ஆளுநர் வைத்தியர் லயன் தியாகராஜா மற்றும் லயன் கழ்கத்தின் உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்திருந்தனா.





தமிழ்க் கங்கை வண்ணச்சோலை
THAMILK GANKAI WANNA SOOLAI
Fancy Goods & Presentation Items
0212285853

SINGER INNOVEX SONY
விநாயகர்
தளபாடமும் பல்பொருள் வாணிபமும்
A9 வீதி, கிளிநொச்சி.
Tel : 077 5227505, 021 4920420
Tele Fax: 021 2285372
DAMRO Richsonic Preethi SHARP USHA PHILIPS

KUVI HARDWARE
Dealers in CN Tor, Lanka Tor, Angle Iron, G.I. Pipes, Cement, Asbestos Sheet, G.I. Sheet, Tiles, Bathroom Fittings and all kind of Hardware & Electricals Items
No. 32, Kandy Road, Kilinochchi.
Tel : 021 2280030, 021 2280029
Mobile : 077 9191560, 077 9109252

பிள்ளையார் அருள் வண்ணச் சோலை
P.A
Pillayar Arul Vannachcholai
A9 Road, Kilinochchi.
T.P : 021 2285789 - 0773500082

(சி-324)
Huru Hardware
All Buildings Materials & Paint Suppliers
Leading Hardware Merchants in Kilinochchi
Proprietor : N. Sivakumar
Mobile : 077 669 1049
T.P : 021 228 0111
Fax : 021 228 0222
No.175, Karadippokku Junction, A9 Road, Kilinochchi


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி வடக்கு பிரதேச கலை இலக்கியப் போட்டிகள்


கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் தேசிய கலை இலக்கியப் போட்டிகள் வடமராட்சி வடக்கு பிரதேச மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாகவும் திறந்த போட்டிகளாகவும் நடைபெறவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளாக கட்டுரைப்போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு) கவிதைப் போட்டி (கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவு) கவிதைப்பாடல் (கனிஷ்ட, சிரேஷ்ட பாலர் பிரிவு) கையெழுத்துப் போட்டி ( பாலர் பிரிவு) பாடல் நயத்தல் போட்டி (சிரேஷ்ட பிரிவு) என்பனவும் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகள் யாவும் பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே உரியது. இப் போட்டிகளில் பாலர் பிரிவு 6-10 வயது வரையுள்ள மாணவர்கள், கனிஷ்ட பிரிவு 11-15 வரையுள்ள மாணவர்கள், சிரேஷ்ட பிரிவு 16-19 வரையுள்ள மாணவர்கள் யாவரும் பங்குபற்றலாம்.

19 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான திறந்த போட்டியில் தனி நபர்கள் எவரும் பங்குபற்றலாம். இப்போட்டிகளில் பாடல் ஆக்கம் மற்றும் நாட்டார் கலை, கற்றல் போட்டி, இலக்கிய விபரணப் போட்டி, சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டி, சிறுவர் கதை ஆக்கப் போட்டி என்பனவும் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் விண்ணப்பப் படிவத்தினையும் மேலதிக விபரங்களையும் பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக பருத்தித்துறைப் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் என பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)




# யாழில் விபச்சாரத்தில் ஈடுபடமுயன்ற பெண்ணொருவர் உட்பட ஐவர் கைது!

## பொலிஸார் அதிரடி

**யாழ்ப்பாணத்தில் விபச்சாரத்தில் ஈடுபட முயன்ற தென் இலங்கையை சேர்ந்த பெண் ஒருவர் உட்பட ஐவரினை யாழ்.பொலிசார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் தொண்டு நிறுவனம் ஒன்றில் உயர்ந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக உள்ளார் எனவும் இவர்களில் இருவர் குடும்பஸ்தர்கள் எனவும் யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

நேற்று முன்தினம் இரவு வேளை குருநகரில் உள்ள இடமொன்றில் தென்னிலங்கையை சேர்ந்த பிரஸ்தாப பெண் தனியாக நின்றுள்ளார்.

பெண் ஒருவர் தனியாக நிற்பதனை கண்ட அயலவர்கள் உடனடியாக பொலிசாருக்கு தெரியப்படுத்தியதனை அடுத்து குறித்த பெண்ணை சந்தேகத்தின் பேரில் கைது செய்து யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவினர் விசாரணை மேற்கொண்டனர்.

இவ்விசாரணையின் போது குறித்த பெண் தென்பகுதியை சேர்ந்தவர் என்றும் யாழ்ப்பாணத்தில் விபச்சார தொழில் செய்து வருகின்றார் என்றும் தெரிய வந்தது.

இதனையடுத்து சாதுரியமாக செயற்பட்ட பொலிசார் குறித்த பெண் யாரோடெல்லாம் தொடர்பு வைத்துள்ளார் என்பதனை கண்டறிவதற்கு பெண்ணின் கைத் தொலைபேசியினை இயங்கு நிலையிலேயே வைத்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று காலை பெண்ணின் கைத்தொலை பேசிக்கு அழைப்பொன்று வந்துள்ளது. அதில் யாழ்.ஆஸ்பத்திரி வீதிக்கு வருமாறும் அங்கு தாம் காத்திருப்பதாகவும் கூறியுள்ளனர்.

அந்த அழைப்பின்படி குறித்த பெண்ணை முன்னால் அனுப்பி விட்டு பின்பாக யாழ்.பொலிசார் சென்றுள்ளனர்.

அங்கு தொண்டு நிறுவனமொன்றின் பிக்கப் வாகனமொன்றில் உயர் அதிகாரி உட்பட நால்வர் இருந்துள்ளனர்.

உடனடியாக வாகனத்தினை சுற்றி வளைத்த பொலிசார் வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்ததோடு வாகனத்தினையும் பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர்.

இதனையடுத்து நால்வரிடமும் விசாரணை மேற்கொண்டதில் குறித்த பெண்ணிடம் தொண்டு நிறுவனத்தின் உயர் அதிகாரி, இருவரினை அழைத்து வந்துள்ளதாகவும் இவர்களுக்கிடையிலான தொடர்பு நீண்ட காலமாக இருந்த வந்துள்ளது எனவும் விசாரணையில் அறிய முடிகின்றது.

மேலும் ஐவரையும் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளினை பொலிசார் மேற்கொண்டு வருவதோடு மேலதிக விசாரணைகளினையும் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4)

## குடும்பப் பெண் உயிரிழப்பு

(சுரணவாய்)

தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

பொலிகண்டி பருத்தித்துறையைச் சேர்ந்த அன்பழகன் அமுதா (வயது 44) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். (இ-3-60)

## மாணவர்கள் மீது தாக்குதல்

(சுரணவாய்)

தனியார் கல்வி நிலையத்திற்குச் சென்ற வேளை தாக்கப்பட்டதாகத் தெரிவித்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை துன்னாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் உயர்தர வகுப்பு மாணவர்கள் இருவர் தாக்கப்பட்டதாகவும் சிறுகாயத்துக்குள்ளான மாணவர் ஒருவர் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி சம்பவத்திற்கு குடும்பப் பகைமையே காரணம் எனத் தெரியவருகின்றது. (இ-3-60)

# யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் திருவள்ளுவர் விழா ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் முன்னெடுக்கும் திருவள்ளுவர் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பெரியகடை சிவகணேசன் புடைவையகத்தின் ஆதரவில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வு யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவரும் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவருமாகிய பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வின் அனுசரணையாளரான கனகசபை அருள்நேசன் மங்கல விளக்கேற்றுவார். ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.தயாபரன் தமிழ் வணக்கம் இசைப்பார். யாழ். பல்கலைக்கழக வரலா[illegible] சிரேஷ்ட விரிவுரையாள[illegible] அருளானந்தம் வரவேற்புரையையும் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பி தொடக்கவுரையையும் ஆற்றுவர்.

குறள்நீதி என்ற பொருளில் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் ந.விஜயசுந்தரம் சிறப்புரையாற்றுவார். தொடர்ந்து தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் சுழலும் சொற்போர் இடம்பெறும்.

இக்கால உலகிற்கு வள்ளுவம் பெரிதும் வலியுறுத்துவது எது? என்ற பொருளில் இடம்பெறும் இச் சொற்போரில் ஒழுக்கம் அல்ல கடமையே என்ற பொருளில் கோப் பாய் ஆசிரிய கலாசாலை விரி வுரையாளர் கு. பாலஷண்முகனும், கடமை அல்ல மனிதாயமே என்ற பொருளில் யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவத் தொழில் நுட்பவியலாளர் லோ.துஷிகரனும், மனிதாயம் அல்ல [illegible] [illegible] திணைக்களத்தின் தமிழ்ப்பாட உதவிக் கல்வப் பணிப்பாளர் கௌரி முகுந்தனும், உலகியல் அல்ல ஒழுக்கமே என்ற பொருளில் முல்லை. குமிழமுனை மகா வித்தியாலயத் தமிழாசிரியர் க.சந்திரசேகரும் கருத்துரைகளை வழங்குவர்.

சிறப்பு நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை விரிவுரையாளர் சத்தியப்பிரியா கஜேந்திரனின் நெறியாள்கையில் நீர்வேலி பொன்சக்தி கலாலயா நாட்டியப் பள்ளியினர் வழங்கும் நாட்டிய நிகழ்வு இடம்பெறும்.

தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினரும் நீர்ப்பாசனத் திணைக்கள அபிவி ருத்தி உத்தி யோகத்தருமாகிய ந.ஜங்கரன் நன்றியுரை நல்குவார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட உதவிப் பதிவாளர் இ. சர்வேஸ்வரா நிகழ்வுகளை முன்னிலைப்படுத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)




## மஹா கும்பாபிஷேகம்

கீரிமலை அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதர் கோவில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபன திருக்குட நன்னீராட்டுப் பெருஞ்சாந்திப் பெருவிழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.40 மணிமுதல் முற்பகல் 10.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு எண்ணெய்க்காப்புச் சாத்தும் வைபவம் ஏப்ரல் 4ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் மாலை 6.30மணிவரை இடம்பெறும் என ஆலயநிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (இ-5)

## அலங்கார உற்சவம்

சுன்னாகம் வருஷப்புலம் பூந்தோட்ட ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் நாளை வியாழக்கிழமை காலை ஆரம்பமாகி எதிர்வரும் 21ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு இந்தியப் பிரதமர் பயணம் மேற்கொள்வது தமிழருக்கு செய்யும்

# துரோகம்

## சீமான் ஆவேசம்

(சென்னை)

**இனப்படுகொலை நிகழ்த்திய நாடு என்கிற உலகளாவிய பார்வையை மாற்றும் வகையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணம் உள்ளதாகவும் இந்தியப் பெருநிலப் பரப்பில் நிறைந்து வாழுகின்ற தமிழ் மக்களுக்கு செய்கின்ற துரோகமாகும் எனவும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆவேசமாக சுட்டிக் காட்டியுள்ளார்.**

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைப் பயணத்தைக் கண்டித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறி க்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையிலேயே மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


இனப் படுகொலை நிகழ்த்திய சிங்கள அரசின் மீது போர்க்குற்ற விசாரணை நடத்தக் கோரி உலகளாவிய ரீதியில் போராட்டங்கள் வலுவாக நடந்துகொண்டிருக்கும் நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழர்களின் உணர்வுகளையும் கோரிக் கைகளையும் புறந்தள்ளிவிட்டு இலங்கைக்குச் சுற்றுப்பயணம் செல்வது இந்திய இறையாண்மையை மதித்து தேசிய ரீதியில் ஒருமைப்பட்டிருக்கும் ஒன்பது கோடிக்கு மேலாக இந்திய பெருநிலத்தில் நிறைந்து வாழ்கிற தமிழ் தேசிய இன மக்களுக்குச் செய்கிற பெரும் துரோகமாகும்.

இலங்கை இனப்படுகொலை நிகழ்த்திய நாடு என்கிற உலகளாவிய பார்வையை மாற்றுகிற செயலாகவே இந்தியப் பிரதமரின் பயணத்தைப் பார்க்கத் தோன்றுகிறது.

கடந்தகால காங்கிரஸ் அரசுக்கு சிறிதும் மாற்றம் இல்லாது பாரதீய ஜனதா அரசு ஒட்டுமொத்தத் தமிழ் மக்களின் உணர்வு ளையும் காலில போட்டு நசுக்கிவிட்டு சிங்கள சேர்க்கையையே ஆதரித்து நிற்கிறது என்பதற்கு மோடியின் இலங்கைப் பயணம் சரியான உதாரணம். தமிழக மீனவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு கேட்டு காலாகாலமாய் போராடி வரும் நிலையில், எல்லை தாண்டும் மீனவர்களை நாங்கள் சுடத்தான் செய்வோம் எனக் கொக்கரித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. போரில் வெறும் 5 ஆயிரம் மக்கள் மட்டுமே கொல்லப்பட்டார்கள் என பிரதமர் ரணில் சொல்கிறார். ஆனால், 80 ஆயிரம் விதவைகளின் வாழ்வாதாரத்திற்கு உதவுவோம் என்று ஜனாதிபதி மைததிரிபால சிறிசேன சொல்கிறார்.

அப்படியென்றால், 80 ஆயிரம் கணவர்கள கொல்லப்பட்டது இலங்கையில் நடந்த போரில தானே ?... அவரகளின் உறவினர்களும் குழநதைகளும் கொல்லப்பட்டார்களே... அவையெல்லாம் கொலைப்பட்டியலில் அடங்காதா? கொஞ்சமும் மனச்சாட்சி யற்ற பொய்க்கருத்துக்களைப் பேசிவரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எங்கள் பிரதமரை நேரில் சந்திக்கும் போதுமட்டும் உண்மைகளை பந்திவைத்து பரிமாறிவிடப் போகிறாரா? இலட்சக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்றுகுவித்த சிங்கள அரசுக்கு இறுதிக்கட்டப் போரில் இந்திய அரசு உதவி செய்ததாக ரணில் பகிரங்கமாகக் கூறியருக்கிறார். இதற்கு இன்றைய இந்திய அரசின் கருத்து என்ன? அப்படியானால் எங்கள் பிரதமர் எம் இனத்தின் சாவை ஏற்றுக்கொள்கிறாரா? போருக்கும் உதவிவிட்டு ஆறுதலுக்கும் போய் நிற்கிற அரசு தான் எமது அரசா? இலடசக்கணக்கான தமிழ் மக்களின் படுகொலைக்கு நியாயம் கேட்கவோ, சிங்கள அரசின் பயங்கரவாதத்தைத் தட்டிக் கேட்கவோ துணியாத எங்கள் பிரதமர் நரேந்திர மோடி இலங்கையில் இருக்கும் தமிழ் மக்களைச் சந்தித்துப் பேசுவேன் என அறிவித்திருக்கிறார்.

சிங்கள இராணுவத்தின் பன்மடங்கு மிரட்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளாகி இருக்கும் தமிழர்கள் பிரதமர் மோடியிடம் எப்படி வெளிப்படையாகப் பேசுவார்கள்? "காணாமல் போன தமிழர்களைக் கண்டுபிடிக்கக் கோரி" இலங்கையில் போராடிவரும் தங்கை அனந்தியின் குரலுக்குப் பதில் கொடுக்காமல், இந்தியப் பிரதமரை அழைத்துப் பொய்க்கருத்துக்களைப் பரப்பவே சிங்கள அரசு திட்டமிடுகிறது. எங்கள் பிரதமர் தங்கை அனந்தியை சந்திப்பாரா? உண்மை நிலையைக் கேட்டறிவாரா? எனவும் அவர் மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-5)




# அறிதல்-கற்றிடக் கற்றல்-நூல் மதிப்பீடு






கல்வி உலகுக்கு புதிதாக அறிமுகமாகியுள்ள மற்றுமொரு உன்னதமான நூல் அறிதல்-கற்றிடக் கற்றல் என்பதாகும். செல்வம் கண்ணதாசன் என்பவரால் எழுதப் பட்ட நூல் இதுவாகும்.

விடயங்களை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கைமாற்றுவதா கல்வி? ஆசிரியரது விடைகளை மாணவர்கள் மனனம்செய்யும் ஏற்பாடுதானா அது? பிள்ளைகள் தாமாக உணர்ந்து கொள்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் வாய்ப்புக்கள் வழங்கக்கூடாதா? பரீட்சை மண்டபங்களில் வினாத்தாள்களுக்கு விடையளிப்பதற்கான ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் விருத்திசெய்யவேண்டிய தேவைகள் எதுவுமில்லையா?

இப்படிப்பட்ட பல கூர்மையான வினாக்களின் உறுத்தல்களுக்கு உள்ளான வைத்தியகலாநிதி செல்வம் கண்ணதாசனின் பிரதிபலிப்பும் தார்மீகக் கோபமும் தான் இந்நூலின் உள்ளடக்கமாகும். பிள்ளைகளின் பக்கத்தில் போய் நின்று கற்றல், கற்பதற்கான முறைகள், நுட்பங்கள், பரீட்சைகள் பற்றி அதீத அக்கறையுடன் எழுத்து மூலமாக பெற்றோருடனும் ஆசிரியர் களுடனும் உரையாடத் துடிக்கின்றார் நூலாசிரியர்.

மாணவர்களின் புத்திசாதுரிய த்தை கணக்கில் எடுக்காதிருத்தல், மன அழுத்தங்களை விளங்கிக் கொள்ள முயலாதிருத்தல், பாடங்களைத் தெரிவு செய்வதில் வழிகாட் டத் தெரியாதிருத்தல்




நேர முகாமைத்துவத்தின் மகிமையை எங்கும், எப்போதும் வலியுறுத்தாதிருத்தல் போன்ற மாபெரும் தவறுகளுக்கு யார் காரணம் என்ற கேள்வியை நான்கு அத்தியாயங்களில் நூலாசிரியர் கண்ணதாசன் உரத்துக் கேட்கிறார். மனிதரைச் சிந்திக்கப் பழக்குவது தான் கல்வி என்ற அல்பேட் ஐன்ஸ் ரீனின்கருத்துடன்ஒன்றித்துப்போயுள்ள நூலாசிரியர் பதினொரு அத்தியாயங்க ளில் தனது சமுதாயத்துக்கான கல் விப் பங்களிப்பை வழங்குகிறார். வாழ்க்கையில் வெற்றிபெறுவது, பூரண மனிதராக உச்சம் தொடுவது பற்றியும் இரண்டு அத்தியாயங்கள் பேசுகின்றன. உன்னை நீயே மதிப்பி டுவாய் என்பது போல் சுய மதிப்பீட்டுப் படி வம் ஒன்றையும் இணைத்துள்ளார் நூலாசிரியர்.

மிகவும் அழகான தளக்கோலம் கொண்ட இந்த நூல் உண்மையில் (125+xxii)147 பக்கங்களைக்கொண்டுள்ளது. இதில் இருபத்திரெண்டு பக்கங்களில் வைத்தியத்துறை சார் ந்தமூவரின் சமுதாயத்தில் நிகழ் கின்ற கல்விச் செயன்முறை பற் றிய உள்ளடங்கிய மனக்குமுறல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் எண்ணங்களைப் புரிந்து கொள்வதற்கான பின்னணியை அவை தெளிவாக முன் வைக்கி ன்றன.

பெற்றோரும் ஆசியர்களும் மாணவர்களும் பாடசாலைத் தலைவர்களும் சமுதாயத் தலைவர்களும் இதனை வாசித்து சமூக உரையாடலுக்கான அறிவுக்களம் ஒன்றை அமைத்திடல் வேண்டும். சமூககவனிப்பின்றிமெதுமாணவர்கள் எங்கோ சிக்குண்டு கிடக் கின்றனர். அவர்கள் விடுவிக்கப்படல் வேண்டும் என்கிறார் நூலா சிரியர். சரிகணன்றுவனத்தினால் திப்பிக்கப்பட்ட இந்நூலின் விலை 350/= நூலாசிரியர் சிந்தனைக்கு விலை யிட எமக்கென்ன உரிமையுண்டு. கல்வியுலகு இதனை ஏற்றுப் பாராட்டுவது தனது மதிப்பைத் தக்க வைத்துக்கொள்ளும் மென்மையான உபாயமாகும்.

பேராசிரியர் மா.சின்னத்தம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாணத்தில் மட்டும் கவனம் செலுத்தக்கூடாது

## இந்தியாவுக்கு சம்பிக்க கூறுகிறார்

**(கொழும்பு)**

**இலங்கையில் தமிழ் மக்கள் அதிகம் வாழும் வடக்கு மாகாணத்தில் மட்டும் இந்தியா கவனம் செலுத்தக்கூடாது. முழு நாட்டையும் ஒரேவிதமாகவே பார்க்க வேண்டும். இவ்வாறு இந்திய ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் மின்சக்தி அமைச்சரான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி யதார்த்த பூர்வமாக சிந்தித்து இலங்கையுடன் இணைந்து செயற்பட்டால் வர்த்தகம், தொழில்நுட்பம், அரசியல் விடயங்களில் இரு நாடுகளும் வெற்றிக்கு மேல் வெற்றி பெறும் நிலை ஏற்படும்.

இந்தியா இலங்கையை ஒருபோதும் தனது நாட்டின் பகுதியாக நினைக்கக்கூடாது. இலங்கையின் கலாசாரம் தனித்துவமுடையது. அது இந்தியாவை ஒத்தது கிடையாது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இந்தியா ஆதரவு வழங்கியதன் மூலம் சிங்கள மக்களின் பெரும் வெறுப்பை சந்தித்தது. இதை இசை, சினிமா, கிரிக்கெட் மூலமாக மாற்றி விட முடியும் என சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# பேசும் படம்-49

இடம்:- கொழும்பு




பார்வை இழந்ததால் படும் துன்பத்தை விட இது பன்மடங்கு துன்பம் தருகிறது...

**குறிப்பு :** அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

**மின்னஞ்சல் : valampesumpadam@gmail.com**
**facebook: www.facebook.com/valam.puri.16**
**தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,**
**இல.03, 2-ம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
**அல்லது நேரில்.**

**அனுப்பியவர்: எஸ்.ஆர்த்திகன் யாழ்ப்பாணம்.**

உங்கள் புகைப்படங்களை பிரசுரிக்க விரும்பினால் பேசும் படத்துடன் அனுப்பி வைக்கவும்.

# முன்னாள் பிரதமர் டி.எம்.ஜயரட்ன யாரிடம் வாகனங்களை ஒப்படைத்தார்

## அமைச்சர் ஜோன் அமரதுங்க கேள்வி

(கொழும்பு)

முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்ன யாரிடம் வாகனங் களை ஒப்படைத் தார் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகா மைத்துவ அமைச்சர் ஜோன் அமரதுங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் பிரதமருக்கு வழங்கப்பட்டிருந்த 15 வாக னங்களைக் காணவில்லை என பொது நிர்வாக அமைச்சர் கரு ஜயசூரிய அண்மையில் குற்றம் சுமத்தியிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகை யில் முன்னாள் பிரதமர் ஜயரட்ன, தான் வாகனங்களை மீள ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

எனினும், இந்த வாகனங்கள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது என்பது பற்றிய விபரங்கள் இதுவரையில் மர்மமாகவே நீடிக்கின்றது என ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமரிடம் வாகனங்களைப் பெற்றுக் கொண்டதாக பொலிஸ் உத்தியோகத்தர்கள் இதுவரையில் எவ்வித தகவல்களையும் வெளியிவில்லை.

இந்த வாகனங்களை சாதாரண பொலிஸ் உத்தி யோகத்தர்களிடம் ஒப்படைப்பதி ல்லை எனவும் பொலிஸ்மா அதிபரிடமே வாகனங்கள் ஒப்படைக்கப்பட வேண்டு மெனவும் அவர் தெரிவித்துள்ளார்.



இந்த வாகனங்களை யாரேனும் பொறுப்பெற்றுக் கொண்டிருந்தால் அது குறித்து அறிவிக்குமாறு அமைச்சர் ஜோன் அமரங்க பெர்லிஸ் உத்தியோகத்தர்களிடம் கோரி யுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# மீட்கப்பட்ட விமானம் யோஷிதவினுடையதல்ல

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவின் விமானம் என கூறி அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட விமானம் அவருடையதல்ல என உறுதியாகியுள்ளது.

குறித்த விமானத்தை விஜேவர்தனவின் மகள் அனோமா விஜேவர்தனவிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு நீதிமன்ற நீதவான் நிஷாந்த பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

யோஷித ராஜபக்ஷ மற்றும் ரே.விஜேவர்தன ஆகியோரின் உரிமைகளுக்காக போராடிய சட்டத்தரணிகள் மற்றும் கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினால் முன்வைக்கப்பட்ட ஆதாரங்களை ஆராயுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த விமானம் ரே.விஜேவர்தனவினால் ஒன்றிணைக்கப்பட்ட உற்பத்தி என்பது பரிசோனைகளின் மூலம் தெரியவந்துள்ளதாக கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ரங்காவின் ஜீப் வண்டி ஏ-9 வீதியில் தீக்கிரை

பிரஜைகள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜே.ஸ்ரீரங்கா பயணித்த ஜீப் வண்டி ஏ-9 வீதி நாவுல, நாலந்த பிரதேசத்தில் தீப்பிடித்துள்ளது.

கண்டி நோக்கி நேற்று முன்தினம் காலை ஜே.ஸ்ரீரங்கா பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் வண்டி தீப்பிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சந்தர்ப்பத்தில் ரங்காவின் பாதுகாவலர்கள் இரண்டு பேரும் வாகன சாரதியும் தீப்பிடித்த வண்டியில் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. பின்னர் நாவுல பொலிஸார் குறித்த இடத்திற்கு வந்து தீயினை கட்டுப்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் விபத்தில் எவருக்கும் பாதிப்புகள் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது. (இ-5)

# சு.க.திட்டமிடல் குழுவின் தலைவியாக சந்திரிகா

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கை மற்றும் திட்டமிடல் குழுவின் தலைவியாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், அக்குழுவின் செயலாளராக நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று சு.கவின் நிர்வாகச் செயலாளர் எஸ்.எம். ஆரியசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சீர்த்திருத்தி புதிய திட்டமிடலின் கீழ் செயற்படுத்துவதற்காகவே இந்த கொள்கை மற்றும் திட்டமிடல் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்



வரும் தேர்தல்களின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் இக்குழு ஆராயும் என்றும் எஸ்.எம்.ஆரியசேன மேலும் தெரிவித்தார் (இ-5)

# கட்டடத் திறப்புவிழா

(கரணவாய்)

கரணவாய் இளங்கோ சனசமூக நிலைய இரண்டுமாடி கட்டடத் திறப்புவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப 5 மணிக்கு செல்வாபுரம் கரணவாயில் இடம்பெறவுள்ளது.

இளங்கோ சனசமூக நிலையத் தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் க.கனகதுரை மற்றும் பல பிரமுகர்கள் இக் கட்டடத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

# ஒபாமாவுக்குக்கூட இல்லாத சலுகைகள் மகிந்தவுக்கு!

## நிதி அமைச்சர்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்குக கூட இல்லாத சலுகைகளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொள்ளத் தீர்மானித் திருந்ததாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

பராக்ஒபாமாவிற்கு இல்லாத சொகுசு விமானத்தை மகிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொள்ள தீர்மானித்திருந்ததாக ரவிகருணாநாயக்க கூறியுள்ளார்.

அதிக விலையுடைய விமானங்களுக்காக உத்தியோகபூர்வ விலையை விட 25% அதிக பணம் செலுத்தி வாங்கியுள்ளதாகவும், அவ்வாறான 18 விமானங்களை வாங்கியுள்ளதாகவும், எனினும் குறித்த விமானங்களை கொண்டு வந்து நிறுத்துவதற்கான வசதிகள் இல்லாமையினால் இலங்கைக்கு கொணடு வரவில்லை என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில்பிட்டி கிராமத்தில் மீள குடியேற நடவடிக்கை எடுங்கள்

(மன்னார்)

**இடம்பெயர்ந்த நிலையில் உறவினர்களின் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்து வரும் தங்களை, தங்களின் சொந்தக் கிராமமான மாந்தை திருக்கேதீஸ்வரம் கோயில்பிட்டி கிராமத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



மாந்தை திருக்கேதீஸ்வரம் "கோயில் பிட்டி" கிராம பகுதிக்கு நேற்று முன்தினம் வருகை தந்த தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளிடமே, இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கிராம மக்கள் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாந்தை திருக்கேதீஸ்வரம் "கோயில் பிட்டி" கிராமத்தைச் சேர்ந்த சுமார் 100 குடும்பத்தைச் சேர்ந்தோர், நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து சென்றனர்.

இக்கிராம மக்கள் இந்தியா மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் அகதிகளாக வாழ்ந்து வந்த நிலையில், கடந்த 2002ஆம் ஆண்டு மீண்டும் திருக்கேதீஸ்வரத்துக்கு மீள்குடியேற வந்துள்ளனர்.

எனினும் மாந்தை திருக்கேதீஸ்வரம் "கோயில் பிட்டி" கிராமம் உட்பட அப்பகுதி இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டமையினால், அக்கிராம மக்களுக்கு தமது சொந்த இடங்களுக்கு மீளச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் உறவினர்களின் வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது.




இந்த நிலையில் 2010ஆம் ஆண்டு மீணடும் மாந்தை திருக்கேதீஸ்வரம் "கோயில் பிட்டி" கிராம மக்கள் அவர்களது கிராமத்தில் உள்ள காணிகளை துப்புரவு செய்ய முயன்ற போது, அப்பகுதியில் இருந்த இராணுவம் எமக்கு துப்புரவு செய்வதற்கான அனுமதியை வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் 2013ஆம் ஆண்டு எமது காணிகளைச் சுற்றி தொல்பொருள் திணைக்களத்துக்கு உரிய இடம் என கல் நாட்டப்பட்டுள்ளதோடு பெயர்ப்பலகையும் நாட்டப்பட்டுள்ளது.

இதனால் இக்கிராம மக்களுக்கு குறித்த காணிகளுக்குள் செல்ல படையினர் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் அனுமதி வழங்கவில்லை. காணிகளுக்குள் சென்றால் பள்ளம் தோண்டக்கூடாது, மரம் நடக்கூடாது, மதில் கட்டக்கூடாது என தெரிவித்துள்ளனர்.

இதனால் நாங்கள் எங்கே செல்வது என்று தெரியாத நிலையில் எமது காணிகளுக்குள் நாங்கள் செல்ல முற்பட்டோம். இந்த நிலையில் கடந்த 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் மாந்தை திருக்கேதீஸ்வரம் "கோயில் பிட்டி" கிராம பகுதிக்கு வருகை தந்தனர்.

இதன்போது, திருக்கேதீஸ்வரம் மாந்தை பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துக்கு முன் ஒன்று திரண்டு, எமது காணி பிரச்சினைகள் குறித்து வருகை தந்த அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினோம்.

எமது காணிகள் தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொண்ட அதிகாரிகள் இரு வாரங்களுக்குள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அந்த மக்களிடம் உறுதியளித்துள்ளனர். (அ)

# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி மல்லாவி நகர் பேருந்து நிலையம்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசசபைக்கு உட்பட்ட மல்லாவி நகரப் பகுதியில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகள் இன்றி பயணிகள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக பாதிக்கப்பட்டுள்ள பயணிகள் மற்றும் மல்லாவி வர்த்தக சங்க பிரதிநிதிகளும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இப் பேருந்து நிலையம் ஊடாக தினமும் பலநூற்றுக்கணக்கான வயோதிபர்கள், கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உட்பட பொதுமக்கள் பல்வேறு இடங்களுக்கு பயணிக்கின்றனர்.

இவ்வாறு நீண்ட தூரங்களில் இருந்து இங்கு வருகின்ற பயணிகளும் இங்கிருந்து பயணிப்பவர்களும் வெயில் மற்றும் மழை காலங்களில் கால்கடுக்க மர நிழல்களில் காத்திருந்து பேருந்துகளில் பயணிக்க வேண்டிய அவல நிலை காணப்படுகின்றது.

அத்துடன் இங்கு ஆண்,பெண் இருபாலாருக்குமான மலசல கூடங்கள் அமைக்கப்படவில்லை. இதனால் இயற்கை உபாதைகளுக்குள்ளாகும் பயணிகள் அருகில் உள்ள வீடுகளுக்குச் செல்லும் போது பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர்.

இவ் விடயம் தொடர்பில் துணுக்காய் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேசசபை தவிசாளர் ஆகியோருக்கு பலமுறை சுட்டிக்காட்டியும் பலன் எதுவும் கிடைக்கவில்லை என மல்லாவி வர்த்தக சங்கத்தினர் சுட்டிக்காட்டுகின்றனர்.

துணுக்காய் பிரதேசசபையிடம் பொது மக்களிடமிருந்து அறவிடப்பட்ட வரிப்பணமும் மற்றும் முல்லை. நீதிமன்றினால் துணுக்காய் பிரதேச மக்களின் குற்றச் செயல்களின் போது அறவிடப்பட்டுள்ள குற்றப்பணம் உட்பட 180 இலட்சத்துக்கு மேற்பட்ட பணம் நிரந்தர வைப்பிலிடப்பட்டுள்ள நிலையில் அப் பணத்தை பயன்படுத்தி மக்களின் இவ்வாறான குறைகளை நிவர்த்தி செய்யாதது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இதனை கவனத்தில் எடுத்து மேற்படி பேருந்து நிலையத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-15)

## கிளிநொச்சி வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு இரவு 8 மணிவரை திறப்பு

(கனகபுரம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு நேற்று முன்தினம் முதல் இரவு 8 மணிவரை திறக்கப்பட்டு மக்களுக்கு மருத்துவசேவை வழங்கப்பட்டு வருகின்றது.

புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் வேலைத்திட்டத்தின் கீழ் இவ் வெளிநோயாளர் பிரிவு இரவு 8 மணிவரை திறக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் வெளிநோயாளர் பிரிவானது பி.ப.4 மணிவரை மட்டுமே திறக்கப்பட்டு மருத்துவ சேவை வழங்கப்பட்டு வந்தமை கவனிக்கத்தக்கது.

இச்சேவையின் நேரம் மீண்டும் நீடிப்பு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நேர நீடிப்பின்மூலம் அதிக நோயாளர்கள் பயன்பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-259)

# திறக்கப்பட்ட நாளன்றே பூட்டப்பட்ட பேக்கரி

(குருமன்காடு)

வவுனியா, பிரமணாலங்குளம் பகுதியில் வடமாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சினால் திறக்கப்பட்ட பேக்கரி அன்றைய தினம் முதலே இயங்காது மூடியபடி உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனினால் கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் 1.5 மில்லியன் ரூபாய் செலவில் வவுனியா, செட்டிகுளம், பிரமணாலங்குளம் பகுதியில் பேக்கரி ஒன்று அமைக்கப்பட்டு கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

திறக்கப்பட்ட பேக்கரி அன்று மாலை முதலே மூடப்பட்டுள்ளது. திறப்பதற்காக மட்டுமே பேக்கரியில் ஒருநாள் உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற்றதுடன் தொடர்ந்தும் பூட்டியே உள்ளது.

இது தொடர்பில் அப்பகுதி மக்களை கேட்ட போது, இக் கிராமத்தைச் சேர்ந்த 5 பேருக்கு வெதுப்பகம் தொடர்பில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர்கள் தற்போது இங்குதான் உள்ளார்கள். ஆனால் இந்த பேக்கரியை 5 பேரிடமும் கொடுப்பதா? அல்லது எவ்வாறு யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் நடத்தி வருமானத்தைப் பெறுவது என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை. அதனால் பூட்டப்பட்டுள்ளது. எனினும் விரைவாக திறக்கப்படும் என்றனர். (அ-250)

## சான்றோர் விழாவும் பரிசில் வழங்கலும்

(கிளிநொச்சி-1)

கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கரைச்சிக்கோட்ட தமிழ் சான்றோர் விழாவும்பரிசில்வழங்கல்நிகழ்வும்நாளைவியாழக்கிழமை பி.ப ஒரு மணிக்கு கிளி/உருத்திரபுரம் உயர் நிலை பள்ளியில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில்குரலிசைவரவேற்பு ஆடல், நாட்டுப்புற கலை நிகழ்வு மற்றும் பரிசில் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (அ-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1087

ஒருநாள், சக்கரவர்த்தி அக்பர் தன் சபையில் அமர்ந்திருக்கையில், அவரை நாடி ஓர் இளைஞன் அங்கு வந்தான். அவன அக்பரை பணிவுடன் வணங்கியபோது, அக்பர் அவனை நோக்கி, "நீ யாரப்பா? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"பிரபு! என் பெயர் மகேஷ்தாஸ்! நான் ஒரு குக்கிராமத்தில் வசிக்கிறேன். வேலை தேடி உங்களிடம் வந்தேன்!" என்றான் அவன்.

"உனக்கு யார் சொன்னார்கள் இங்கே உனக்கு வேலை கிடைக்குமென்று?" என்று அக்பர் கேட்டார்.





## காவற்காரனுக்கு கிடைத்த பரிசு



"என் ஆசிரியர் சொன்னார், பிரபு! என்னுடைய அறிவைக் கண்டு வியந்த அவர் என் தகுதிக்குரிய வேலை உங்களிடம் தான் கிடைக்கும் என்றார். அவருடைய வார்த்தையை நம்பி என் கிராமத்திலிருந்து வெகு தூரம் காலால் நடந்து தங்களைத் தேடி வந்து இருக்கிறேன்" என்றான் மகேஷ்.

"எல்லா ஆசிரியர்களும் தங்கள் மாணவர்களை அறிவாளிகள் என்றுதான் நினைப்பார்கள். உண்மையிலேயே நீ புத்தி சாதுரியம் உடையவனாக இருந்தால மட்டுமே உனக்கு வேலை கிடைக்கும்!" என்றார் அக்பர்.

"பிரபு! நீங்கள் எதிர்பார்க்கும் தகுதியை விட நூறு மடங்கு தகுதியுடையவன் நான்!" என்று மகேஷ் பெருமையுடன் கூறினான்.

"அப்படியானால், அதை நிரூபித்துக் காட்டு!" என்றார் அக்பர்.

"பிரபு! அதைக் காட்டுவதற்கு முன் எனக்கு ஒரு பரிசு தருவீர்களா?" என்று மகேஷ் கேட்டான்.

"முதலில் உன் சாமர்த்தியத்தை நிரூபித்துக் காட்டு! பிறகு பரிசைப் பற்றிப் பேசு!" என்றார் அக்பர்.

"நான் கேட்கும் பரிசினால் உங்களுக்கு ஒரு பைசா கூட செலவாகாது!" என்றான் மகேஷ்.

"அது என்னப்பா அப்படிப்பட்ட பரிசு?" என்றார் அக்பர்.

"முப்பது சவுக்கடி கொடுங்கள்!" என்றான் மகேஷ். அவனுடைய அந்தவிபரீதமானவேண்டுகோளைக் கேட்டு அக்பர் உட்பட சபையிலிருந்த அனைவரும் திடுக்கிட்டனர்.

"உனக்கென்ன பைதயமா?" என்று அக்பர் கோபத்துடன் கேட்டார்.

"அதைப் பற்றி பின்னால் தெரிந்து கொள்வீர்கள்! தயவுசெய்து நான் வேண்டியதைக் கொடுங்கள்!" என்றான் மகேஷ்.

உடனே, அக்பர் ஒரு காவலனைச் சாட்டையெடுத்து வரச் சொன்னார். பின்னர் அவன் செவிகளில் "அவனை அடித்து விடாதே! அடிப்பது போல் பாவனை செய்!" என்றார்.

மகேஷ் தன் முதுகைக் காட்டியவாறே அவனை "நீ அடிக்கத் தொடங்கு!" என்றான். அந்த ஆளும் பலமாக அடிப்பது போல் ஓங்கி மெதுவாகவே அடித்தான். பத்துமுறை அவ்வாறு சாட்டையடிபட்டதும், மகேஷ் "நிறுத்து!" என்று கூவினான். பிறகு நிமிர்ந்து அக்பரை நோக்கி, "பிரபு! பரிசில் எனக்குக் கிடைக்க வேண்டிய பாகம் கிடைத்து விட்டது. மீதியிருப்பதை உங்களுடைய பிரதான வாயிற்காப்போர்கள் இருவருக்கும் பகிர்ந்து கொடுங்கள்!" என்றான்.

அவன் சொல்வதன் பொருள் புரியாத அக்பர், "என்ன உளறுகிறாய்?" என்று கோபத்துடன் கேட்டார்.

அவர்களையே? கூப்பிட்டுக் கேளுங்கள்" என்றான். உடனே, அக்பர் அவர்கள் இருவரையும் உள்ளே அழைத்தார். அவர்கள் வந்ததும், மகேஷ் அவர்களை நோக்கி, "தோழர்களே! சக்கரவர்த்தி தரும் பரிசை நாம் மூவரும் பங்கு பிரித்துக் கொள்வோம் என்று உங்களுக்கு வாக்களித்தேன் அல்லவா? என்னுடைய பங்கை நான் பெற்றுக்கொண்டு விட்டேன். இனி, நீங்கள் பெறுங்கள்" என்றான்.

இரு காவற்காரர்களும் மகிழ்ச்சியுடன் பரிசை எதிர்பார்க்க, இருவர் முதுகிலும் பலமாக பத்து சாட்டைஅடி விழுந்தது. வலி பொறுக்க முடியாமல் இருவரும் கதற, அக்பர் அவர்களை நோக்கி, "இந்த நிமிடமே, உங்களை வேலையிலிருந்து நீக்குகிறேன்!" என்று உத்தரவிட்ட பிறகு, மகேஷிடம், "நீ மிகவும் சாமர்த்தியசாலி என்பதை நிரூபித்துவிட்டாய்! இந்த நிமிடமே உனக்கு பீர்பால் என்ற பெயர் சூட்டி, உன்னை இந்த சபையில் உயர்ந்த பதவியில் நியமிக்கிறேன்" என்றார்.

03.2015
11

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1702 - முதல் ஆங்கில நாளிதழான தெ டெய்லி குராண்ட (The Daily Courant) லண்டனில் வெளியிடப்பட்டது.
- 1801 - ரஷ்யாவின் முதலாம் பவுல் கொல்லப்பட்டான். அவனது மகன் முதலாம் அலெக்சாண்டர் மன்னனானான்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்க மாநிலங்களின் கூட்டமைப்பு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தியது.
- 1897 - மேற்கு வேர்ஜீனியாவுக்கு மேலாகப் பறந்த எரிவெள்ளி ஒன்று வெடித்து சிதறியதில் சேதம் ஏற்பட்டது.
- 1902 - காங்கேசன்துறையில் இருந்து சாவகச்சேரி வரையான 21 மைல் நீள புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது.
- 1905 - காங்கேசன்துறை முதல் மதவாச்சி வரை புகையிரதப் பாதை அமைக்கும் பணி முடிவடைந்தது.
- 1917 - முதலாம் உலகப் போர்: பக்தாத் ஜெனரல் ஸ்டான்லி மோட் தலைமையிலான ஆங்கிலேய படைகள் - இந்தியப் படைகளிடம் வீழ்ந்தது.
- 1918 - ரஷ்யாவின் தலைநகரம் பெத்ரோகிராட்டில் இருந்து மாஸ்கோவுக்கு மாறியது.
- 1931 - சோவியத் ஒன்றியத்தில் "வேலைக்கும் சோவியத் ஒன்றியத்தைப் பாதுகாக்கவும் ஆயத்தமாயிரு" என்ற இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1958 - ஐக்கிய அமெரிக்காவின் டீ-47 விமானம் அணுகுண்டு ஒன்றைத் தவறுதலாக வீழ்த்தியதில் தெற்குக் கரோலினாவில் பலர் காயமடைந்தனர்.
- 1978 - ஒன்பது பாலஸ்தீனத் தீவிரவாதிகள் ஸ்ரேலில் பேருந்து ஒன்றைக் கடத்தி 34 பொதுமக்களைக் கொன்றனர்.
- 1985 - மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் தலைவரானார்.
- 1990 - லித்துவேனியா சோவியத்திடம் இருந்து தன்னிச்சையாக விடுதலையை அறிவித்தது.
- 2007 - தென் அமெரிக்காவின் வடகிழக்கில் உள்ள கயானா விண்வெளி ஏவுதளத்தில் ஏரியன்-5 ராக்கெட் ஏவப்பட்டு வெற்றிகரமாக அது இன்சாட்-4B என்ற இந்திய செய்மதியையும் ஸ்கைநெட்-5A என்ற பிரித்தானியாவின் துணைக்கோளையும் சுமந்து சென்றது.
- 2011 - 2011 செண்டை நிலநடுக்கமும் ஆழிப்பேரலையும்: ஜப்பானின் ஒன்சூ தீவில் வட கிழக்குப் பகுதியில் 8.9 புள்ளிகள் பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டு ஆழிப்பேரலையாக உருவெடுத்தது. பெரும் எண்ணிக்கையானோர் உயிரிழந்தனர்.

**பிறப்புக்கள்**

- 1920 - நிக்கலாஸ் புளொம்பேர்ஜென், நோபல் பரிசு பெற்றவர்


**இறப்புக்கள்**

- 1955 - **அலெக்சாண்டர் ஃப்ளெமிங், நுண்ணுயிர் கொல்லியான சிதைநொதியைக் கண்டுபிடித்தவர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1881)**
- 2002 - ஜேம்ஸ் டோபின், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1918)
- 2006 - சிலபதான் மிலொசேவிச், சேர்பியா, யூகொஸ்லாவியா ஜனாதிபதி (பி. 1941)
- 2013 - வே. தில்லைநாயகம் நூலகவியலாளர், தமிழறிஞர் (பி. 1925)

**சிறப்பு நாள்**

உலக சிறுநீரக நாள்

### அலெக்சாண்டர் ஃப்ளெமிங்



அலெக்சாண்டர் ஃப்ளெமிங் 1881 ஆகஸ்ட் 6 அன்று ஸ்காட்லாந்து நாட்டில் பிறந்தார். இவர் நுண்ணுயிர் கொல்லியான சிதைநொதியைக் கண்டுபிடித்தவர். மேலும், நுண்ணுயிர் கொல்லியான பெனிசிலினை பெனிசிலியம் நொடேடம் (Penicillium notatum) என்ற பூஞ்சையிலிருந்து பிரித்தெடுத்தார்.

உலகம் அறிந்துள்ள மருத்துவ முன்னேற்றங்களுள் பெனிசிலின் கண்டுபிடிப்பு தனிச்சிறப்பு வாய்ந்தது. பெனிசிலின் காலத்திற்கு முன் பிரசவத்தில் பெண்கள் இறப்பதும், பிறந்தபின் குழந்தைகள் இறப்பதும் சர்வ சாதாரணம். லேசான சிராய்ப்புகளும் கீறல்களும் கூட மரணத்திற்கு இட்டுச் சென்றன.

ஒரு நுண்ணுயிரை வைத்து இன்னொன்றைக் கொல்ல முடிகிற பெனிசிலின் போன்ற நச்சுமுறி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் பல நோய்களிலிருந்து மனிதர்களைக் காப்பாற்ற முடிந்தது. பெனிசிலினைக் கண்டுபிடித்து நவீன நச்சுமுறி மருந்துகள் யுகத்தைத் தொடங்கி வைத்த பெருமைக்குரிய விஞ்ஞானிதான் அலெக்ஸாண்டர் ஃப்பௌமிங். பெனிசிலின் உலகெங்கிலும் உள்ள 20 கோடி மக்களின் உயிரைக் காப்பாற்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

பாடல்களை கவிஞர் வைரமுத்து எழுத, சந்திரபோஸ் இசையமைத்தார். இந்தப் படத்தில் ரஜினிக்கு ஜோடியாக கௌதமி நடித்தார். மற்றும் ராகவி, ஷாலினி, கோவை சரளா, எஸ்.எஸ்.சந்திரன், சின்னி ஜெயந்த் ஆகியோர் நடித்தனர.

### புதுமை


இந்தப் படத்தில் ரஜினி, கௌதமி மற்றும் 5 குழந்தைகள் இடம் பெறும் பாடல் காட்சி ஒன்று வருகிறது. அந்த பாடல் காட்சியில், இந்த 7 பேருடன் யானை, முயல், குரங்கு முதலான மிருகங்கள (கார்ட்டூன்களாக) ஆடிப்பாடுவது போல் படமாக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு முன் கார்ட்டூன் சினிமா படங்கள் உருவாகியிருந்த போதிலும், மனிதர்களுடன் கார்ட்டூன்கள் சேர்ந்து நடிப்பது இந்தியாவிலேயே இதுவே முதல் தடவை. இப்படி கார்ட்டூன் காட்சிகள அமைபபதில், மும்பையைச் சேர்ந்த ராம்மோகன் பெரிய நிபுணர். அவர் ரொம்ப பிசியாக இருந்த காலகட்டம் அது.

எனவே, பட அதிபர் ஏவி.எம். சரவணன், முத்துராமனை அழைத்து, படத்துக்கு இந்த அனிமேஷன் காட்சி முக்கியம். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. அதை சிறப்பாக எடுக்க வேண்டும். "அனிமேஷன்" நிபுணர் ராம்மோகன் ரொம்ப பிசியாக இருப்பதாக அறிந்தேன். நீங்கள உடனடியாக மும்பை சென்று, அவருடைய சம்மதத்தைப் பெற்று வாருங்கள் என்றார்.

### பூஜை அன்றே பயணம்

எனவே, படத்துக்கு பூஜை போடப்பட்ட அன்றே விமானம் மூலமாக முத்துராமன் மும்பை சென்றார். ராம்மோகனை சந்தித்து, விடயத்தைச் சொன்னார். இந்த மாதிரியான "அனிமேஷன்" பாடல் காட்சி எடுக்க, நான் 80 ஆயிரம் படங்களை வரைய வேணடும். அதற்கு ரொம்ப அவகாசம் வேண்டும். இப்போது எனக்குள்ள வேலையில், இந்த பொறுப்பை ஏற்பது இயலாத காரியம் என்று ராம்மோகன் கூறினார். ஆனால், முத்துராமன் விடவில்லை. ஏவி. எம். எதையும் திட்டமிட்டு படமாக்கும் நிறுவனம். இந்த பாடல் காட்சியை முதலாவதாக படமாக்கி, உங்களுக்கு அனுப்பி வைக்கிறோம். உடனடியாக நீங்கள் படம் வரைய ஆரம்பித்து விடலாம். அதன்பின் 6 மாதம் கழித்துத்தான் படம் ரிலீஸ் ஆகும். உங்கள வேலையை செய்து முடிக்க, போதுமான அவகாசம் கிடைக்கும் என்றார். அதன் பேரில், கார்ட்டூன்கள் வரைய ராம்மோகன் சம்மதித்தார்.



குழந்தைகளுடன் ரஜினி- கௌதமி

### படமாக்கியது எப்படி?

இந்தக் காட்சியை படமாக்கியது எப்படி? என்று முத்துராமனிடம் கேட்டற்கு அவர் கூறியதாவது:-

இந்த பாடல் காட்சியில் ரஜினி, கௌதமி ஆகியோருடன் 5 குழந்தைகள் பங்கு கொண்டார்கள். அவர்களுடன் யானை, முயல், குரங்கு முதலான மிருகங்கள் ஓடியாடுவது வெறும் கற்பனைதான். அக்காட்சியில் யானை எங்கிருந்து வரும், முயல் எப்படி ஓடி வரும் என்பதையெல்லாம் உதவியாளர்கள் விளக்கி, நடித்துக் காட்டினார்கள். அந்த மிருகங்கள் அந்தந்த இடங்களில் இருப்பதாக ரஜினியும், மற்றவர்களும் கற்பனை செய்துகொண்டு நடித்தார்கள். இதை நாங்கள் படமாக்கி மும்பை அனுப்பினோம். அதற்கு ஏற்றபடி, ராம்மோகன் கார்ட்டூன்கள் வரைந்தார். அவற்றையெல்லாம் அந்தந்த இடத்தில் பொருத்தமாக இணைத்து பாடல் காட்சியை உருவாக்கினோம்.

சிரமமும், பணச்செலவும் அதிகமாக இருந்தபோதிலும், அந்தக் காட்சி அழகாக அமைந்தது. குழந்தைகளை வெகுவாகக் கவர்ந்தது.

குழந்தைகளை பெற்றோர்கள் பொறுப்போடு வளர்க்க வேண்டும். வேலைக்காரர்களிடம் விட்டு விடக் கூடாது என்ற கருத்தை இந்தப் படம் வலியுறுத்தியது. இதற்கு அந்தப் பாடல் காட்சி உதவியது.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்

## வைரமுத்து- 97

கடைசியா அவள சண்ட போட்டு வெளியேத்த சாமியத் தொணைக் கிழுத்துக்கிட்டான்.

பண்ணக்கூடாத ஒரு காரியம் பண்ணினான்பாவி .

வீட்டுக்குள்ள அவன் வேட்டி சட்டை போட்டு வைக்கிற கொடியில அவ மூலையில சுருட்டி வச்சிருந்த முட்டுச்சீலையக் கலந்து தொங்க விட்டுட்டான்.

அய்யோ அநியாயமே இந்த அசிங்கத்தைப் பார்த்தீர்களா? கட்ற வேட்டியோட சேத்து முட்டுச் சீலையக் கொண்டந்து முட்டவிட்ருக்காளே முண்டச்சி மக.

இப்படித் தீட்டுப்பட்ட வீட்ல தெய்வமிருக்குமா? தெய்வம் இல்லாத வீட்ல பிள்ள பெறக்குமா.

அது இதச் சொல்லி அவள நொக்கு நொக்குன்னு நொக்கி நிம்மதியில்லாமப் பண்ணிப்புட்டான்.

நாலு வருசம் வாழ்ந்ததுக்குள்ளயே நடுமுதுகுல ஏறி மிதிக்கிறான்..

இவன்கூடக் காலமெல்லாம் எப்படிக் காலந்தள்றது? அவன் நெனச்ச மாதிரியே நான் போறேன் எங்கப்பன் விட்டுக்குன்னு புறப்பட்டுட்டா.

போடீ போ நான் இல்லாத நேரத்துல தங்கச் சங்கிலியையும் அவுத்திட்டுப் போயிட்டான் ஒங்கப்பன்.

வந்தா வைர மோதிரத்தோட வா இல்ல வளவிக்காரன் வீட்லயே விழுந்து சா.

அன்னைக்கி வந்தவதான் அவ.

ஒரு மாசம் கழிச்சு இன்னைக்குத் தான் வந்திருக்கான் இவன்.

கறி கெடைக்கலேன்னா நாக்கக் கடிச்சுத் திங்கிற மாப்பிள்ளைக்கு எலும்பாச்சும் போடனும்ன்னு அம்மாபட்டிக் கறிக் கடையில கடன் சொல்லி ஆட்டுத் தலையும் எலும்புக் கறியும் வாங்கி ரத்தம் சொட்டச் சொட்ட மஞ்சப் பையில புடிச்சுட்டு வந்தாரு சுப்பஞ் செட்டியாரு.



தலைக்கறி வறுத்து எலும்புக் கொழம்பு [illegible] ஒரு முங்கு முங்கு கொழம்பு வைச்சுக் குடுக்கவும் சட்டி [illegible] நான் முத்துக்காமு.

யிலருந்த மொத்தச் சோத்தையும் தட்டுல கவுத்து சோறு தெரியாமக்

அந்த வீட்ல இன்னம் ரெண்டு எள உசுரும் ஒரு கெழட்டு உசுரும் கெடக்கேன்னு நெஞ்சுல ஒரு ஓரத்துலகூட நெனைக்காம எலும்புக்குள்ள இருக்கிற வெந்த ரத்தம் வெளிய வரட்டுமேன்னு அத வாயில வச்சு உறியோ உறின்னு உறியிறான்.

உஸ்ஸு உஸ்ஸுன்னு இருந்தாத்தானே அது சுப்பஞ்செட்டியாருகிட்டயிருந்து வைர மோதிரம் மாதிரி வரவே மாட்டேங்குது.

ரெண்டு கன்னமும் உப்ப உப்ப சோத்த அள்ளி வாயில அடைச்சுக்கிட்டுக் கேக்குறான்.

நல்ல சாப்பாடு சாப்பிட்டு நாளாச்சு. சொல்லுங்க மாமு. எப்ப அனுப்பப் போறிங்க எங்கூட எம் பொண்டாட்டிய?

வந்தா இப்பக்கூடக் கூட்டிட்டுப் போங்க மாப்ள.

அது கழுதை வந்திரும்.

தரையில தவ்வுற மீனு தண்ணிக்கு வான்னா வாராமலா போகும்.

வரவேண்டியது வருதாங்கிறேன். சாப்பாட்டுக்குள்ள இருந்த எச்சிக்கைய வெளியில எடுத்து மோதிர வெரல மட்டும் ஒரு ஆட்டு ஆட்டுறான்.

மாப்பிள ஒங்களுக்கு நான் கடன் பட்ருக்கேன் இல்லேங்கல.

வளவி ஏவாரம் படுத்திருச்சு வளஞ்சு போச்சு முதுகு.

வாழ்ந்த பொண்ணு வாழாவெட்டியா இருக்கா. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சரசாலை குருவிக்காடு பிரதேசத்திலுள்ள

## கண்டல், கண்டல்சார்ந்த மருத்துவ தாவரங்களின் பரம்பலும் பயன்களும்

சூழலிற்கு சூழல், பல்வேறு வகையான கண்டல் தாவர இனங்கள் மாறுபட்ட வகையில் காணப்படுகின்றன. உலர் வலய கண்டற் சூழலில் வளர்கின்ற கண்டல் தாவர இனங்கள் அநேகமாக ஈரவலய கண்டற்சூழலில் வளர்வதில்லை. கண்டல் தாவரங்கள் அடர்த்தியாக செழித்து வளர்ந்து கண்டல்களையும் உருவாக்குகின்றது. சரசாலை குருவிக்காடு பிரதேசத்தில் பல முக்கியமான கண்டல், கண்டல் சார்ந்த மருத்துவ தாவரங்கள் பரம்பிக் காணப்படுகின்றன.

கண்டல் தாவரங்கள் முழுவதுமாக நீரிலோ அல்லது நிலத்திலோ வளர்வதில்லை. கடலும் நிலமும் சந்திக்கும் சேற்று நிலப்பரப்பில் இவை அதிகமாக வளரும். அத்துடன் கண்டற்சூழலை அண்டியதாக இன்னும் பலவகையான மருத்துவத்தாவரங்கள் வளர்கின்றன. இலைகளும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவை.

கண்டல் தாவரங்களில் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து காணப்படும் மிண்டி வேர்கள் மற்றும் தாங்கும் வேர்கள் செறிந்து காணப்படும் மூச்சு வேர்த்தொகுதிகள் என்பவற்றினால் பற்றிக் கொள்ளப்படும். உக்கல், அடையல் மற்றும் கண்டல் தாவரக்கழிவுகள் போன்ற இதர சேதனப் பொருட்கள் அனைத்தும் உவர் நீரில் அழுகி மக்கிப் போவதன் காரணமான இன்னும் கண்டற் சூழல் மண்தொகுதி வளமாக்கப்பட்டு அதன் வளரும் மருத்துவத் தாவரங்களும் மருத்துவக் குணங்கள் நிறைந்தவையாகக் காணப்படுகின்றன. சரசாலைப்பிரதேசத்தில் காணப்பட்ட கண்டல் தாவரங்களாக,

### கழுதைமுள்ளி

தாவரவியற் பெயர்- Acanthus illicifolius இதனுடைய இலை, வேர், இளம்தண்டுகள் மருத்துவ குணமில்லை.

இதனுடைய இளம்தண்டு களையும் இலையையும் வெளிப்பிரயோகமான விஷக்கடிக்குப் பயன்படுத்தலாம். இதனுடைய வேரின் குடி நீரை (30 மில்லி) வெள்ளைசாய்தல், இருமல், ஆஸ்துமா போன்ற நிலைமைகளில் பயன்படுத்தலாம்.

இதனுடைய வேரில் 2 கிராம் எடுத்து 200 மில்லி பசுவின் பாலின் போட்டு கொதிக்க வைத்து குடிக்க



தாதுக்கள் பலப்படும். பசியின்மைக்கு இதனுடைய குடிநீருடன் சீரகம் சேர்த்து பயன்படுத்தலாம்.

### தில்லை

தாவரவியற் பெயர்: Excoecaria



agallocha இது நஞ்சியல் தாவரமாகும். இதனுடைய பாலை வெளிப்பிரயோக மாறாத புண்கள், புரையோடிய புண்களிற்கு பயன்படுத்தப்படுகிறது. அல்லது இதனுடைய இலை குடிநீரால் ஆறாதபுண்களை கழுவலாம்.

### தெகிழ்

Derris ellaptica: இதன்பட்டைக்கு மருத்துவ குணமுண்டு இது மரக்கொடி வகையாகும். நீரி ழிவு, மூட்டு வாதத்தில் பயன்படுத்தப்படுகிறது.

### காட்டு வாதுமை/ கொட்டாங்கச்சி

Terminalia catappa: இதனுடைய விதைப்பருப்பு தாது புஷ்டியையும் நரம்பு மண்டலத்தையும் பலப்படுத்தக் கூடியதாகும். இது கண்டல் சார்ந்த மூலிமரமாகும்.

### கழற்சி

தாவரவியற் பெயர்- Caesal piniabonduc இதனுடைய விதைகள் மருத்துவ குணமில்லை. இதனுடைய உள்விதைப்பருப்புப் பொடி 2 கிராம் அளவு காலை, மாலை எடுக்க ஒவ்வாமையால்ஏற்படும்அழற்சிநீங்கும். இதுவும் கண்டல் சார்ந்த தாவரமாகும்

### ஈச்சை

தாவரவியற் பெயர்-Phoenix pusilla:இதனுடைய பழங்களை வாயிலிட்டு சுவைத்தால் வாய்ப்புண், வாய் நாற்றம் நீங்கும். இதனுடைய பழங்கள் குளிர்ச்சியைக் கொடுக்கும். ஈச்சங்குருத்து குடற்புழுக்களை அழிக்கும். இதனுடைய புளிக்காத கள்ளை 30-60 மில்லி உட்கொண்டு வர உடல் எரிவு, சிறுநீர் எரிச்சல் நீங்கும். ஈச்சம் பழத்தில் இரும்புச் சத்தும் உண்டு.

### சங்கன்குப்பி

தாவரவியற் பெயர்- Clerodendrum inerme: இதனுடைய வேரைச் சேகரித்து சிறுதுண்டுகளாக்கி பொடித்து அரித்து 1-2 கிராம் அளவு தைரொக்சின் குறைபாட்டிற்கு பயன்படுத்தலாம். இதனுடைய வேரை தேங்காயெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வாதநோயிற்கு பயன்படுத்தலாம். இதனுடைய வேரை சிறிது துண்டுகளாக்கி குடிநீராக்கி காய்ச்சலுக்கும் பயன்படுத்தலாம். இதனுடைய இலை, வேர்ச்சாறு 10 மில்லி உள்ளுக்கு கொடுக்க மேகரோகங்களையும் கட்டுப்படுத்தும். இதுவும் ஓர் கண்டல் சார்ந்த தாவரமாகும்.

### பூவரசு

தாவரவியற் பெயர்: Thesposia populnea :இதனுடைய இலை, பூ, காய், விதை, பட்டை, வேர் அனைத்தும் மருத்துவ குணமில்லை. ஆனால் தற்போது இம்மரத்தின் பரம்பல் மிக அருகி, அழிந்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. இதுவும் கண்டல் சார்ந்த தாவரமாகும். இந்தத் தாவரமும் தற்போது நாம் பேணிப் பாதுகாக்க வேண்டிய தாவரங்களுள் அடங்குகின்றன.

இதன் இலைகளை வெதுப்பி வீக்கங்களிற்கு வைத்துக் கட்டலாம்.

இதன் பூவை அரைத்து சங்குகளுக்கு பூசி வர அலை ஆறும்.

காயிலிருநது கசியும் ஒருவித மஞ்சள் நிறப்பாலை தோலிலுண்டாகும் நோய்களிற்கு பூசலாம். காயையும் பட்டையையும் எண்ணெய் முறைகளில் சேர்த்துக் காய்ச்சியும் மேற் கூறிய நோய்களிற்கு வழங்கலாம்.

முதிர்ந்த பட்டையின் சதையைச் சிதைத்துப் பிழிந்த சாற்றை வாயிலிட்டுக் கொப்பளித்துக் கொண்டு வரை வாய்ப்புண் வாயிலுண்டாகும் கொப்பளங்கள் நீங்கும்.

### மருதோன்றி

Botanical Name- Lawsonia inermis:இதனுடைய இலை, பூ, வித்து, பட்டை அனைத்தும் மருத்துவ குணமிக்கவை. நகப்புண், புண், சுளுக்கு இவைகட்கு இலையை வைத்துக் கட்டலாம். இதன் இலைகளை அரைத்து வைத்துக் கட்ட கண்வேக்காடு குணப்படும். இதன் ஊறல் குடிநீரால் சுளுக்கு, தாபிதங்களுக்கு ஒற்றடம் கொடுக்கலாம்.

இதன் இலைகளை பனிநீரால் ஓர் இரவு முழுவதும் ஊறவைத்து மறுநாட்கள் வரை தொடர்ந்து 60 மில்லி குடித்துவர தோல் நோய்களில் ஏற்படும் படை,சொறி இவைகள் குணமாகும். மருதோன்றியும் கண்டல்சார்ந்த தாவரமாகும்.

### முன்னை

Premna Obtusifolia:இந்தத் தாவரத்தின் இலை,வேர் ஆகியன வயிற்றுப்பொருமல், வயிற் றுவலிக்கு பயன்படுத்தப்படுகின்றது. இதன் இலைகளை, சொதி வைத் தும் சாப்பிடலாம்.கண்டல், கண்டல் சார்ந்த தாவ



ரங்களை உணவாகப் பயன்படுத்துல் ஏனைய மூலிகைகளை விட மருத்துவகுணமிக்கதாகும். கண்டல் மண் சேதன உரமேற்றப்பட்ட வளமான மண்ணாகும். இதில் சோடியம் சத்துக்களும்குறைவாககாணப்படும்.

உதாரணமாக கண்டல் தாவரங்களின் இலைகள் சில சிவப்பு நிறமாகக் காணப்படும். ஏனெனில் உவர் நீரை உறிஞ்சி எடுத்து அதிலுள்ள நன்னீரை வளர்ச்சிக்காக பெற்றுக் கொண்டு உப்பை இலைகளில் காணப்படும் சேமிப்பிழையங்களில் சேமித்து வைத்துக்கொள்கிறது. சேமிப்பிழையங்கள் உப்பால் நிரம்பியதும் இலைகள் சிவப்பு நிறமுடையனவாக மாற்றமடைந்து புதிய இலைகளை தோற்றுவிப்பதற்காக வேண்டி அவை உதிர்ந்து விடுகின்றன.

கண்டல் தாவரங்கள் இனவிருத்திக் காலத்திலும் இடர்பாடுகளை சந்திக்க வேண்டியுள்ளது.

வித்துகள் முளைப்பதற்கு நன்னீர் தேவையான போதும் சூழலில் உவர்நீர் காணப்படுகின்றன, நிலத்தில் ஒட் சிசன் வாயு குறைந்து காணப்படுவது,உறுதியற்ற சேற்று நிலம் போன்றவற்றால் வித்துக்கள் முளைத்தல் கடினம். இவற்றை எதிர் கொண்டு இவைகள் வளர்வதால் இத்தாவரங் களின் மருத்துவப் பண்புகளும் அதிகமாகும்.

ஆகவே எமது பிரதேசத்திலுள்ள கண்டல்,கண்டல் சார்ந்த இடங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவையாகவுள்ளன. கண்டற்சூழலை அண்டியதாக வளரும் கண்டல் சார்ந்த தாவரங்கள் கண்டற்சூழல் அல்லாத பிற சூழல்களிலும் செழித்து வளர்வனவாக உள்ளன. எனினும் இயற்கை வாழிடமான கண்டலை அண்டிய பகுதிகளில் வளரும் போது மருத்துவப் பண்புகள் அதிகரித்துக் காணப்படுவது குறிப்பிடப்படவேண்டிய விடயமாகும்.

கண்டல், கண்டல் சார்ந்த மருத்துவத்தாவரங்கள் இவற்றை கரையோரம் சார்ந்த வளிமண்டலம் வெப்பமடையாமல் தடுப்பதோடு சுற்றுச் சூழலிற்கு பசுமையையும், குளிர்ச்சியையும் வழங்குகின்றன. சூழலிற்கு சூழல், நாட்டுக்கு நாடு கண்டல் தாவரங்களின் பரம்பல் வேறுபட்டுக் காணப்படுகின்றன. எனவே எமது பிரதேச சீதோஷ்ண நிலைமைக்கேற்ப பரம்பிக் காணப்படும் சரசாலை போன்ற இடங்களின் கண்டல் பிரதேசங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவையாகின்றன. அத்துடன் இப் பிரதேசத்தில் கண்டல், கண்டல் சார்ந்த தாவரங்கள் செடி வகையாகவும் பெருஞ் செடி, மர இனங்களாகவும் வளர்ந்து காணப்படுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

குறிப்பு- கண்டல், கண்டல் சார்ந்த மூலிகை இனங்களை உப உணவுகளாகவோ, இயற்கை உணவு முறைகளாக பயன்படுத்தும் போது மற்ற பிரதேசங்களில் வளரும் அதே தாவரங்களை விட மருத்துவக் குணங்கள் ஊட்டச்சத்துக்கள் நிறைந்தவையாக காணப்படுவதும் குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மிதக்கும் ஆயுதகளஞ்சியசாலை வழக்கு

# ஒத்திவைப்பு

**காலி துறைமுகத்தில் வைத்து கைப்பற்றப்பட்ட மிதக்கும் ஆயுத களஞ்சியசாலை தொடர்பான வழக்கு நாளை 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.**

இந்த வழக்கு கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பிலப்பிட்டிய முன்னிலையில் கடந்த 2ஆம் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது அவர், இந்த வழக்கை நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரையிலும் ஒத்திவைத்திருந்தார்.

இந்நிலையில், அவ்வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது வழக்கு விசாரணையை நாளை வரையும் ஒத்திவைத்தார்.

இதேவேளை, காலி துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டிருந்த மிதக்கும் ஆயுத களஞ்சியசாலை விவகாரம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கடற்படை முன்னாள் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க, மஞ்சுள குமார யாப்பா மற்றும் கருணாரத்ன பண்டார ஆகிய நால்வரும் வெளி நாடுகளுக்கு செல்வதற்கு நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இநத களஞ்சியசாலை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து ஆலோசனைகளை பெற்று நீதிமன்றுக்கு முன்வைக்குமாறும் நீதவான், குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ரயிலில் யாசகர்களை கைது செய்ய நடவடிக்கை

ரயில்களில் யாசகம் செய்யும் (பிச்சைக்காரர்களை) கைது செய்வதற்கான நடவடிக்கைகளை ரயில்வே திணைக்களம் முன்னெடுத்துள்ளதாக திணைக்களத்தின் திட்டமிடல் பணிப்பாளர் விஜய சமரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

நெடுந்தூர சேவைகளில் ஈடுபடும் ரயில்களில் பயணிக்கும் பயணிகளிடமிருந்து கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக அவர்மேலும தெரிவித்துள்ளார்.

ரயிலில் யாசகம் கேட்போரினால் தாங்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் பயணிகள் முறைப்பாடு செய்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ரயில்வே பாதுகாப்பு பிரிவினரையே யாசகம் கேட்பவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த விருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 | 60-80 | 70 |
| தக்காளி | 20 | 50 | 40 | 40-50 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 50 |
| கோவா | 30 | 40 | 50 | 50 | 40 |
| கரட் | 200 | 80 | 120 | 100-120 | 120 |
| பூசணி | 100 | 60 | 80 | 60 | 60 |
| புடோல் | 40 | 50 | 80 | 40 | 50 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 50 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80-100 | 60-80 | 40 |
| பெரிய வெங்காயம் | 100 | 90 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 80 | 100 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 100 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | — | 50 | 70 | 50 | 50 |
| பயற்றங்காய் | 100 | 70 | 100 | 60-80 | 40 |
| லீக்ஸ் | 200 | 160 | 200 | 150-160 | 150 |
| பீற்றூட் | 40 | 40 | 80 | 40 | 40 |
| கறிமிளகாய் | 300 | 140 | 120 | 140-200 | 120 |
| முருங்கைக்காய் | 300 | 30 | 400 | 150-200 | 400 |
| போஞ்சி | — | 100 | 160 | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 80 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 20 | 40 | 40 | 50 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-70 | 50 | 40-50 | 60 | 60 |
| இராசவள்ளி | 150 | 120 | 100 | 100 | 100 |
| வெங்காயப்பூ | 100 | 100 | 160 | — | 120 |

## மிதக்கும் ஆயுத களஞ்சியம் தொடர்பான விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு

### சோமதிலக்க திஸாநாயக்க தெரிவிப்பு

மிதக்கும் ஆயுதக் களஞ்சியம் தொடர்பான விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் என முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரால் சோமதிலக்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆயுதக் களஞ்சியம் இயங்கிய காலப்பகுதியில் நானே கடற்படைத் தளபதியாக செயற்பட்டேன்.

எனவே விசாரணைகளுக்கு முழு அளவில் மெய்யான ஒத்துழைப்பு வழங்கத் தயார்.

அண்மையில்பெரும்சர்ச்சையை ஏற்படுத்திய மிதக்கும் ஆயுதக் கப்பல் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவே தென்படுகின்றது.

இந்த மிதக்கும் ஆயுதக் களஞ்சியத்துடன் பாதுகாப்பு அமைச்சு, இலங்கைக் கடற்படை, அவன்ட் கார்ட் தனியார் நிறுவனம், ரக்னா லங்கா தனியார் நிறுவனம் ஆகியன நேரடியாக தொடர்புபட்டுள்ளன.

இந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட காலத்தில் நான் கடற்படைத் தளபதியாக கடமையாற்றிய காரணத்தினால், விசாரணைகளின் போது அடிக்கடி பதில்களை அளிக்க வேண்டியிருக்கும்.

எனவே நான் நாட்டிலேயே தங்கியிருக்க வேண்டியது அவசியமாகின்றது.


நாட்டின் சட்ட திட்டங்களுக்கு மதிப்பளித்து விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என முன்னாள் கடற்படைத் தளபதி சோமதிலக்க திஸாநாயக்க ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளார். (இ-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 307

இலக்கியா நகுலன்

கோபம் என்பது பிறர் செய்யும் தவறுக்கு நீயே உனக்கு கொடுத்துக் கொள்ளும் தண்டனை...

ருக்சி சிவகுமார்




லக்சி லக்சிகா




பிரவின் தாஸ்




சர்மி சர்மிளா



தர்சிகா தாசன்








நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆட்சி மாற்றத்தின் பின் சீனா எதிர்கொள்ளும் சவால்கள்...!



உலகின் உண்மையான அரசியலின் பிரகாரம், தனது மூலோபாய வெளிக்குள் சீனா உள்நுழைவதானது இந்திய மாக்கடல் பிராந்தியத்திலும் இலங்கையிலும் இந்தியா தனது மேலாதிக்கத்தை இழப்பதற்கு வழிவகுக்கும் என இந்தியா கருதுகிறது.

**இவ்வாறு eurasiareview.com இணையத்தில் கேணல் ஹரிகரன் எழுதியுள்ள ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.**

ஜனவரி 2015 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிட்ட எதிரணியின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை இலங்கை வாழ் மக்கள் தமது புதிய ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தன் பின்னர், இலங்கை மீது மேலும் நலன்களைப் பெற்றுக கொள்வதற்கான சீனாவின் இலக்கில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

உண்மையில் இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் சீனாவுக்கும் நன்கு பரீட்சயம் உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளாக மைத்திரிபால சிறிசேன இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியின் நெருங்கிய நண்பராகவும் இவரது அமைச்சரவையின் மூத்த அமைச்சராகவும் கடமையாற்றியிருந்தார்.

ஈழப்போர் இடம்பெற்ற காலப் பகுதியில் மகிந்த ராஜபக்ச நாட்டில் இல்லாத வேளைகளில் மைத்திரிபால சிறிசேன உயர் அதிகாரம் மிக்க பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

எதுஎவ்வாறிருப்பினும், ராஜபக்சவுடனான சீனாவின் தனிப்பட்ட உறவானது ராஜபக்சவைத் தனக்கேற்றவாறு மாற்றி இவரது அதிகார ஆட்சி முறைமை மூலம் நலன்களை பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டிருந்தது. ராஜபக்சவும் அவரது இரண்டு சகோதரர்களும் அரசாங்கங்கத்தைக் கட்டுப்படுத்தினர்.

அத்துடன் இவர்கள் நிதி அபிவருத்தி, உள்ளகப் பாதுகாப்பு, பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருதகதி போன்ற முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களையும் தம்வசம் வைத்திருந்ததால் சீனா இதன் மூலம் இந்திய மாக்கடல் பிராந்தியததிலும் தென்னாசியாவிலும் தனது செல்வாக்கை அதிகரித்து தனது மூலோபாய நிகழ்ச்சி நிரலை அடைந்து கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டது.

ஆகவே, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற ஏனைய நாடுகளைப் போலல்லாது சிறிசேனவின் ஆட்சியில் சீனா பல்வேறு பிரசசினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும்.

சிறிசேனவுடனான உறவை நெருக்கமாக்கி இழந்து போகும் ஆபத்திலுள்ள தனது மூலோபாய நலன்களை அடைந்து கொள்வது உட்பட குறுகியகால நோக்கங்கள் பலவற்றை சீனா கொண்டுள்ளது.

நீண்டகால அடிப்படையில் நோக்கில், ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் முறிந்து போன இந்தியாவுடனான இலங்கையின் உறவை மளவும் கட்டியெழுப்பி இந்தியாவுடன் சமநிலை உறவைக் கட்டியெழுப்புவதற்கு சிறிசேன அரசாங்கம் விருப்பங் கொண்டுள்ளதால், இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் மூலோபாய பாதுகாப்புத் திட்டங்கள் தடைப்படுவதுடன், 21 ஆம் நூற்றாண்டுக்கான கரையோர பட்டுப் பாதைத் திட்டத்தை சுமூகமான முறையில் அமுலாக்குவதும் பாதிப்பிற்கு உள்ளாகலாம் என சீனா கவலைப்படும்.

மத்தல ராஜபக்ச அனைத்துலக விமான நிலையம் (210 மில்லியன் டொலர்கள்), அம்பாந்தோட்டை துறைமுகத் திட்டம் -01 (361 மில்லியன் டொலர்கள்) கொழும்பு-கட்டுநாயக்க அதிவேகப்பாதை (350 மில்லியன் டொலர்) மற்றும் கொழுமபு துறைமுக கொள்கலன் முனைய விரிவாக்கம் போன்ற ராஜபக்சவின் பல்வேறு பாரிய திட்டங்களுக்கு சீனா தனது நிதியை வழங்கி நிர்மாணித்துள்ளது.

இத்திட்டங்கள் தொடர்பான போதியளவு தெளிவான விளக்கங்களை நாடாளுமன்றில் வழங்காது மிகத் துரிதமாக இதற்கான அனுமதியை ராஜபக்ச வழங்கியிருந்தார். இத்திட்டங்களை அமுல்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடரபாக எ்திர்க்கட்சிகள் வெளிப்படுத்த முனைந்தபோது ஆளுங் கட்சிக்கு ஆதரவான கூலிப்படைகளால் இவர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரையில் எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளில் இதுவும் முதன்மையானதாகும்.

இதற்கும் மேலாக, இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் உண்மையென நிரூபிக்கப்பட்டிருந்தால் இலங்கையுடன் 2014 இல் சீனாவால் மேற்கொள்ளப்பட்ட சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை அமுல்படுத்துவதில் பாதிப்பு ஏற்பட்டிருக்கும்.

சீனா தனது வெளியுறவுக் கோட்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்காக இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் எதேச்சதிகார ஆட்சி, ஆட்சிப் பிறழ்வுகள், ஊழல் மற்றும் அதிகார மீறல் குற்றச்சாட்டுக்கள் போன்றவற்றை சீனா அசட்டை செய்து ராஜபக்சவுடனான நட்பை மேலும் நெருக்கமாக்கியது.

சிறிசேன போன்ற மூத்த தலைவர்கள் சிலரை ராஜபக்ச ஓரங்கட்டியதைக்கூட சீனா கவனத்திற கொள்ளவில்லை. இதுவே ராஜபக்ச மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் பதவியேற்பதைத் தடுப்பதற்கான ஒரு சவாலாகக் கொள்ளப்பட்டது.

சீனாவுடன் தொடர்புபட்ட இவ்வாறான பிரச்சினைகள் சிறிசேனவினதும், முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ராஜபகசவின் ஐக்கிய மக்கள் முன்னணியிலிருந்து பிரிந்து சென்ற சிறிய கட்சிகளை உள்ளடக்கிய சிறிசேனவின் ஆதரவாளர்களினதும் தேர்தல் பரப்புரையின் முக்கிய அம்சமாகக் காணப்பட்டன.

தேர்தல் முடிந்த கையோடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 100 நாள் செயற்திட்டம் ஒன்றை அமுலாக்குவதற்கான பணியை ஆரம்பித்தார். நாடாளுமன்றம் மற்றும் பிரதமருக்கு நிறைவேற்று ஜனாதிபதி எவ்வாறான அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்தல் தொடர்பான பொறுப்புக்களை விரிவாக்குதலை நோக்காகக் கொண்டுள்ளது.

100 நாள் செயற்திட்டத்தின் ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் உதவியுடன் அரசியல் யாப்பில் கட்டமைப்பு ரீதியான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும், நல்லாட்சியை மேம்பாடுத்துவதற்கான முறைமையை அறிமுகப் படுத்துவதற்கும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

ஜனாதிபதி ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் ஊழல் மற்றும் ஆட்சி மீறல்களைப் புரிந்தவர்களை அடையாளம் காண்பதற்கான விசாரணைகளை தற்போதைய புதிய அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

சிறிசேனவின் 'சுத்திகரித்தல் செயன்முறையின்' ஒரு பகுதியாக சீனாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பாரிய திட்டங்களும் மிகவும் நுணுக்கமாக ஆராயப்படுகிறது. சீன நிறுவனம் ஒன்றால் அமுலாக்கப்படும் மிகப் பாரிய திட்டமான 1337 மில்லியன் டொலர் பெறுமதியான கொழும்பு துறைமுக நகரத் திட்டமும் இதற்குள் உள்ளடங்குகிறது.

காலிமுகத்திடலிலிருந்து 575 ஏக்கருக்கும் மேற்பட்ட பரப்பளவு இத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை மேற்கொள்வதால் ஏற்படக் கூடிய சூழல் பிரச்சினைகள் தொடர்பாகவும் இது தொடர்பான தெளிவான விளக்கமின்மையும் இத்திட்டத்தை மீளவும் ஆராய வேண்டும் என தற்போதைய அரசாங்கம் கருதுகிறது.

இத்திட்டத்தில் இழைக்கப்பட்ட பல்வேறு ஊழல் மோசடிகள் மற்றும் இழிவான செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களும் சீனாவிற்கு எரிச்சலை ஏற்படுத்தியுள்ளது.

மேற்குலகத்தின் பரப்புரைகளே சீனாவின் வெளியுறவுத் திட்டம் தோல்வியுறக் காரணம். சீனாவிலிருந்து வெளியாகும் Global Times ஊடகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா அதிகம் பயன்படுததும் கொழும்புத் துறைமுகத்திற்கு அடுத்ததாக உள்ள சுதந்திர வலயத்திற்குச் சொந்தமான 20 ஏக்கரை சீனா தனக்கு உடமையாக்குவதன் மூலம் தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் என இந்தியா கருதுகிறது. எது எவ்வாறிருப்பினும், இத்திட்டத்திற்காக சீனா சேதக் கட்டுப்பாட்டு அளவீடுகளை மேற்கொண்டுள்ளதுடன் புதிய அரசாங்கத்துடன் நட்புறவைப பேணவும் முயற்சித்துள்ளது.

சீனாவின் புத்தாண்டு தினத்தை வாழ்த்தி இலங்கையின் புதிய ஜனாதிபதி வழங்கிய வாழ்த்துச் செய்தியில் சீனாவுடனான உறவைக் கட்டியெழுப்புதற்கான தனது ஈடுபாட்டைக் குறிப்பிட்டிருந்த செய்தியை சீன ஊடகங்கள் முதன்மைப்படுத்தியுள்ளன.

இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சீனாவுக்கு வருமாறு சீன ஜனாதிபதி அழைப்பு விடுத்த நிலையில் இந்த அழைப்பிற்கு மேலும் வலுச்சேர்க்கும் முகமாக சீனாவின் மூத்த இராஜதந்திரியும் வெளிவிவகார பிரதி அமைச்சருமான லியு ஜியான்சோ கொழும்பிற்கு வந்திருந்தார். சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் சமரவீர 2015 பெப்ரவரி இறுதியில் சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்ட போது மார்ச் மாதத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவுக்கான பயணத்தை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டுள்ளார்.

எவ்வாறெனினும், கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டம் உட்பட சீன ஆதரவுத் திட்டங்கள் இலங்கையில் தொடர்வதற்கான தனது விருப்பத்தை தற்போதைய அரசாங்கம் மீளவும் உத்தரவாதப் படுத்தியுள்ளது. (தொடரும்)

-நித்யபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த இடத்தில் பிரதமர் ரணிலா?

## ஏற்கவே முடியாது என்கிறார் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)



**ஆட்சி மாற்றம் என்ற பெயரில் சர்வதேச சதித்திட்டத்தினை அரங்கேற்றம் செய்யவே தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது எனவும் நிலையான அரசாங்கம் இல்லாத நாடாக இலங்கை மாறிவிட்டது எனவும் குற்றம் சுமத்தும் முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மகிந்த ராஜபக்ஷவின் இடத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் அரசியலுக்கு அழைத்துக் கொண்டிருக்கும் நிலையில் பொதுத் தேர்தலில் எவ்வாறு போட்டியிடப் போகின்றீர்கள் என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியுடன் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் போட்டியிட வேண்டுமென்பதே எமது நோக்கம் அதற்கான முயற்சிகளையே இப்போது பங்காளிக்கட்சிகள் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொண்டு வருகின்றோம். எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அனைவரும்ஒன்றிணையவேண்டும். மீண்டும் எமது ஆட்சியினை தக்க வைக்க வேண்டும்.

எமது புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக இருப்பதும் முன்னாள் ஜனாதிபதி அதே கட்சியின் சிரேஷ்ட உறுப்பினராக இருப்பதும் கட்சியினை பலப்படுத்தி பாதுகாக்கும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதே போல் பாராளுமன்ற அதிகாரமும் எம்மிடம் வரவேண்டும். அதற்கு மிகச் சரியான நபர் எமது தலைவர் மகிந்த ராஜபக்ஷவே. எனவே அடுத்த பிரதமராக மகிந்த ராஜபக்ஷ பதவியேற்று மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நல்லாட்சியினை உருவாக்க வேண்டும்.

மேலும் நாட்டினை ஒன்றுபடுத்தி தீவிரவாதத்தினையும் பிரிவினைவாதத்தினையும் முற்றாக அழித்த எமது தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்கள் இன்று சிதறடிக்கப்பட்டு பிரிவினைவாதத்திற்கு ஏற்ற அரசாங்கம் அடித்தளம் போட்டு வருகின்றது. அவசியமற்ற தவறான எண்ணத்தினை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டு சர்வதேசத்தின் சதித்திட்ட எண்ணங்களை பூர்த்தி செய்யக் கூடிய தடைகளற்ற தேசிய அரசாங்கத்தினை இவர்கள் உருவாக்கி விட்டனர்.

மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரங்கள் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடமும் கையளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவரும் ஒன்றிணைந்து பிரிவினைவாதத்திற்கு ஏற்றதும் புலிகளுக்கு ஏற்றதுமான ஈழக்கொள்கையினை உறுதியாக நிலை நாட்டி வருகின்றனர். இதற்கு இனி ஒருபோதும் இடமளிக்க முடியாது. எனவே பிரிவினையை தோற்கடிக்க வேண்டுமாயின் சிங்கள தேசமொன்றினை உருவாக்க மகிந்த ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு காலெடுத்து வைக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பரிந்துரை செய்யாதவர்களையும் அமைச்சு இடமாற்றம் செய்துள்ளது

## பொலிஸ்மா அதிபர் குற்றச்சாட்டு



பரிந்துரை செய்யாதவர்களையும் அமைச்சு இடமாற்றம் செய்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் குற்றம் சுமத்தியுள்ளார்.

இடமாற்றம் செய்யுமாறு தாம் பரிந்துரை செய்யாத பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்களையும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இடமாற்றம் செய்துள்ளதாகக் தெரிவித்தார்.

அண்மையில் உயர் பொலிஸ் அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இந்த இடமாற்றங்கள் தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று பொலிஸ்மா அதிபரிடம் கேள்வி எழுப்பியதற்கு பதிலளித்த போது இதனைத் தெரிவித்துள்ளார்.

இடமாற்றம் தொடர்பில் தாம் வழங்கும் பரிந்துரைகளில் பாதி அமுல்படுத்தப்படுகின்றது. மிகுதி அமுல்படுத்தப்படுவதில்லை.

எந்த வகையிலும் பரிந்துரை செய்யாத ஒரு தொகுதி அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு எவ்வித பதில்களையும் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவராக பத்மநாதன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு அதிகார சபையின் புதிய தலைவராக நமசிவாயம் பத்மநாதன் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

1967 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்து கொண்ட இவர், வடகிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளராகவும் திறைசேரியின் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளராகவும் அரச நிதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் விஞ்ஞான தொழில் நுட்ப அமைச்சு மற்றும் வனவள, சுற்றாடல் அமைச்சின் செயலாளராகவும் திறைசேரி பிரதிச் செயலாளராகவும் பதவி வகித்துள்ளதுடன் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் ஐக்கிய நாடுகளின் வதிவிடம் தொடர்பான அமைப்பில் நிபுணராகவும் கடமைபுரிந்துள்ளார்.

இந்நிலையில் இவர் புனர்வாழ்வு அதிகார சபையின் புதிய தலைவ ராக, மீள்குடியேற்ற புனரமைப்பு மற்றும் இந்து கலாசார அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இன்று ஒரு தகவல்

## விநாயகர்

விநாயகப் பெருமான் அரச மரத்துக்குக்கீழே அமர்ந்திருப்பதற்கு ஆன்மீக காரணங்கள் இருக்கின்றன. அதைவிட ஒரு முக்கிய அறிவியல் காரணங்களும் இருக்கென்று ஓர் ஆன்மீகப் பெரியவர் சொன்னார். அது என்னவென்று கேட்டபோது அதற்கு அவர் ஒரு விளக்கம் சொல்கிறார்.

அரச மரத்திற்கு ஒரு தனிச் சிறப்புண்டு. அதனால்தான் பகவத் கீதையில் கண்ணபிரான் சொல்லியிருக்கின்றார் மரங்களில் நான் அரச மரமாக இருக்கின்றேன் என்று . அதுமட்டுமல்ல புத்தருக்கு போதனை வந்தது போதிமரத்தடியில். அது இங்கே எங்களுடைய தமிழ் நாட்டில் அரச மரம்தான். அதனால் ஒரு தனிச்சிறப்பு அதற்கு இருக்கென்று சொன்னார்.

அந்தச் சிறப்பு என்னவென்று கேட்டால் நாங்கள் வெளிவிடுகின்ற காபனீரொட்சைட்டு என்ற அசுத்தக் காற்றை கிரகித்துக்கொண்டு மீண்டும் நாங்கள் சுவாசிக்கின்ற பிராணவாயு என்கின்ற சுத்தமான காற்றை கொடுக்கின்றது தாவரங்கள், மரங்கள்தான். இந்தக் காரியத்தை ஒளிச் சேர்க்கையின்போது அதெல்லாம் செய்கிறது அறிவியல். மரங்கள் வெளிவிடுகின்ற பிராணவாயு, மரத்துக்கு மரம் அளவில் வேறுபடுகின்றதாம். அந்த அளவில்தான் அரசமரம் உச்சத்தில் இருக்கின்றது. அதிகபட்சமான பிராணவாயுவை அது வெளிவிடுகிறதாம். அதைப் போலவே வேப்பமரமும் வெளிவிடுகிறதாம்.

அதனால்தான் எங்களுடைய பெரியவர்கள் இரண்டையும் இணைத்து வைத்தார்கள். விநாயகப் பெருமானை சுற்றி வரும் போது பிராணவாவினுடைய அளவு அதிகமாகக் கிடைக்கும். பக்தர்களுக்கு அதனால் அதிக நன்மை கிடைக்கும் என்று சொன்னார். மரங்களிலேயே மிகக் குறைவான அளவு பிராணவாயுவை வெளிப்படுத்துகின்ற மரம் புளியமரம். புளியமரத்திற்கு கீழே பார்த்தால் 90 வீதம் காபனீரொட்டு என்கின்ற அசுத்தக் காற்றுத்தான் உலாவிக் கொண்டு இருக்குமாம். 10 வீதம் தான் அங்கே பிராணவாயு இருக்கின்றதாம். அதனால்தான் யாரும் புளியமரத்திற்குக் கீழே போக வேண்டாம், விளையாட வேண்டாமென்று பிள்ளைகளை சொல்கின்றோம். அங்கே அதிக நேரம் படுத்திருந்தால் ஒரு மந்த நிலை வந்து விடும். அதனால்தான் புளியமரத்திற்குக் கீழே ரொம்ப நேரம் இருக்கின்றதை தவிர்க்க வேண்டும். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் நிறையப் பிராணவாயு கொடுக்கக் கூடிய, அரச மரத்திற்குக் கீழே விநாயகப் பெருமான் அமர்ந்திருக்கின்றார் என்று ஒரு காரணத்தைச் சொன்னார். இன்னொரு வரலாற்று ஆசிரியர் ஒரு தகவல் சொன்னார். அதாவது இந்தியாவில் மட்டுமல்ல வெளிநாடுகளில் கூட விநாயகப் பெருமானுடைய வழிபாடு நடந்துகொண்டிருக்கின்றது. இலங்கை, திபெத், நேபாளம் இந்த மாதிரி நாடுகளிலும் வழிபாடு இருக்கின்றார்.

மங்கோலிய நாட்டில் இருக்கின்ற கணபதியை நிருத்த கணபதி என்று சொல்கிறார்கள். சீனாவில் கோட்டான் என்கின்ற இடத்தில் விநாயகருடைய திருப்பெயர் என்னவென்றால் டிரவுசர் விநாயகர். அரைக்கால் சட்டை போட்ட விநாயகராகவே அங்கே விநாயகப் பெருமான் காட்சியளிக்கின்றாராம். கம்போடியாவில் இருக்கின்ற பிள்ளையாரை வந்து பிரகணேஷ் என்று அழைக்கின்றார்களாம். ஜப்பான் நாட்டில் விநாயகரை விநாயக்ஷா என்று அழைக்கின்றார்களாம். ஷோடன் என்று சொல்கிறார்களாம்.

ஜாவா தீவில் அருள்பாலிக்கின்ற விநாயகருக்கு மொட்டை விநாயகர் என்று பெயராம். எகிப்திலேயும் விநாயகர் இருக்கின்றார். அங்கே அவருடைய திருப்பெயர் என்னவென்றால் சாமி விநாயகர். கெய்னில், குனிஸ் என்ற பெயர்களிலேயும் அங்கே விநாயகர் வழிபாடு நடக்கின்றதாம். ரோமில இருக்கின்ற விநாயகருக்கு ஜெய்ன்ஸ் என்கின்ற ஒரு பெயர் இருக்கின்றதாம். யவனத்துலயும் ஒரு விநாயகர் இருக்கிறார். டயோனீஸஸ் என்று அங்கே அவருக்குப் பெயர். கிழக்காசிய, தென் கிழக்காசிய நாடுகளிலும் ஐரோப்பிய கண்டத்திலேயும் விநாயகருடைய புகழ் பரவி இருக்கின்றதாம். இது வரலாற்று ஆசிரியர்களுடைய கணிப்பு.

இன்னொன்று அக்குபிரஷர், அக்குபஞ்சர் பார்க்கின்ற ஒருத்தர் சொன்னார், விநாயகப் பெருமானுக்கு முன்னால் நின்று நெற்றிப் பொட்டில் கைகளால் குட்டிக்கின்றோம் பார்த்தீர்களா? அக்குபிரஷர் முறையினால் அதற்கு நன்மையுண்டு. அப்படிக் குட்டும் போது சில நரம்புகள் வந்து Stimulate ஆகின்றது. அது சிந்தனையை தூண்டுகின்றது. அதனால் அந்த நன்மை அதில் இருக்கின்றதாம்.

மாத்தி குட்டிக்கின்றோம் வலது கையால் இடது புறத்திலும் இடது கையால் வலது புறத்திலும் ஏன் குட்டுகின்றோம். அப்படியென்றால், உடலின் வலது புறத்தை மூளையின் இடதுபுறம் Control செய்யுது. அதனால்தான் கைகளை மாத்தி குட்டிக்கின்றோமாம். பின்னர் பார்த்தீர்களென்றால் காதை பிடித்து தோப்புக் கரணம் போடுகின்றோமல்லவா, அதில்கூட இந்த அக்குபிரஷர் முறை இருக்கென்று சொல்கின்றார். ஒவ்வொரு ஊரிலேயும் விநாயகருக்கு ஒவ்வொரு விதமான பெயர் இருக்கென்று சொல்லிக் கொண்டு வந்தபோது பக்கத்தில் இருந்த ஒருத்தர் சொன்னார். ஐயா, விநாயகருக்கு விசா விநாயகர் என்று ஒரு பெயர் உண்டு தெரியுமா? என்று கேட்ட போது அவர் சொன்னார், மலேசியாவில் ஒரு பகுதியில் நிறைய மக்களுக்கு விசா கிடைக்காதபோது விநாயகரை வேண்டிக் கொண்டு விசாவுக்கு அப்பிளை செய்தார்களாம். உடனே அவர்களுக்கு விசா கிடைத்துவிட்டதாம் என்றார் அவர். அதனால் அவருக்கு விசா விநாயகர் என்று பெயராம். நம்பிக்கைதானே எல்லாவற்றிற்கும் அடிப்படை.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சொன்னதை செய்வாரா?



"தற்போதுள்ள எதேச்சாதிகார நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குப் பதிலாக அமைச்சரவையூடாக நாடாளுமன்றத்தோடு தொடர்புடைய நிறைவேற்று முறையொன்றை அறிமுகப்படுத்தல்" உள்ளிட்ட 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் நகலை ஜனவரி மாதம் 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக, மைத்திரிபால சிறிசேன, தேர்தல் காலத்தில் எந்த அடிப்படையில் மக்களுக்கு வாக்குறுதியளித்தார் என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது.

ஏனெனில், ஜனவரி மாதம் 21 ஆம் திகதியிலிருந்து ஒன்றரை மாதம் சென்றுள்ளபோதும் அந்த நகல் சட்ட திருத்தம் எப்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்பது இன்னமும் தெளிவாகவில்லை.

அந்த சட்ட வரைவு தயாராக இருப்பதாக பிரதமர் கடந்த சனிக்கிழமை கூறியிருந்த போதிலும் இந்தத் தாமதத்தை புரிந்து கொள்வது கஷ்டமாகவே இருக்கிறது.

அதேவேளை, சமர்ப்பிக்கப்படவிருக்கும் சட்ட வரைவு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான ஒன்றாக இருக்குமா என்பதும் இன்னமும் சரியான முறையில் தெளிவாகவில்லை. ஏனெனில் அரசாங்கத்தின் தலைவர்கள் இப்போது அதைப் பற்றி பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதைப் பற்றியன்றி நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களில் சிலவற்றை குறைப்பதைப் பற்றியே அரசாங்கத்தின் தலைவர்களில் பலர் இப்போது கருத்து வெளியிட்டு வருகிறார்கள். ஒருசிலர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதாகவும் கூறுகிறார்கள்.

தற்போதைய ஜனாதிபதி முறையை முற்றாக இரத்துச் செய்யாவிட்டால் அது தெளிவாகவே ஜனாதிபதியும் அவரது தலைமையில் தேர்தல் காலத்தில் உருவாக்கிய புதிய ஜனநாயக முன்னணியின் தலைவர்களும் மக்களுக்கு அளித்த பிரதான வாக்குறுதியை மீறியதாகும்.

குறைந்த பட்சம் நிறைவேற்று ஜனாதிபதி, நீதிமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் வகை சொல்லும் வகையிலாவது அரசியலமைப்பு திருத்தப்படாவிட்டால் அவ்வாறானதோர் சட்ட திருத்தத்தால் எவ்வித பயனும் இல்லை.

அதேவேளை, ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலிருந்து நீதிமன்றம் முற்றாகவே விடுபட்டால் மட்டுமே ஜனாதிபதி, நீதிமன்றத்துக்கு பொறுப்புக்கூறுதல் என்பது யதார்த்தமாகும்.

தாம் பதவிக்கு வந்து 12 நாட்களில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதியளிப்பதாக இருந்தால், அப்போதே அதற்கான சட்ட வரைவொன்று தயார் நிலையில் இருந்திருக்க வேண்டும். தேர்தலுக்குப் பின்னர் சட்ட வரைவு தயாராக இல்லை என்று கூறுவதற்கோ வேறு காரணங்களை முன்வைப்பதற்கோ ஜனாதிபதிக்கோ அல்லது புதிய அரசாங்கத்தின் ஏனைய தலைவர்களுக்கோ தார்மீக உரிமை இல்லை.

அதனை தாமதப்படுத்த அரசாங்கத்துக்கு தார்மீக உரிமை இல்லாமல் போவதற்கு மற்றொரு காரணம் என்னவென்றால், இந்த விடயத்தில் ஏறத்தாழ நாட்டில் சகல அரசியற் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளமையே.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதைப் பற்றி இல்லாவிட்டாலும் ஜனாதிபதி, நீதிமன்றத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் பொறுப்புக்கூறச் செய்ய வேண்டும் என்பதில் அனேகமாக சகல அரசியல் கட்சிகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சி அவ்வாறானதோர் நிலைமையின் அவசியத்தை நாட்டுக்கு வலியுறுத்தியிருந்தது.

தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்கான சட்ட வரைவு தயாராக இருக்காவிட்டால், பதவிக்கு வந்து 12 நாட்களில் அதனை இரத்துச் செய்வதாக தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதி உண்மையான வாக்குறுதியா என்ற கேள்வி எழுகிறது.

அது நேர்மையாக முன்வைக்கப்பட்ட வாக்குறுதியாக இருந்தால் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்கள் முடிவடைந்துள்ள இத்தருணத்திலாவது அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது இப்போதாவது அதற்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

தேர்தல் முறையை திருத்துவது தொடர்பான அரசாங்கத்தின் வாக்குறுதி சம்பந்தமாகவும் இந்த வாதம் பொருந்துகிறது. "விருப்பு வாக்கு முறையை முற்றாக இரத்துச் செய்து சகல தேர்தல் தொகுதிகளுக்கும் எம்.பி. ஒருவர் கிடைக்கும் வகையில் தொகுதிவாரி முறையும் விகிதாசார முறையும் கலந்த தேர்தல் முறையொன்றை சிபார்சு செய்வதற்காக ஜனவரி மாதம் 28 ஆம் திகதி, சர்வக் கட்சி குழுவொன்றை நியமிப்பதாக" அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்திருந்தது.

அரசாங்கத்தின் நூறு நாட்கள் வேலைத் திட்டத்தின் பிரகாரம் மேற்படி குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டும் தேர்தல் சட்ட திருத்தம் மார்ச் மாதம் 17ஆம் திகதியே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆனால் அந்தக் குழுவானது இன்னமும் நியமிக்கப்படவில்லை.

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் மற்றும் தேர்தல் சட்டத் திருத்தம் ஆகியவற்றுக்காக அரசாங்கம் புதிதாக குழுக்களை நியமித்துக் கொண்டு கஷ்டப்படத் தேவையில்லை. ஏனெனில் இவ்விரண்டு விடயங்கள் தொடர்பாகவும் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் இருக்கின்றன.

தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்ட மூலத்தை தயாரிப்பதற்காக குழுவொன்றை நியமிக்கவிருப்பதாக தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் சில வாரங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி அச்சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி தமது நூறு நாட்கள் வேலைத் திட்டத்தின் மூலம் வாக்குறுதியளித்திருந்த நிலையிலேயே அவர் அவ்வாறு கூறியிருக்கிறார். அவ்வேலைத் திட்டத்தின் பிரகாரம் அச் சட்டமூலம் மார்ச் மாதம் 20 ஆம் திகதி நிறைவேற்றப்படவும் வேண்டும்.

அந்த விடயமும் குறித்த காலத்தில் நிறைவேறுமா என்பது இப்போது சந்தேகமாகவே இருக்கிறது. இந்த விடயத்தில் சட்டமூலம் தயாராக இல்லை என அரசாங்கம் கூற முடியாது. அவ்வாறு சட்டமூலம் தயாராக இல்லா விட்டால் திகதி குறிப்பிட்டு இது தொடர்பாக ஏன் வாக்குறுதியளித்தீர்கள் என மக்கள் கேட்கலாம்.

அதேவேளை, தற்போதைய அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்களில் ஒருவரான பொது நிர்வாக அமைச்சர் கரு ஜயசூரிய, 2010 ஆம் ஆண்டிலேயே தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்ட வரைவொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார். அது இப்போது செல்லுபடியாகாது என எவரும் கூற வில்லை.

இதேபோல், தேர்தல் முறையை திருத்துவதற்காக முன்னாள் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் தலைமையிலான குழுவொன்றினால் தயாரிக்கப்பட்டு சகல கட்சிகளும் அங்கீகரித்த அறிக்கை ஒன்று இருக்கிறது. எனவே, தேர்தல் முறையை திருத்துவதற்கான ஆலோசனைகளை சிபாரிசு செய்வதற்காக புதிதாக குழுக்களை நியமித்து நேரத்தை வீணாக்கத் தேவையில்லை. அவசியம் எனக் கருதினால் அந்தக் குழுவின் அறிக்கையில் சில சிறு மாற்றங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் செய்து கொள்ளலாம். எனவே, நிறைவேற்று ஜனாதிபதி முறை, தேர்தல் முறை மற்றும் தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்ட திருத்தங்களை தாமதப்படுத்த எந்த நியாயமும் இல்லை.

எதிர்க்காலத்தில் தாம் ஜனாதிபதியாக வர வேண்டும் என்று நினைக்கும் ஒருவர் மட்டுமே நிறைவேற்று ஜனாதிபதி முறையை விரும்புவார். அம் முறை இரத்துச் செய்யப்பட்டால் நாட்டின் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும் என்றும் மாகாண சபைகள், மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபடும் என்றும் அவ்வாறான சிலர் வாதிடுகிறார்கள்.

அவர்கள், இந்தியாவை காணவில்லை போலும். அங்கு நிறைவேற்று ஜனாதிபதி முறை இல்லை. ஆனால், இந்தியாவின் ஸ்திரத்தன்மை இல்லாமல் போகவும் இல்லை.

ஈரான் மற்றொரு உதாரணமாகும். சிலவேளைகளில் இந்தியாவில் அரசாங்கம் பலவீனமாக இருக்கலாம். ஆனால் நாட்டில் ஸ்திரத்தன்மை இல்லாமல் போவதில்லை. வெளிநாடுகளினால் கட்டுப்படுத்தும் பொருளாதாரம் இருந்தால் அல்லது பலம் வாய்ந்த நாடுகளை சீண்டி வந்தால்தான் ஒரு நாட்டில் ஸ்திரத்தன்மை பாதிக்கப்படும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறை இல்லா விட்டால் மாகாண சபைகளின் கைகள் ஓங்கும் என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாத கருத்தே.

இந்தியாவில் மாநிலங்கள் தமக்கு வேண்டியவாறு செயற்பட முடியாது. மாநிலங்களில் பதற்ற நிலைமை ஏற்பட்டால், அம் மாநில அரசாங்கத்தை கலைத்துவிடுமாறு பிரதமர், ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்குவார். ஜனாதிபதி அதன்படி மாநில ஆட்சியை கலைத்துவிடுவார்.

எனவே, அந்த விடயத்தில் மத்தியில் இருப்பது நிறைவேற்று ஜனாதிபதி முறையா இல்லையா என்பதில் வித்தியாசம் இல்லை. இது பொது அறிவு. எனினும், அரசியல மைப்பு திருத்தம் என்ற விடயத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வேறு நோக்கங்களை மனதில் வைத்துக் கொண்டு செயற்படுவதாகவே தெரிகிறது.

தேர்தல் முறையும் திருத்தப்படாவிட்டால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை மட்டும் திருத்துவதற்காக தாம் ஒத்துழைப்பு வழங்குவதில்லை என அக்கட்சித் தலைவர்களில் ஒருவரும் எதிர்க்கட்சித் தலைவருமான நிமல் சிறிபால டி சில்வா கூறுகிறார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வது என்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரதான தேர்தல் வாக்குறுதியாகும். ஜனாதிபதி, சு.க.வின் தலைவராவார். அவ்வாறாயின் தமது தலைவரின் பிரதான தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றுவதை சுதந்திரக்கட்சி எதிர்க்கிறதா?

ஆயினும், இவ்விரண்டு விடயங்களும் ஒரே வேளையில் நிறுத்த வேண்டும் என்று சு.க கொடுக்கும் நெருக்குதல் சரியானதே. ஆனால், அவற்றில் ஒன்றை நிறைவேற்றிக் கொள்ள முடியுமானால் அதனை எதிர்ப்பது உள்நோக்கம் கொண்ட செயலாகவே கருத வேண்டியுள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதற்காக சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டியிருக்கும் என்றும் எனவே அதனை முற்றாக ஒழிப்பது கடினம் என்றும் சிலர் வாதிடுகிறார்கள். நாட்டில் சகல கட்சிகளும் இம் முறையை இரத்துச் செய்வதை விரும்புதாக இருந்தால் மிகக் குறைந்த செலவிலேயே இந்த சர்வஜன வாக்கொடுப்பை நடத்தலாம்.

எதிர்க் கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளராக தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்த விடயத்தில் அவசியமானால் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறினார்.

தற்போது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தின் காரணமாக 100 நாட்கள் திட்டத்தின்படி நாடாளுமன்றத்தை கலைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தாம் 100 நாட்கள் என்று எதனையும் கேட்கவில்லை என்றும் மேற்படி அரசிய லமைப்புத் திருத்தங்களையே தாம் கேட்டதாகவும் அரசாங்கத்தின் தலைவர்கள்தான் 100 நாட்களுக்குள் இவற்றை செய்வதாக கூறினார்கள் என்றும் மஹிந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதில் முன்னணியில் நின்று செயற்பட்ட மாதுலுவாவே சோபித தேரர் கூறுகிறார்.

தேர்தல் முறை திருத்தத்தோடு ஜனாதிபதி முறையையும் மாற்றி அமைப்பதற்கு 100 நாட்கள் போதுமானதாக இல்லாவிட்டால் 200 நாட்களை எடுங்கள் என எதிர்க் கட்சித் தலைவர் கூறுகிறார்.

இரண்டு திருத்தங்களையும் நிறைவேற்றிக் கொள்வதாக இருந்தால் சிலவேளை நாடாளுமன்றத்தை ஏப்ரல் மாதத்திலன்றி மே மாதத்தில்தான் கலைக்க வேண்டியிருக்கும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடந்த புதன் கிழமை சு.க.வின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தின் போது கூறியிருக்கிறார்.

அவ்வாறு தாமதித்து இந்த அரசியலமைப்பு திருத்தங்களை நிறைவேற்றப் போனால் சிலவேளை மஹிந்த ராஜபக்ஷவின் தலையீட்டால் சு.க.வில் பலர் அதற்கு ஆதரவளிக்காமல் இருக்கலாம். இப்போது நாடாளுமன்றத்தை கலைப்ப தாக மிரட்டியே ஜனாதிபதி, சு.க.வை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு இருக்கி றார். ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் சு.க. வைச் சேர்ந்த பல எம்.பி.க்கள் ஓய்வூதிய உரிமையை பெற மாட்டார்கள். எனவே அதற்குப் பின்னர் அரசியலமைப்புத் திருத்தத்தை கொண்டு வரப் போனால் மைத்திரிபால தலைமை தாங்கி னாலும் சு.க. வில் பலர்அதற்கு முட்டுக்கட்டையாக அமையலாம்.

-எம்.எஸ்.எம்.ஐயூப்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க கூட்டுப்படையின்

# வான்வழித்தாக்குதலில் சிரியாவில் 30 பேர் பலி!

(பெய்ரூட்)

**சிரியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமெரிக்க கூட்டுப் படையினர் நடத்திய வான் வழித்தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் உட்பட 30 பேர் பலியாகியுள்ளனர் என அமெ ரிக்க கூட்டுப்படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.**


ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றி உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தொடர்ந்து நாசவேலைகளில் ஈடு பட்டு வருகிறார்கள்.

மேலும் சிரியாவில் உள்ள சில எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களை கைப்பற்றி உள்ள தீவிரவாதிகள், அதன் மூலம் கிடைக்கும் வருவாயை தீவிரவாத செயல்களுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். இந்த தீவிரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் அமெரிக்கா மற்றும் பல்வேறு நாடுகளின் இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

சிரியாவில் துர்கிஷ் எல்லைப்பகுதியில் தெல் அப்யாட் நகரின் வடகிழகது பகுதியில் ஐ.எஸ்.ஐ.எஸ. தீவிரவாதிகளின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் உள்ளது. இதன் மீது அமெரிக்க கூட்டுப்படையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு போர் விமானங்கள் மூலமாக வான்வழி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் ஐ.எஸ். ஐ.எஸ்.தீவிரவாதிகள் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய தொழிலாளர்கள் உட்பட மொத்தம் 30 பேர் பலியாகினர்.

இதுகுறித்து அமெரிக்க கூட்டுப் படை செய்தி தொடர்பாளர் கூறுகையில், 'எண்ணெய் கிணறை குறிவைத்து நடத்தப்பட்டதில் பலர் உயிரிழந்துள்ளனர். ஆனால் பலியானோர் எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியவில்லை எனவும் கணக்கிடும் பணி நடந்து வருகிறது' என்றும் தெரிவித்தார. (இ-5)






## எதிர்க்கட்சித் தலைவர் கொலை; ஐவர் கைதாகி சிறையிலடைப்பு

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர்களில் ஒருவரான போரிஸ் நெம்ட்சோவ் கடந்த மாதம் 27 ஆம் திகதி மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஜனாதிபதியின் கிரெம்ளின் மாளிகை அருகே நடந்த இந்த சம்பவம், ரஷ்யாவில் பெரும் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியது.

இந்த கொலை வழக்கை விசாரித்து வந்த ரஷ்ய பொலிஸார், செசன்யா பகுதியை சேர்ந்த முன்னாள் பொலிஸ் அதிகாரி சவுர் தாதாயேவ் என்பவர் உட்பட 5 பேரை கைது செய்தனர். அவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் சவுர் தாதாயேவ் மற்றும் அன்சர் குபாசேவ் ஆகியோர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.


கைது செய்யப்பட்ட சவுர் தாதாயேவ் பிரெஞ்சு பத்திரிகையான சார்லி ஹெப்டோவில் கேலிச்சித்திரம் வெளியானதால் கடும் கோபத்தில் இருந்து வந்தார். ஆனால் இந்த பத்திரிகை அலுவலகத்தில் கடந்த ஜனவரி மாதம் நடந்த தீவிரவாத தாக்குதலை கண்டித்த நெம்ட்சோவ், அந்த கேலிச்சித்திரத்தை நியாயப்படுத்தி பேசி வந்துள்ளார்.

இதனால் கோபமடைந்த சவுர் தாதாயேவ் மற்றும் கூட்டாளிகள் அவரை கொலை செய்ததாக பொலிஸார் தெரிவித்து உள்ளனர். இந்த கொலையை சவுர் தாதாயேவும் ஒப்புக்கொண்டுள்ளார்.

ஆனால் இந்தக் கொலைக்கு திட்டமிட்டவரை கண்டு பிடிக்க வேண்டும் என நெம்ட்சோவின் ஆதரவாளர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சாகச நிகழ்வில் நடந்த விபரீதம்

### கெலிகள் மோதிய விபத்தில் 10 பேர் பலி!



ஆர்ஜெண்டீனாவில் இடம்பெற்ற சாகச நிகழ்வின் போது வானில் இரண்டு ஹெலிகொப்டர்கள் மோதி விபத்துக்குள்ளானது. இச்சம்பவத்தில் பிரெஞ்சு விளையாட்டு பிரபலங்கள் உடபட 10 பேர் உயிரிழந்தனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள அதிகமானோர் பிரெஞ்சு நாட்டை சேர்ந்தவர்களே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆர்ஜெண்டீனா நாட்டை சேர்ந்தவர்களும் உயிரிழந்தனர். சாகச நிகழ்வின் போது இரண்டு ஹெலிகொப்டர்களும் மோதிக்கொண்டது என்று தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் ஆர்ஜெண்டீனா நாட்டின் வடமேற்கில் உள்ள லாரியோஜா மாகாணத்தில் நடைபெற்றுள்ளது. விபத்தில் ஹெலிகொப்டரில் இருந்தவர்கள் யாரும் உயிர் பிழைக்கவில்லை.

ஹெலிகொப்டர்கள் மோதி எரிந்து கிடக்கும் காட்சிகள் வெளியாகியுள்ள நிலையில் இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விபத்தில் சிக்கிய பிரெஞ்சு விளையாட்டு வீரர்கள், பீஜிங் (2008) மற்றும் லண்டனில் (2012) நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்றவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## 8பேர் பலி

இமாச்சல பிரதேசத்தில் நேற்று தனியார் பேருந்து விபத்துக்குள்ளாகி வீதியிலிருந்து உருண்டதில் திருமணத்துக்கு சென்று திரும்பிய 8 பேர் பலியாகினர்.

இந்த பயங்கர விபத்தில் மேலும 14 பேர் படுகாயமடைந்தனர். இமாச்சலத்தில் சம்பா மாவட்டம் பக்ருவா நுலாவிலிருந்து திருமணத்துக்கு வந்திருந்த உறவினர்களை ஏற்றிச் சென்ற பேருந்து விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான பேருந்தில் அதிகப்படியான எண்ணிக்கையில் பயணிகள் இருந்ததாகவும், வளைவல் திரும்ப முயன்றபோது பேருந்து கவிழ்ந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.(இ-5)

## பன்றிக்காய்ச்சல் காரணமாக 1370 பேர் இதுவரை மரணம்

இந்தியா முழுவதும் பன்றிக் காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை ஆயிரத்து 370 ஆக அதிகரித்துள்ளது. இந் நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 25 ஆயிரத்து190ஆக உயர்ந்துள்ளது.

தமிழகத்தில் 376 பேருக்கு பன்றிக் காய்ச்சல் பாதிப்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. குஜராத் மாநிலத்தில் 322 பேரும், ராஜஸ்தானில் 321 பேரும் மகாராஷ்டிராவில் 211 பேரும் இந்நோய்க்கு பலியாகி உள்ளதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நோயின் தாக்கம் தமிழ்நாட்டிலும் அதிகரித்து வருகிறது. நேற்று முன்தினம் மட்டும் 19 பேர் பன்றிக் காய்ச்சல் பாதிப்புக்காக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதிகபட்சமாக கோவையில் 7 பேரும், சென்னையில் 5 பேரும், பன்றி காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை தமிழகத்தில் மொத்தம் 376 பேர் பன்றிக் காய்ச்சலால் தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் மட்டும் இந்நோய்க்கு 12 பேர் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 8 பேரின் தலையைத் துண்டித்த தீவிரவாதிகள்

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் லிபியாவில் எண்ணெய் வயல்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் அங்கு அல்கானி உள்ளிட்ட 11 எண்ணெய் வயல்களை லிபிய அரசு மூடியுள்ளது.

இருந்தும் இவற்றை கைப்பற்ற ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இவர்களுடன் எண்ணெய் வயல்களில் பணிபுரியும் பாதுகாப்பு படையினரும், இராணுவமும் எதிர்த்தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஷால்லா அருகேயுள்ள அல்கானி எண்ணெய் வயலில் பணியில் இருந்த 8 பாதுகாப்பு படையினரை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் சிறைபிடித்தனர்.

பின்னர் அவர்களின் கைகளை பின்புறமாக கட்டி தலைதுண்டித்து படுகொலை செய்தனர், இந்த தகவலை லிபிய செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இவர்கள் தவிர எண்ணெய் வயல்களில் பணிபுரியும் மேலும் 9 வெளிநாட்டு பணியாளர்களை கடத்தி சென்று விட்டனர். அவர்களில் ஆஸ்திரியா, செக்குடியரசு, பங்களாதேசம், கானா ஆகிய நாடுகளை சேர்ந்த தலா ஒருவரும், பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த 4 பேரும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என் மனப் பதிவுகளிலிருந்து...

அலாரம் அடிக்கிறது, நேரம் சரியாக காலை 6 மணி எனக் காட்டுகின்றது. நானோ 4ஆம் வருட மருத்துவ மாணவி. சட்டென்று எழுந்து குளித்துவிட்டு அவசரமாக வெளிக்கிட்டு காலை உணவையும் வாய்க்குள் விரைவாக தள்ளிவிட்டு எனது கால்கள் விரைகின்றன விரைவாக... எங்கு என்று யோசிக்கவேண்டாம். வைத்தியசாலைக்குத்தான்.

ஏனெனில் சரியாக 7 மணிக்கு நிற்காவிடில் வரவுத்தாளில் முட்டைபோடாமல் விடமாட்டார்கள். 100வீதம் வரவு முக்கியம். சரியாக நேரம் 7 மணி நிற்கிறேன். சத்திரசிகிச்சை விடுதியில் எனது வரவை உறுதிப்படுத்திவிட்டு விரைகிறேன். நோயாளிவரவுப்புத்தகத்தைநோக்கி. அப்பாடா எவ்வளவு நோயாளிகள் முதல் நாள் வேற எங்கட விடுதியின் அனுமதி தினம் ஐயோ, இந்த Monitor க்கு வேற வேலையே இல்ல வாறது, வந்து தொடங்கிறது, நோயாளிக்கு இலக்கம் போட. நான்தான் எப்ப வும் மாட்டுறது. ஏனெனில் நான் முதலாம் நம்பர்! எப்பவும் எனக்குத் தான் நோயாளிகூட வரும். வந் தால் போகவும் மாட்டினம்.

இதுவோ சத்திரசிகிச்சை விடுதி, எப்பவும் காயமும் இரத்தமும் அழுகையும்தான், படு பயங்கரமானது. சரியாக 8 மணிக்கு பெரிய டாக்டர் நோயாளியைப் பார்க்க வந்து விடுவார். அவர் கேட்கும் நோயாளிகள் எல்லாம்கூட எனக்கே வரும். நான் பேச்சுக்கேட்காத நாட்களே இல்லை என்று சொல்லலாம். பயத்தின் உச்சக்கட்டத்தில் விரைகிறேன் விபரம் எடுப்பதற்காக புதிய மற்றும் பழைய நோயாளிகளைத் தேடி.

மொத்தமாக 7 நோயாளிகள், கண்டுபிடித்ததோ 2 பேர்தான். சரி தேடுவோம் என்று முன்னோக்கி விரைகிறேன் அடுத்த கட்டிலில் ஒரு சிறுபையன் படுத்திருந்தான். பக்கத்தில் ஒரு வயதான பாட்டி அவனை ஆசையுடன் தடவியபடி.

பாட்டி தம்பிக்கு என்ன பெயர். வருண். வயது 12 பிள்ளை என்றாள் பாட்டி.மனதுக்குள் சந்தோசம். அப்பாடா என்ரநோயாளி இல்ல. நகரலாம் என்று நினைக்க படுத்திருந்த வருண் எழும்பி அக்கா மாம்பழம் வாங்கித் தாறியா? என்று கேட்டான்.

அவன் கேட்ட விதம் என்னை ஒருகணம் நிற்க வைத்தது. ஏனெனில் அவன் கேட்டவிதம் அப்படியிருந்தது. வயதும் என் தம்பியைப்போல் இருப்பதால் அவனில் சற்று இரக்கமும் இருந்தது.

இப்ப மாம்பழ சீசனும் இல்லை. என்னசெய்வது என்றும்புரியவில்லை. தம்பி இப்ப மாம்பழ சீசன் இல்லை. வேற பழம் கேளுங்கோ, அக்கா வாங்கித்தருகிறேன் என்றேன். அவன் மாம்பழம்தான் வேணும் என்று சொல்லிவிட்டு பாட்டி தலை சுற்று கிறது என்று விட்டு மீண்டும் படுக்கி றான்.

கட்டிலைப் பார்க்கிறேன். ஒரு போர்வை மட்டும்தான். தலையணை கூட இல்லை.ஆனால் கால்மாட்டில் நிறைய கட்டுக்கட்டா CT யும் X-ray யும். பக்கத்து அலுமாரியில் ஒரு தண்ணீர்ப்போத்தலும் தேநீர் சாமான்கள் மட்டும்தான் இருந்தன.

எல்லாம் அவர்களின் வறுமையைப் பளிச்சென்று காட்டியது. வருணுக்கு என்ன பிரச்சினையாக இருக்கும் என்று எண்ணியவாறு நகர்கிறேன். மேலும் அதில் நிற்கமுடியாதவாறு.ஏனெனில் 8 மணிக்குள் மற்றைய நோயாளிகளையும் கண்டுபிடித்து கிஸ்ரி எடுக்கணும்.

இருந்தும் மனதில் ஏதோ சஞ்சலம். அந்தப் பையன் கேட்டதை வாங்கிக் கொடுக்கவில்லையே என்று.

மறுநாள் வழமைபோல்தான் விரைகிறேன். வைத்தியசாலைநோக்கி, கையில் அப்பிள் பழங்க ளுடன். என்னைக் கண்டதும் புன் முறுவலளித்த வருண் அக்கா மாம் பழம் கொண்டு வந்தியா?என்று கேட்டான்.

இல்லை தம்பி. இந்த அப்பிள் பழத்தைச் சாப்பிடுங்கோ. அக்கா பிறகு மாம்பழம் வாங்கித்தருகி றேன் என்றேன். எனக்கு அப்பிள் வேண்டாம். பாட்டி எனக்கு தலை சுத்துகிறது என்று சொல்லிவிட்டு மீண்டும் படுக்கிறான்.

எழும்புவதும் திரும்ப கொஞ்ச நேரத்தில் படுப்பதுமாகவே இருந்தான்.சரி என்ன பிரச்சினையாக இருக்கும் என யோசித் தவாறு கால் மாட்டில் உள்ள கட்டைத் தூக்கிப் பார்த்தேன்.

மூளையில் இரத்தக்கசிவு இருப்பதாக எழுதப்பட்டிருந்தது. என்னென்று இந்தச் சிறுவயதில் இப்படி ஏற்பட்டிருக்கும் எனஅறிய ஆவலாக இருந்தது.

பாட்டியிடம் மெதுவாகக் கதையைக் கொடுத்தேன். அம்மா என்ன பிரச்சினை வருணுக்கு.

பாட்டியின் கண்கள் கலங்குகிறது. அம்மா அழாதீங்க, சொல்லுங்க என்ன நடந்தது?

பாட்டி தன்னைத் திடப்படுத்திக் கொண்டு சொல்லத் தொடங்குகிறாள். இவர்களின் சொந்த ஊர் கிளிநொச்சி. பாட்டிக்கு மொத்தமாக 6 பிள்ளைகள். 4 பிள்ளைகளை யுத்தத்தில் தொலைத்துவிட்டு கடைசியாக தனது இருபிள்ளைகளுடன் வரணியில் வசிக்கிறாள். ஒருத்தி வருணின் தாய் கமலா. மற்றவள் வசந்தி உளநலம் பாதிக்கப்பட்டிருக்கிறாள்.

கமலாவுக்கு 4 பிள்ளைகள். கடைசிக்குழந்தை. ஒன்றரை வயது. வருண்தான் மூத்தவன். தானும் கமலாவும் கூலிவேலை செய்து தான் குடும்பத்தைப் பார்ப்பதாக சொன்னார் பாட்டி.

அப்ப பாட்டி வருணின் அப்பா எங்க என்று கேட்டேன். பாட்டி மீண்டும் அழத் தொடங்குகிறாள். பாட்டியைச் சமாதானப்படுத்துகிறேன்.

சிறிது நேரத்தின் பின் பாட்டி மீண்டும் தொடங்குகிறாள்.

வருணின் அப்பா சாந்தன். நல்ல மனுசன். குடிபோதை ஒன் றும் இல்லை. சாரதியாக கடமை புரிந்துகிட்டு இருந்த மனுசன் கடைசியாக ஒரு வருசத்துக்கு முன் ஏ-9 றோட்டில நடந்த கோர விபத்து ஒன்றில் தலைநசிந்து இறந்து போய் விட்டார்.

என் மகள் கமலா கணவன் இறந்ததும் நிலைகுலைந்து போய் விட்டார். கடைசியாகதான் மூத்தமகன் வருணைப் படிப்பிச்சு ஒரு பெரிய ஆளாக்கிக் காண ஆசைப்பட்டாள். ஆனால் இப்ப எல்லாம் வீணாகி விட்டது என்று விட்டு பாட்டி விம்மி விம்மி அழத்தொடங்கினாள்.

சரி பாட்டி அழாதீங்க என்று கஷ்டப்பட்டு சமாதானப்படுத்தி விட்டு மீண்டும் கேட்கிறேன். அப்படியென்றால் வருணுக்கு என்ன நடந்தது.

தங்கச்சி என்ர கடைக்குட்டி பேரனுக்கு பால்மா வாங்க என்ர வருண் தன்ரை எட்டாக் காலால் சைக்கிள் ஓடிக்கொண்டு கடைக்குப் போயிருக்கான். போகும்வழியில் ஒழுங்கையால் வந்த ஆட்டோவைக் கவனிக்கவில்லை.முன்னால்வந்துவருணை மோத தூக்கிவீசப்பட்ட வருண் பக்கத்தில் கால்வாயில் தலை அடிபட படுகாயமடைந்தான்.

ஆட்டோக்காரன் தப்பியோடிவிட முழு மயக்கத்தில் இருந்த என் செல்லப்பேரனை இங்கே கொண்டு வந்தோம். சரியாக எட்டு நாட்கள் என்பேரன் கண்திறக்கவேயில்லை. அவசர சிகிச்சைப் பிரிவில்தான் இருந்தான். நேற்று முன்தினம் தான் கண் திறந்தான். அதுதான் இங்கே அனுப்பினார்கள். தலையில் ஏதோ இரத்தக்கட்டியாம். நரம்பு சத்திரசிகிச்சையாளர்கள் வந்து பார்த்து விட்டு போறார்கள். ஏதோ பெரிய ஒப்பரேஷன் செய்ய வேணுமாம்.

தங்கச்சி என்ன பயமோ, என்ர பேரனுக்கு ஒன்றும் ஆகாது தானே. எங்களுக்கு எங்கட பேரன் முழுசா வேணும். எங்களிட்ட எந்தப் பண வசதியும் இல்லபுள்ள. இருந்த ஒரு தோட்டை விற்றுத்தான் என் பேரனின் சாப்பாட்டுச் செல்வைப் பார்க்கிறோம்.

புள்ள எட்டு நாளாகச் சாப்பாடு இல்லாமல் கிடந்தான். அதுதான் அவனுக்கு மிகவும் பிடித்த மாம் பழத்தை உங்களிட்ட கேட்டான். அப்பதான் அவன் மாம்பழம் கேட்டதன் ஏக்கம் என்னை ஒரு கணம் ஆட்டியது.

விபத்தினால் தந்தையையும் இழந்து இன்னொரு விபத்தினால் கடைசியாக முழுசா நம்பியிருந்த மூத்த பிள்ளையின்ர முடிவும் முழுசா தெரியாமல் இருக்கும் இந்த ஏழைக்குடும்பத்தின் நிலை என்னை ஒருகணம் யோசிக்க வைத்தது.

ஏன் இப்படி விபத்துக்கள் இப்ப அதிகமாக நடக்கின்றன. இதைத் தடுக்கவே ஏலாதா!

எம்மில் சிலர் விடும் தவறுகளினாலே விபத்துக்கள் ஏற்படுகின்றன. நாம் ஒவ்வொருவரும் நாமாகவே உணர்ந்துமிக அவதானத்துடன் செயற்பட்டால் விபத்துக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம். அத்துடன் வருண் மாதிரியான குடும்பங்கள் உருவாவதையும் தடுக்கலாம். கடைப்பிடிப்போம் சாலை விதிமுறைகளை தடுப்போம் விபத்தினை!

*யாவும் உண்மை கலந்த கற்பனையே*

**வீ.விஜித்தா**
**34 ஆம் அணி,**
**மருத்துவபீடம், யாழ்ப்பாணம்**

# கச்சதீவை மீட்டால் மட்டும் மீனவர் பிரச்சினை தீராது!

(சென்னை)

இராமேஸ்வர மீனவர்கள் பிரச்சினைக்கு கச்ச தீவை மீட்பது தீர்வாகாது என சென்னை மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தின் இணைப் பேராசிரியர் அஜித் மேனன் தெரிவித்தார்.

பாக் ஜலசந்தியில் அரசியல் சூழல்குறித்த கருத்தரங்கம் சென்னை அடையாறில் உள்ள சென்னை மேம்பாட்டுக் கல்வி நிறுவனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது வளங்களை இழந்து கொண்டிருக்கும் கச்சதீவை மீட்பதால் இந்திய மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு போதுமான அளவு மீன்கள் கிடைக்காது. ஏனென்றால் இந்திய மீனவர்கள் பல நேரங்களில் இலங்கையின் மீன்பிடி எல்லையில் அதிக தொலைவுக்கு ஊடுருவிச் செல்கின்றனர்.

மீனவர்களே கச்சதீவை மீட்பது தங்கள் பிரச்சினைக்கு தீர்வாகாது என்று கருதுகின்றனர். மேலும் 20 சதவீத பிரச்சினைகளை மட்டுமே கச்சதீவை மீட்பதன் மூலம் தீர்க்க முடியும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இந்தியா கச்சதீவை மீட்பது என்பதற்கான சாத்தியம் மிகவும் குறைவு. அவ்வாறு கச்சதீவு இந்தியாவால் மீட்கப்பட்டாலும் மீனவர்கள் பிரச்சினை தீராது தடை செய்யப்பட்ட வலைகளைக் கொண்டு இந்திய விசைப்படகு மீனவர்கள் இலங்கைப் பகுதியில் மீன்பிடிப்பதைக் தடுக்கும் வகையில் கண்காணிப்பைத் தீவிரப் படுத்த வேண்டும் என்று அந்த நாட்டு அரசை இலங்கை வடக்கு மாகாண மீனவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இலங்கையிலும் போட்டி அரசியல் நடைபெற்று வருவதால் புதிதாக அமைந்துள்ள அரசு, மீனவர்களின் வாக்கு வங்கியைத் தக்க வைப்பதற்காக பிரச்சினையை அவர்களுக்குச் சாதகமாகத் தீர்க்கவே முயலும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# பிரிவுத்துயர் பகிர்வு



## P.K.குமாரகுலசிங்கம்

(இளைப்பாறிய ஓவசியர்)

சிவலிங்கப்புளியடி வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பெரியதம்பிகந்தையா குமாரகுலசிங்கம் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மு.ப. 10 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## வேலும்மயிலும் சுந்தரேஸ்வரன்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட வேலும் மயிலும் சுந்தரேஸ்வரன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை மு.ப.11 மணியளவில் St.John's Norway Cemetery, 256 Kingston Rd, Toronto, ON M4L 1S7 Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



## அப்பாத்துரை நடராஜா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை நடராஜா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் St.John's Norway Cemetery & Crematorium, 256 Kingston Rd, Toronto, ON M4L 1S7 Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.



## கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Montigny-Les-Cormeilles ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்தோப்பர் பிரான்சிஸ் கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் Cimetiere Intercommunal des Joncherolles, 95 Rue MNarcel sembat,93430Villetaneuse, France என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமை படைத்த பேராயர் எஸ்.ஜெபநேசன்

நடமாடும் பல்கலைக்கழகம் என ஈழத்துக் கல்விமான்களால் புகழப்படும் சிறப்பிற்குரியவர் பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன். அவரது குறுநகையையும் நாவில் வந்துதிக்கும் தண்டமிழ்ச் சுவையையும் ஆங்கில அழகையும் அனுபவித்தவர்கள் பாக்கியசாலிகளே. இன்று அகவை எழுபத் தைந்து கண்டு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் பவள விழாக் காணும் பேராயரை வாழ்த்தி வணங்குவதாக இந்த ஆக்கம் அமைகின்றது.

**பிறப்பும் ஆளுமை உருவாக்கமும்**

பேராயரின் பிறப்பிடம் சாவகச்சேரி ஆகும். 1940 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆம் திகதி நாராயணபிள்ளை சாமுவேல் சுப்பிரமணியம் - அலிஸ் கனகம்மா தம்பதியரின் மகனாகப் பிறந்த இவர் சாவகச்சேரி அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்து டிறிபேர்க் கல்லூரியில் தொடர்ந்தார்.

அங்கு எஸ்.எஸ்.சி. வகுப்பு வரை கற்றார். தனது பதினைந்தாவது வயதில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர்தரம் பயிலச் சென்றார். அங்கு பெற்ற அனுபவங்கள் அவரை வாழ்வின் உன்னத நிலைகளுக்கு இட்டுச் சென்றன.

அங்கு பயின்ற போது வரலாறு தனக்குப் பிடித்த பாடமாகத் திகழ்ந்தது என்கிறார். பேராயரின் தந்தையார் தமிழ்ப் புலமை பெற்ற ஆசிரியர், அருட் தந்தையாகத் திகழ்ந்தவர். அதிபராகவும் பணியாற்றியுள்ளார். தாயார் புலமை மிக்க ஆங்கில ஆசிரியராக இருந்தமையால் இவருக்கு இரு மொழி ஆளுமை இலகுவில் கைகூடிற்று.


இத்தகைய பின்புலங்களுடன் பேராதனைக்குச் சென்றமையால் அங்கு பல்வேறு திறன்களை இலகுவாக கற்கும் வாய்ப்புப் பெற்றார். தமிழ், வரலாறு, பொருளியல் ஆகிய பாடங்களை புகழ் பூத்த பேராசான்களிடம் பயின்றும் புகழ் பூத்த சகபாடிகளுடன் கற்கும் பட்டதாரியானார்.

இத்தகைய பின்புலங்கள் இறையருளால் வாய்க்கப் பெற்றமையே பேராயர் என்ற பெரும் மனிதரின் ஆளுமை உருவாக்கத்திற்கான அடிப்படை ஆகும்.

**ஆசிரியப்பணி**

கண்டியில் உள்ள புனித அந்தோனியார் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி என்பவற்றில் ஆசிரியப் பணிபுரிந்து பின் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியராக, துணைஅதிபராக, அதிபராகச் சிறப்புறப் பணியாற்றினார்.

19ஆம் நூற்றாண்டுக் கல்வி வளர்ச்சியில் யாழ்ப்பாணக் கல்லூரி கொண்டிருந்த ஆளுமை சிறப்பானது. அமெரிக்க மிசனரிமாரின்



ஆளுமைக்களமாக அக்கல்லூரி திகழ்ந்தமையால் இன்றும் அப் பெருமை நிலை நாட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

பேராயர், தமிழ்ப் புலமை மிக்கவர். தமிழ் முதுமாணி மற்றும் தமிழில் கலாநிதி பட்டங்களுக்கு அமெரிக்க மிசனரிமார் தமிழ் இலக்கியத்தில் ஏற்படுத்திய செல்வாக்கை கருவாகக் கொண்டு ஆய்வு செய்தார்.

இதுவே பின்னாட்களில் அவரை "19ஆம் நூற்றாண்டின் அதிகாரம் மிக்க குரல்" என மாணவர்களால் அடையாளப்படுத்தப்படக் காரணமாயிற்று.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினராகவும், தமிழ்த்துறையின் வருகை விரிவுரையாளராகவும் பல்கலைக்கழக முதுகலைமாணி மற்றும் கலாநிதிப்பட்ட ஆய்வாளர்களுக்கான மேற்பார்வையாளராகவும் பல தளங்களில் பணிபுரியும் வாய்ப்புப் பெற இவரது தமிழ் மற்றும் ஆங்கிலம் சார்ந்த சமதையான புலமையே அடிப்படையாகும்.

தமிழ் மீது கொண்ட காதலால் 1982 ஆம் ஆண்டு தொடக்கம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் பாரதிவிழாவைக் கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்தார். இவ்விழா இன்று இலங்கையில் புகழ் பெற்ற தமிழ்விழாவாகத் திகழ்கின்றது.

இந்தியாவில் இருந்து அறிஞர்கள் வந்து பங்கேற்றுச் செல்லுமளவிற்கு இதன் வியாபகம் உள்ளது. இவ்விழாவைத் தொடர்ந்து முன்னெடுத்தமைக்காக பாரதியார் அறக்கட்டளைக் குழுவினரால் பேராயர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார் என்பதுவும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

**இல்லறம்**

வேம்படி மகளிர் கல்லூரியின் மேலைத்தேய இசை ஆசிரியையாகப் பணியாற்றிய சீதா விமல லஷ்மியை 1969 இல் தன் வாழ்க்கைத்துணையாகக் கரம்பற்றினார்.

நிர்மலீன் , கீதாஞ்சலி என இரண்டு பெண்பிள்ளைகள் இவர்களுக்குச் செல்வங்களாக உள்ளனர். பேராயரின் குடும்பத்தினர் அவுஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்து இனிதே வாழ்கின்றனர்.

தாய்மண்மீதுள்ள சுகத்தினால் பேராயர் தன் மனைவியுடன் யாழ்ப்பாணத்தில் விருப்புடன் வாழ்கின்றார். இக்குடும்பம் யாழ்.மண்ணிற்கெனத் தம்மாலான ஆங்கிலப் போதனை, மேலைத்தேய இசைப் போதனை மற்றும் தமிழியல் சார்ந்த பணிகளைச் செய்துகொண்டிருக்கின்றது.

**இறைபணி**

1989 இல் தென்னிந்தியத் திருச்சபையின் உதவிக்குருவாக அபிஷேகிக்கப்பெற்ற பேராயர் 1993 இல் அத்திருச்சபையின் பேராயராகச் சென்னையில் வைத்துத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தொடர்ந்து 2005 ஆம் ஆண்டுவரை அத்திருச்சபையின் பேராயராகப் பணியாற்றினார்.

இருப்பினும் பேராயர் எஸ்.ஜெபநேசனின் இளைப்பாறுகைக்குப் பின் அச்சபை இரண்டு பட்டமை துரதிர்ஷ்டமே. பேராயராகப் பணியாற்றிய காலம் ஆயுதப் போராட்டம் கூர்மை பெற்றிருந்த காலமாகும். தமிழ் உணர்வாளரான பேராயர் தமிழ் மண்ணின் குரலாகவும் விளங்கினார்.

**அரசியற்பணி**

பேராயரின் குடும்பம் தமிழரசுக் கட்சி சார்ந்தது. இவரது தந்தை தமிழரசுக் கட்சியின் தீவிர பற்றாளர். பேராயருக்குத் தந்தை செல்வா, தாய்வழி உறவினராக அமைந்தமையும் தலைவர் அ.அமிர்தலிங்கம் அயலவராக வாய்த்தமையும் கட்சி மீதான நம்பிக்கை ஈர்ப்புக்கு அடித் தளங்களாக அமைந்தன. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் தந்தை செல்வா அறக்கட்டளையின் தலைவராகப் பேராயர் செயற்பட்டு வருகின்றார்.

வரலாறு சார்ந்து ஆண்டு மாதம் திகதியுடன் என்ன சம்பவம் இடம் பெற்றது என்று கூறக்கூடிய தெளிவும் அரசியல் சார்ந்த பொதுநிலை ஞானமும் கைவரப்பெற்றமையால் தமிழ்த் தலைவர்கள் பலர் பேராயரிடம் ஆலோசனை பெற்றுச் செயற்படுவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

**நூலாக்கம்**

பேராயர் இதுவரை பத்து நூல்களை எழுதியுள்ளார். இவற்றுள் இரு நூல்கள் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. எழுததாளர் டானியலின் கானல நாவலை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவரது தெள்ளு தமிழ் நடையைப் பலரும் பாராட்டுவர். வாசகரை ஈர்க்கும் மொழிநடையைக் கையாளும் புலமை பேராயருக்குக் கைவந்த கலையாகும்.

**நிறைவாக...**

ஈழத் தமிழ்மண்ணின் உன்னத கல்வியாளனாகத் திகழும் பேராயருக்கு இன்று திருநிலையினரும் பொது நிலையினரும் இணைந்து பவளவிழா எடுக்கின்றனர். சமய பேதங்களைக் கடந்து அனைவரும் ஒன்று கூடி இவருக்குப் பவள விழா எடுக்கின்றமை, ஓர் உண்மைச் சமயி பெறக்கூடிய மிகப்பெரும் கௌரவமாகும்.

**ச.லலீசன்**
**(பேராயரின் மாணவன்)**
**பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசின் வரவு செலவு திட்டத்தில் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவில்லை

## சந்திரகுமார் எம்.பி சுட்டிக்காட்டு

கிளிநொச்சியில் ஜெயபுரம் உள்ளிட்ட பல பிரதேசங்கள் யுத்தத்தால் மட்டுமல்ல திட்டமிடப்பட்ட புறக்கணிப்புகளின் பாதிப்புக்களையும் சுமந்த பிரதேசங்களாகவே கடந்த காலத்தில் காணப்பட்டுள்ளது. எனவே தான் மீள்குடியேற்றத்தின் பின்னர் நாம் இந்த பிரதேசங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பூநகரி ஜெயபுரம் தெற்கு கதிர் முன்பள்ளக்கு றகமா நிறுவனத்தினரால் 35 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடத்தினையும், பாராளுமன்ற உறுப்பினரின் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு முற்றத்தினையும் மாணவர்களுக்கு அண்மையில் கையளிக்கும நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெயபுரம் பிரதேசம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றத்திற்கு பின்னால் கோடிக்கணக்கான நிதியும், கடின உழைப்பும் காணப்படுகிறது.

யுத்தத்தின் பாதிப்புக்களை சுமந்த சகல பிரதேசங்களிலும் இவ்வாறான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறிவிட முடியாது ஆனால் ஜெயபுரத்தில் இந்த ஐந்து வருடத்திற்குள் வாழ்வாதாரத்திலும், பிரதேசத்தின் அபிவிருத்தியிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளோம். இதற்காக நாம் அதிக அக்கறை எடுத்துள்ளோம். பெருமளவு நிதியை செலவு செய்திருக்கின்றோம். பல அரசசார்பற்ற நிறுவனங்களை இந்த பிரதேசங்களை நோக்கி திசை திருப்பியுள்ளோம். இதன் விளைவுதான் இந்த முன்னேற்றம். ஆனாலும் இன்னும் ஏராளமான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

கடந்த காலத்தில் பல்வேறு மிக முக்கியமான அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் முன்மொழிவுகள் வைக்கப்பட்டன. சமூகமயப்படுத்தப்பட்ட குடிநீர் திட்டங்கள், பெரியளவிலான குளங்கள், வீதிகள் அபிவிருத்தி திட்டங்கள் எம்மால் அரசாங்கத்திடம் கொணடு செல்லப்பட்டு அவை மேற்கொள்வதாக இருந்தது.

ஆனால் புதிய அரசின் வரவுசெலவு திட்டத்தில் இவ்வாறான அபிவிருத்திகளுக்கு என எவ்வித நிதியும் ஒதுக்கப்படவில்லை. இது அபிவிருத்தியில் ஒரு இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள இந்த இடைவெளி வெறுமையை யுத்தத்தின் பாதிப்புக்களை சுமந்த எங்கள் மக்கள் மீது நெருக்கடிகளை ஏற்படுத்தும்.

எங்களால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை சலுகை என்றும், ஏமாற்று என்றும் கூறியவர்கள் இன்று அதன் தார்ப்பரியத்தை உணர்ந்து செயற்படுகிறார்கள். இது ஒரு வரவேற்கத்தக்க மாற்றமாகும். இதே போன்று தமிழ், முஸ்லிம் மக்களின் அரசியலுரிமைகளை பெற்றுக்கொள்ளும் பன்மைத்துவ சமூக இருப்புக்கான அங்கீகாரம்பெறும் எமது அரசியல்வழிமுறையும் விரைவில் நடைமுறைச்சாத்தியமாகும் என்றார்.

ஜெயபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் இராஜரட்ணம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், ஜெயபுரம் மகா வித்தியாலய அதிபர் நா.நடேசமூர்த்தி, கிராம அலுவலர் மகாபரன், றகமா நிறுவனத்தின் சமூக அபிவிருத்தி இணைப்பாளர் திருமதி சந்திரபோஸ், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஜெயபுரம் பிரதேச இணைப்பாளர் றோஜஸ் எனப் பலர் கலந்துகொண்டனர். (அ)






பனிக்கன்குளம் கலைமகள் முன்பள்ளி சிறார்களின் இல்லமெய்வல்லுநர் விளையாட்டு விழா முன்பள்ளி வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சிறார்களின் இடைவேளை நிகழ்வையும் விளையாட்டு நிகழ்வொன்றையும் படங்களில் காணலாம். (படங்கள்: பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இந்திய பிரதமர் மோடி 14ல் தலைமன்னாருக்கு வருவார்

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி, எதிர்வரும் 14 ஆம் திகதி தலைமன்னார் பியர் கிராமத்துக்கு வருகை தரவுள்ள நிலையில் அவரது விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுவதாக கைத்தொழில் வணிகத் துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

இந்திய பிரதமரின் மன்னார் விஜயம் தொடரபான நிகழ்ச்சி ஏற்பாடுகள் குறித்து மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கை வரும் இந்திய பிரதமர், இந்திய அரசாங்கத்தின் நிதியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள மடு - தலைமன்னார் புகையிரத சேவையை வைபவ ரீதியாக 14 ஆம் திகதி காலை 10.45 மணிக்கு ஆரம்பித்து வைப்பார். இந்த ஆரம்ப நிகழ்வு தலைமன்னார் பியர் புகையிரத நிலையத்திலிருந்து இடம்பெறும்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு இப்பிரதேசத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இந்நிகழ்வில், வன்னி மாவட்டத்தின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபையின் உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள், அரச திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அவர் இதன் போது தெரிவித்தார். (அ)

# பெண்ணின் கைப்பை வீதியில் அபகரிப்பு

(திருவையாறு)

வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பிள்ளையார் புத்தகக்கடை பெண் உரிமையாளர் ஒருவரின் கைப்பை திருடர்களால் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி கடை உரிமையாளர்கள் தனது புத்தகக்கடையை பூட்டிவிட்டு துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தார்.

அப்போது மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அவரின் துவிச்சக்கரவண்டிக்குள் இருந்த கைப்பையை எடுத்துக்கொண்டு மோட்டார் சைக்கிளில் ஓடி மறைந்தனர்.

நிலைகுலைந்து போன அவர் செய்வதறியாது திகைத்து நின்றார். சன நடமாட்டம் அதிகமுள்ள இவ் வீதியில் இச்சம்பவம் நடந்துள்ளமை அதிர்ச்சி கலந்த உண்மையாகும். அவரது கைப்பையினுள் 22 ஆயிரம் ரூபா பணம், பெறுமதியான கைபேசி, தேசிய அடையாள அட்டை, கடைத்திறப்பு மற்றும் ஆவணங்கள் இருந்துள்ளன. இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (அ-273)

# மின்கட்டணம் செலுத்த வர்த்தக சங்கம் சம்மதம்

(மல்லாவி)

மல்லாவி நகர வர்த்தக சங்கத்தினரால் மல்லாவி நகரப்பகுதியில் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு துணுக்காய் பிரதேச சபையினால் அமைக்கப்படவுள்ள தெரு மின் விளக்குகளுக்குரிய மாதாந்த மின்கட்டணம் செலுத்துவதற்கு முன்வந்துள்ளதாக வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

நீண்ட காலமாக மல்லாவி நகரமக்களாலும் மற்றும் வர்த்தகர்களாலும் துணுக்காய் பிரதேசசபையிடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய துணுக்காய் பிரதேச சபை மல்லாவி நகரத்தில் சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு 40 தெரு மின்விளக்குகளை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்படவுள்ள 40 தெரு விளக்குகளுக்குமான மின்கட்டணமான தலா 130 ரூபாவுக்கு மேற்கொண்ட தொகையாக மொத்தம் 5 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை மாதாந்தம் மின்சார சபைக்கு செலுத்துவதற்கு வர்த்தகர்கள் முன்வந்துள்ளதாக மல்லாவி வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-15)

# வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை

## வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வடமாகாண வைத்தியசாலைகளில் காணப்படும் வைத்தியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருவதாக மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தனக்கு உறுதியளித்துள்ளார் என்று வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வடமாகாணத்தில் 101 வைத்தியசாலைகள் உள்ளன. இவற்றில் வைத்தியர் எவரேனும் இல்லாத 31 வைத்தியசாலைகளும் உள்ளன.

வைத்தியர்கள் இல்லை என்ற போதிலும் 31வைத்தியசாலைகளையும் மூடிவிடாது ஏனைய வைத்தியசாலைகளிலுள்ள வைத்தியர்களை வரவழைத்து சேவைகளை வழங்கி வருகின்றோம்.

அண்மையில் சுகாதார அமைச்சருக்கும் மாகாண சுகாதார அமைச்சர்களுக்கும் இடையேயான கலந்துரையாடலொன்று கொழும்பில் நடைபெற்றது. இதன்போது, வடமாகாண வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாக கோரிக்கை விடுத்திருந்தோம்.

31 வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இல்லையென்பதை ஆச்சரியமாகக் கேட்ட சுகாதார அமைச்சர், வைத்தியர்களாக வெளியேறுபவர்களை மேற்படி 31 வைத்தியசாலைகளுக்கும் தலா ஒருவர் வீதம் இம்மாத இறுதியில் நியமிப்பதாக உறுதியளித்தார் எனஅவர் மேலும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியை கொல்லக்கூடாது அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்.
- சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்

பட்டினத்தடிகள் பற்றி அறியாதவர்கள் இருக்க முடியாது. உடற்கூற்று வண்ணத்தில் மனித உற்பவம் முதல் இறப்பு வரையான அத்தனை விடயங்களையும் பாடியவர்.

இது தவிர துறவுவாழ்வை மேற்கொண்டு இந்த உலகில் பற்றறுக்கும் வழிகளை திருப்பாடல்களாகப் பொழிந்தவர்.

பட்டினத்தடிகளின் திருப்பாடல்களைப் படித்துப் புரிந்து கொண்டவர்கள், நிலையற்ற பொருள்களை நிலையானவை என்று ஒரு போதும் எண்ணார். இவ்வாறு முற்றும் துறந்த பட்டினத்தடிகள் **தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச்சுடும்** என்றார். இதற்குள் இருக்கக் சுவடிய கதை நீங்கள் அறிந்ததே.

ஆக, ஓட்டப்பம் வீட்டைச் சுடுமோ இல்லையோ தன்வினை தன்னைச்சுடும் என்பது நூறு வீதம் உண்மையானது.

தன்வினை தன்னைச்சுடும் என்ற பட்டினத்தடிகளின் வாக்கும்; நீ எதனால் அளக்கிறாயோ அதனால் நீ அளக்கப்படுவாய் என்ற யேசுபிரானின் போதனையும்; ஊழிற் பெருவலி முந்துறும் என்ற வள்ளுவன் வாக்கும் ஒத்ததன்மை கொண்டவை.

ஆக, தன்வினை தன்னைச்சுடும் என்ற நியதி தற்போது இலங்கையில் ஆரம்பமாயிற்று.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. நீதிமன்றத்தின் தடை உத்தரவு நிச்சயம் கோத்தபாயவுக்கு பயங்கரமான கடுப்பை – கோபத்தை – ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கும்.

ஆனாலும் எதுவும் செய்ய முடியாது. நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தால் அதனை சிரமேற்கொண்டு நிறைவேற்றுவது அனைவரதும் கடமையாகும். எனவே நீதிமன்றத்தின் உத்தரவுப்படி கோத்தபாய ராஜபக்ஷ வெளிநாடு செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி கோத்தபாய ராஜபக்ஷ மீதான குற்றச்சாட்டுக்கள் இனிமேல் தான் வெளிப்படும். இந்தநாட்டில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்தார்.

அவர் நினைத்தால் மட்டுமே எதுவும் நடக்கும் என்ற நிலைமை இருந்தது. கைதிகளின் விடுதலை, படைத்தரப்பின் நில ஆக்கிரமிப்பு எனப் பாதுகாப்புத் தரப்போடு சம்பந்தப்பட்ட அத்தனை விடயங்களிலும் கோத்தபாய ராஜபக்ஷவின் அதிகாரமே கோலோச்சியது.

படைத்தரப்பு சார்ந்த விடயங்கள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கதைத்தால்; அவர்கூட, கோத்தபாயவுடன் கதைத்துவிட்டுக் கூறுகிறேன் என்று பதில் அளித்த சம்பவங்கள் பல உண்டு.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக இருந்த கோத்தபாய எப்படியெல்லாம் நடந்து கொண்டார். எத்தனையோபேரின் வெளிநாட்டுப் பயணங்களைத் தடுத்தார். தனக்கு எதிரானவர்கள் என்று யாரைக்கருதினாலும் அவர்களை ஏதோ ஒரு வகையில் சிறையில் அடைத்து வதைத்தார். இது போன்ற பல சம்பவங்களை அரங்கேற்றி மகிழ்ந்தார்.

ஆனால், இப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் என்ற பதவியை கோத்தபாய இழந்துள்ளார். பதவியிழப்பு என்பதே அவர்செய்த வினைப்பயன் என்றறிவது அவசியம். கூடவே அவரின் அண்ணன் மகிந்தராஜபக்ஷ ஜனாதிபதி பதவியைப் பறிகொடுத்து வீட்டில் இருக்கும் துன்பம் சாதாரணமானதன்று.

என் தம்பிகளால் தான் எனக்கு இக்கதி என்று அவர் நினைப்பாராயின் அக்கணமே தம்பி கோத்தபாயவின் – பஷிலின் பாடெல்லாம் வீணாகிப் போகும். நிலைமை இதுமட்டும் என்றில்லை. தான் செய்த வினை எந்தளவோ அந்தளவிற்கு அந்தவினை அவரைக் சுட்டெரிக்கும்.

இதைத்தான் பட்டினத்தார் தன்வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச்சுடும் என்று உரைத்தார்.

# இந்தியப் பிரதமர் மோடிக்கு சைவ மகா சபை மகஜர்

அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமற் போனோருக்கான தீர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தியப் பிரதமர் நரேந்தர மோடிக்கு அகில இலங்கை சைவ மகா சபை மகஜர் ஒன்றை யாழ். இந்தியத் துணைத்தூதரகம் ஊடாக அனுப்பி வைத்துள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை வாழ் சைவத்தமிழ் இந்துக்களாகிய நாங்கள் உலகின் மிக அதிகளவிலான இந்துகள் வாழ்கின்றதும் தென்னாசியாவின் கலாசாரத்தில் தோற்றுவாயாகவும் இருக்கின்ற இந்திய திருநாட்டினை வழிநடத்துகின்ற பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு எமது மன உணர்வுகளை இலங்கைக்கு விஜயம் செய்ய இருக்கின்ற இந்தத் தருணத்தில் வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கின்றோம்.

முதலில் பல்லாயிரம் வருடங்களாக இந்திய திருநாட்டின் தொப்புள்கொடி உறவுகளுடன் விளங்குகின்ற சிவபூமி என திருமூலர் என்ற இந்திய மெய்ஞ் ஞானியால் அழைக்கப்பட்ட எமது தாய்த்திருநாட்டில் அதிலும் சிறப்பாக சைவத்தமிழ் இந்துக்களின் கலாசாரத் திருநகரான யாழ்ப்பாணத்திற்கு இந்திய பிரதமர் ஒருவர் முதல் முதலில் வருகை தருவதை இட்டு மட்டற்ற மகிழ்ச்சியுடன் வரவேற்பதோடு உளமார்ந்த நன்றிய றிதலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஓர் நூற்றாண்டிற்கு முன்பு சுவாமி விவேகானந்தர் எமது மண்ணில் கால் பதித்து ஓர் ஆன்மீக எழுச்சியை உருவாக்கியது போல அவருடைய வழித் தடங்களிலே பயணிக்கும் இந்துப் பண்பாட்டின் நவயுகபாது காவலரான தங்கள் வருகையும் ஈழம் வாழ் சைவத்தமிழ் இந்துக்களுடைய வாழ்வின் மறுமலர்ச்சியை ஏற்படுத்த மகாதேவனாகிய சிவபெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலை நாட்டினருடைய காலனித்துவ ஆட்சியின் கீழ் எம்மை நாமே ஆளுகின்ற சுயநிர்ணய உரிமையை இழந்துவிட்ட பூர்வீக சைவத்தமிழ் இந்துக்களாகிய நாம் எமது சகோதர இனத்தவர்களுடன் இழந்துவிட்ட எமது சுயநிர்ணய உரிமைக்காக அரை நூற்றாண்டு காலம் அறவழியிலும் மறவழியிலும் போராடி மிகவும் களைப்படைந்து விட்டோம். இந்த நிலையில் தாழ்வுற்று வறுமைமிஞ்சி இழப்பதற்கு இனி எதுவுமே இல்லை எனும் நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எமது இனத்தின் தலைவிதியை மாற்றுவதில் தங்களின் உன்னதமான பங்களிப்பை நாடிநிற் கிறோம்.

அந்த ரீதியில் எமது இந்து தத்துவங்களின் போதிக்கினற உரிய வாழ்வு நெறியான சுயாதீனமான வாழ்விற்கு எமது மக்கள் குழுமத்திற்கு உள்ள உரித்தான சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து எமது பூர்வீக நிலத்தில் எமது பண்பாட்டுக் கோலங்களுக்கு முதனமை அளிக்கினற ஆட்சி முறையை ஏற்படுத்தி சரிநிகர் சமமாக வாழ வழிவகை செய்வதற்கு இலங்கை அரசிற்கு பரிந்துரையும் அழுத்தமும் வழங்க வேண்டும் என முதற்கண் எதிர்பார்த்து நிற்கின்றோம்.

புதிய ஆட்சிமாற்றம் நடைபெற்று மாற்றங்கள் பற்றிபேசப்படுகின்ற இலங்கைத்தீவில் யுத்தத்தின் நேரடி சாட்சியங்களான கைதிகள், காணாமற் போனோர், அகதிகள் வாழ்வில் எந்தவொரு மாற்றமும் இல்லாது இருப்பது வேதனை தரும் தொடர்கதையாக இருக்கின்றது. தாங்கள் வருகையின் போது இவர்களின் வாழ்வில் புது நம்பிக்கையை உருவாக்கும் வகையில் அரசியற் கைதிகள் யாவரும் விடுதலை செய்யப்பட்டு காணாமற் போனவர்கள் பிரச்சினை தீர்க்கப்பட்டு அகதிகள் யாவரும் தங்கள் சொந்த நிலங்களில் மீள் குடியேற்றப்படுவார்களேயானால் காயம்பட்ட மனங்களுக்கு ஒத்தடம் கொடுப்பதாக அமையும். அது மட்டுமின்றி பரஸ்பர நம்பிக்கையுடனும் பகையுடனும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்த நாட்டின் இனங்களிடையே உண்மையான நல்லுறவைக் கட்டியெழுப்பவும் வழிசெய்யும். வரலாற்று முக்கியமான தருணத்தில் நடைபெறும் தங்கள் வருகையானது ஈழத்தின் சைவத்தமிழ் இந்துகளின் மட்டுமனறி முழுதீவிலும் வாழும் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து நிற்கின்றோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## முன்னெச்சரிக்கை கோபுரம் பரிசோதித்தல்

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். மாவட்டத்தில் உடுத்துறை, மணற்காடு, வல்வெட்டித்துறை, சுப்பர் மடம், நெடுந்தீவு ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள முன்னெச்சரிக்கை கோபுரங்களை இன்றும் நாளையும் பரிசோதனை செய்யவேண்டியிருப்பதால் இது தொடர்பில் பொதுமக்கள் அமைதி யாக இருக்குமாறும் இது பரீட்சார்த்தச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்ப மடையத் தேவையில்லை எனவும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பொது மக்க ளுக்கு அறிவித்துள்ளார். (இ

## இந்துக்களின் குரல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இந்துத் தேசிய மாத இதழான இந்துக்களின் குரல் வெளிவந்துள்ளது. இந்துக்களின் மெய்ஞ்ஞானச் சிந்தனைகள், இந்து தத்துவம்–பரந்த மனப்பான்மை போன்ற கட்டுரைகள் சிந்திக்கத் தூண்டுபவையாக வெளிவந்துள்ளன. (இ-3)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி சி.சி.தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமா[illegible] கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

# நெல்லை விற்பனை செய்வதில் தொடர்ந்தும் காலதாமதம்

## விவசாயிகள் கவலை

(ஜெயந்திநகர்)

விவசாயிகளுக்கென முன்னுரிமைப்படுத்தப்பட்டு நெல் கொள்வனவு விலை நிர்ணயிக்கப்பட்டு மாவட்டம் தோறும் நெல் கொள்வனவு செய்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் பணியாளர்கள் குறைவாகவுள்ளதனால் வடபகுதியெங்கும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் நெல் விற்பனை செய்வதில் விவசாயிகள் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பிரதேசத்தில் அறுவடை செய்யப்பட்ட நெல்விலை கொள்வனவு செய்வதற்கு ஒரு பொறுப்பதிகாரியே உள்ளதனால் விவ சாயிகள் நெல் களஞ்சியத்தில் தினமும் காலையில் இருந்து மாலை வரை வரிசையாக நிற்பதுடன் பொதியிடல் பைகளை பெறுவதிலும் கூட அவதியுறுகின்றனர்.

காலபோக அறுவடை முடிந்து ஒரு மாதம் கடந்தும் சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்படவுள்ள இன்றைய சூழல் வரை காலபோக நெல்லை விற்பனை செய்யமுடியாத நிலை உள்ளதால் நெல் உற்பத்தி செலவு அறுவடைச் செலவு மீள் உற்பத்திக்கான ஆரம்பச் செலவு என்பவற்றை ஈடு செய்ய முடியாமல் விவசாயிகள் அவதியுறுகின்றனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி விரைவான நெல் கொள்வனவுக்கு வழிசமைக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-284)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### பக்தியின் பக்கம் மனம்



✦ முதலில் உன்னை நீ அறிந்து கொள். அதன் பின், கடவுளை அறியலாம்.

✦ கடவுளின் கருணை என்னும் காற்றானது, எப்போதும் உன் பக்கம் வீசிக் கொண்டு தான் இருக்கிறது.

✦ தீவிர அன்பு இருக்குமானால், உனக்கு கடவுளின் தரிசனம் கிடைப்பது உறுதி. எங்கும் அன்பு, எதிலும் அன்பாயிரு.

✦ தனிமையில் இருக்கும் போதும் மனதால் கூட பாவச்செயலில் ஈடுபடாத மனிதனே தர்மவான்.

✦ மனதை பக்தியின் பக்கம் திருப்பு. ஆனால், மூடத்தனத்திற்கு சிறிதும் இடம் அளிக்காதே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தவான் சதம்

# அயர்லாந்தை வென்றது இந்தியா



உலகக் கிண்ண கிரிக்கெட் லீக்கின் நேற்றைய ஆட்டத்தில், அயர்லாந்து அணியை இந்தியா 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது.

இந்தியா- அயர்லாந்து அணிகள் மோதும் உலகக் கிண்ண லீக் போட்டி நியூசிலாந்தின் ஹாமில்டனில் நேற்று நடைபெற்றது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற அயர்லாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

அயர்லாந்து அணிக்கு போர்டர்பீல்டு, ஸ்டெர்லிங் ஜோடி சிறப்பான தொடக்கம் தந்தது. 15 ஆவது ஓவரில் அஸ்வினின் சுழலில் ஸ்டெர்லிங் 42 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்தார்.

ரெய்னா 'சுழலில்' ஜாய்ஸ்(2) ஆட்டமிழந்தார். தொடர்ந்து அசத்திய போர்டர்பீல்டு அரை சதம் அடித்தார், இவர் 67 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதற்குப் பிறகும் 38 ஓவர்கள் வரை சிறப்பாகவே ஆடி வந்த அயர்லாந்து அணி ஒரு ஓவருக்கு சராசரியாக 5 ஓட்டங்களுக்கு குறையாமல் சேர்த்து வந்தது.

ஆனால் 39 ஆவது ஓவரின் கடைசி பந்தில் இருந்து அடுத் தடுத்து ஆட்டமிழக்க 49 ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 259 ஓட்டங்களை எடுத்துள்ளது.



இதனைத் தொடர்ந்து 260 ஓட்டங்கள் இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 36.5 ஓவர்க ளில் 2 விக்கெட்டுகளை இழந்து 260 ஓட்டங்கள் எடுத்தது.

இதனால் அயர்லாந்து அணியை 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்ததி இந்தியா வெற்றி பெற்றது.

இந்திய அணியில் தவான்சதம் அடித்தார். கோலி 44 ஓட்டங்கள், ரஹானே 33ஓட்டங்கள்குவித்து இந்தியாவை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றனர். மேலும் முகமது சமி 3விக்கெட்டுக்களையும் அஸ்வின் 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

உமேஷ்யாதவ், மோஹித் சர்மா, ரவீந்திரஜடேஜா, சரேஷ் ரெய்னா ஆகியோர் தலாஒருவிக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக சதம் அடித்த இந்திய அணியின் தவான் தெரிவானார். (க)




# சங்கக்காரவைப் பார்த்து எதிரணி அச்சப்படுகின்றது

## முரளி தெரிவிப்பு



இந்திய அணியின்விராட்கோலியை விட இலங்கையின் குமார் சங்ககாரவை பார்த்துதான் எதிரணிகள் பயப்படுவதாக இலங்கை அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் முத்தையா முரளிதரன் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ், அவுஸ்திரேலியாவின் மக்ஸ் வெல்லைவிடவும் குமார் சங்கக்காரதான் ஆபத்தான துடுப்பாட்ட வீரர்.

அவுஸ்திரேலிய அணியுடன் இலங்கை தோல்வியடைந்திருந்தாலும் அதன் ஆட்டத்திறன் சிறப்பாக இருந்தது.

இலங்கை அணியின் பந்து வீச்சாளர்கள் அதிக ஓட்டங்களை வாரிக கொடுத்திருந்தாலும், துடுப்பாட்ட வீரர்கள் தக்க பதிலடி கொடுத்தனர். 40 ஆவது ஓவர்கள் வரை, அவுஸ்திரேலிய அணியை அச்சுறுத்தியபடியே இலங்கை அணி இருந்தது.

குமார் சங்ககாரதான் தற்போது, உலகின் நம்பர் 1 பட்ஸ்மேன். விராட் கோலி, டி வில்லியர்ஸ், மக்ஸ்வெல் பற்றி என்னதான் பெருமையாக பேசினாலும், தற்போதைய டொப் பட்ஸ்மேன் சங்ககாரதான்.

ஏனைய வீரர்கள் சிறப்பாக விளையாடியிருந்தாலும், ஒரு வீரரை பார்த்து பிற அணிகள் அச்சப்ப டுகின்றன என்றால், அது சங்ககாரவை பார்த்துதான் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, உலகக் கிண்ண போட்டியில் சங்கக்கார அடுத்தடுத்து 3 போட்டிகளில் சதம் அடித்துள்ளார். இதன் மூலம், உலகக் கிண்ண வரலாற்றில் இந்த சாதனையை படைத்த முதல் வீரர் என்ற பெருமையை சங்ககார பெற்றுள்ளார்.

உலகக் கிண்ண போட்டியில் தொடர்ந்து மூன்று சதங்களை அடிப்பது சாதாரண விடயம் கிடையாது. அதிலும், பந்துக்கு ஏற்ப ஓட்டங்களை சேர்ப்பது மிகவும் சிரமம. அதை சங்ககார சாதித்து காண்பித்துள்ளார். (க)

# இந்திய ரசிகன் கலர்புல்லை காப்பாற்றிய சச்சினின் கடிதம்

இந்திய அணியின் கிரிக்கெட் ஜாம்பவான் சச்சினுக்கு உலகம் முழுவதும் தீவிர ரசிகர்கள் இருக்கிறார்கள். அந்த தீவிர ரசிகர்களில் ஒருவரான சுதிர் கவுதம் என்பவரை சச்சினின் கடிதம் காப்பாற்றியுள்ளது.

குடிவரவு சட்டங்களை கொண்ட நாடு நியூசிலாந்து. அந்த நாட்டிற்கு சுதிர் கௌதம் உடம்பு முழுவதும் சாயங்களை பூசிக்கொண்டு உலகக் கிண்ண போட்டியை காண்பதற்காக சென்றுள்ளார்.

ஆக்லாந்து விமானநிலையத்தில் களமிறங்கிய போது உடம்பில் மூவர்ண நிறம் பூசி, தலையில் இந்தியா போல 'ஹேர் கட்' செய்திருந்த கவுதமை மடக்கிப்பிடித்த அதிகாரிகள் அவரிடம் இருந்த பெயிண்ட் போத்தல்களைப் பறிமுதல் செய்து 65 ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டினால் தான் விடுவோம் என்று கூறியுள்ளனர்.

இந்நிலையில், சச்சின் தனக்கு அனுப்பிய கடிதம் நினைவுக்கு வரவே உடனே அதை எடுத்து அதிகாரிகளிடம் காட்டியுள்ளார், இதனைத் தொடர்நது அதிகாரிகளும் அவரை விட்டுள்ளனர். (கவுதம் வெளிநாடு விசா வாங்கியதே அதை வைத்துதான்! இதுதான் அவரது முதல் வெளிநாட்டுப் பயணம்!)

இது குறித்து சுதிர் குமார் சவுத்ரி கூறுகையில், அபராதம் கட்டுமாறு கூறியதும் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. என்னிடம் அவ்வளவு பணம் கிடையாது. இந்திய அணியின் தீவிர ரசிகன் நான், எங்கு சென்றாலும் இப்படித் தான் செல்வேன் என்று கூறியுள்ளார். (க)



# புதிய சாதனையை படைத்தது இந்தியா!

உலகக் கிண்ண லீக் போட்டியில் இந்திய அணி புதிய சாதனையை படைத்துள்ளது.

2015 ஆம் ஆண்டுக்கான உலகக கிண்ண லீக் போட்டியில் தொடர்ந்து 5 அணிகளை ஓல் அவுட் செய்து நியூசிலாந்து சாதனை படைத்தது.

தற்போது இந்த சாதனையை சமன் செய்துள்ளது இந்தியா.

நியூசிலாந்தின் ஹாமில்டன் நகரில் நடந்த போட்டியில் இந்தியா- அயர்லாந்து அணிகள் மோதுன.

முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து, இறுதியில் 49 ஓவர்க ளில் 259 ஓட்டங்களை எடுத்து ஓல் அவுட் ஆனது.

இந்த உலகக் கிண்ணத் தொடரில் இந்திய அணி தொடர்ந்து ஐந்தாவது முறையாக எதிர் அணியை ஓல்அவுட் ஆக்கி புதிய சாதனையை படைத்துள்ளது.

பாகிஸ்தான் 224 ஓட்டங்கள், தென் ஆப்பிரிக்கா 177 ஓட்டங்கள், யு.ஏ.இ- 102 ஓட்டங்கள், மேற்கிந்திய தீவுகள்- 182 ஓட்டங்கள், அயர்லாந்து- 259 ஓட்டங்கள்

இதற்கு முன் நியூசிலாந்து அணியும் 5 போட்டிகளில் தொடர்ச்சியாக எதிரணிகளை ஓல் அவுட் செய்து [illegible] (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான நேற்றைய சந்திப்பு குறித்து குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கு 2013 இல் விஜயம் செய்த தருணத்திலிருந்து இலங்கையின் கடந்த கால விவகாரங்களுக்கு தீர்வு காண உதவுவது குறித்தும், அந்த நாட்டிற்கு சிறந்த எதிர்காலம் அமைய உதவுவது குறித்தும் நான் உறுதியாக இருக்கிறேன்.

எனது விஜயத்தின் பின்னர் மோதலில் ஈடுபட்ட சகல தரப்பினரும் இழைத்துள்ள யுத்த குற்றங்கள் குறித்து ஐக்கிய நாடுகள் விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

மேலும் அந்த நாட்டு மக்கள் புதிய ஜனாதிபதி ஒருவரை தெரிவு செய்துள்ளனர். அவர் நல்லிணக்கம் மற்றும் சீர்திருத்தங்கள் குறித்த தனது முழுமையான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

**முதல் சந்திப்பு**

அரசியல், பொருளாதார சமூக சீர்திருத்தங்கள் மூலமாகவும், கடந்த கால விவகாரங்களுக்கு வெளிப்படையாகவும், நேர்மையாகவும் தீர்வு காண்பதன் மூலமாகவும் இலங்கைக்குள்ள பாரிய சாத்தியப்பாடுகளை பயன்படுத்த முனைவதற்கு புதிய அரசாங்கத்திற்கு உண்மையாக வாய்ப்பு கிடைத்துள்ளது.

இலங்கையின் புதிய ஜனாதிபதியுடனான முதலாவது சந்திப்பின் போது அவருக்கான எனது செய்தி இதுவாகவே அமைந்திருக்கும்.

இராணுவத்தினரின் பிடியில் உள்ள நிலங்களை விடுவிப்பது, இராணுவ ஆளுநர்களை நீக்குவது, தமிழர் விவகாரங்கள் குறித்து ஆராய்வதற்காக வடக்குக்கு சென்றமை போன்ற நம்பிக்கையளிக்க கூடிய நடவடிக்கைகளை அவர் ஏற்கெனவே எடுத்துள்ளார்.

அவருக்கு முன்னர் இலங்கை ஜனாதிபதியாக பதவி வகித்த மகிந்த ராஜபக்ஷவிற்கு முற்றிலும் மாறான விதத்தில் சிறிசேன எடுத்துள்ள வெளிப்படையான முற்போக்கான நடவடிக்கைகளுக்கு பதிலாகவே ஐக்கிய நாடுகள் விசாரணை அறிக்கையை வெளியிடுவதை மேலும் ஆறு மாதங்களுக்கு பிற்போடுவது குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் யோசனைக்கு நாங்கள் ஆதரவளித்தோம்.

இலங்கையில் நேர்மையான நல்லிணக்கத்தை காண விரும்புவதாலும், மேலதிக கால அவகாசத்தை வழங்குவது இலங்கை அரசாங்கம் தான் வாக்குறுதியளித்துள்ளபடி ஐக்கிய நாடுகளுடன் ஒத்துழைப்பதற்கு வழிவகுக்கும் என்பதாலும், இலங்கை அரசாங்கம் நம்பகத்தன்மைமிக்க உள்நாட்டு பொறிமுறை ஒன்றை உருவாக்க உதவுவதற்குமே நாங்கள் இதற்கு ஆதரவளித்தோம்.

இலங்கை ஜனாதிபதியால் தன்னுடைய சீர்திருத்தங்களை முன்னெடுக்க முடியுமானால் அவரால் நிச்சயமாக யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள காயங்களை ஆற்றமுடியும்,

ஒரு வருட காலத்திற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நான் சந்தித்தவர்களின் முகங்களை என்னால் மறக்க முடியாது. தாங்க முடியாத துயரங்கள் மற்றும் இழப்புகள் குறித்து அவர்களது கதைகள் என்றும் என் மனதில் தங்கியிருந்து மாற்றங்களுக்கான முயற்சிகளை முன்னெடுக்கச் செய்யும்.

நான் அங்கு கேட்டதும் பார்த்ததும், நான் ஏன் அங்கு சென்றேன் என்பதை சுட்டிக்காட்டும் விடயமாக அமைந்துள்ளது.

அங்கு அவ்வேளை முன்னேற்றங்கள் எதுவும் காணப்படவில்லை என்பதை வெளியுலகிற்கு தெரியப்படுத்தவும், சீர்திருத்தங்களுக்கான சர்வதேச அழுத்தங்களை ஏற்படுத்துவதற்காகவுமே நான் யாழ்ப்பாணம் சென்றேன்.

இலங்கை முழுவதிலும் உள்ள பாதிக்கப்பட்டவர்களுக்காக நாங்கள் அதற்கு காரணமானவர்களை பொறுப்புக் கூறச்செய்ய வேண்டும்.

அதனை நாங்கள் மறக்க மாட்டோம, அதன் காரணமாகவே 2015 செப்ரெம்பருக்குள் ஐ.நா விசாரணை அறிக்கை வெளியாகி அது குறித்து விவாதிக்கப்படவேண்டும் என நாங்களும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரும் தெளிவாக தெரிவித்துள்ளோம். நாங்கள் அதனை பின்பற்றுவோம்.

இன்னும் ஆறு மாத காலத்துக்கு பின்னர் உலகின் கவனம் மீண்டும் இலங்கை மீது விழும் எனத் தெரிவித்துள்ளார். (எ-11)

## சுஷ்மாவிடம்...

என்று கருத்து தெரிவித்திருந்தார்.

இதற்கு, தமிழக அரசியல் கட்சி தலைவர்களும், மீனவர் அமைப்பினரும் கடும் கண்டனம் தெரிவித்தனர். மேலும், டெல்லியில் மக்களவை உறுப்பினர்கள் இந்த பிரச்சினையை எழுப்பினர்.

அப்போது, மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்து பேசும்போது, தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டும். இரு நாடுகளும் அடுத்தவரது மீனவர்களை சுட்டுக்கொல்வது உரிய தீர்வு அல்ல.

கடந்த வாரம் இலங்கை சென்றிருந்த நான், அந்நாட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த போது, அவரது கருத்துக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்தேன். அவர், தமிழக மீனவர்களையும், கேரளாவில் மீனவர்களை சுட்டுக்கொன்று கைது செய்யப்பட்ட இத்தாலி கப்பல் மாலுமிகளையும் ஒப்பிட்டு இருப்பது சரியல்ல என்றும் அவரிடம் கூறினேன்.

அதற்கு, தான் உண்மை நிலைவரம் தெரியாமல் பேசிவிட்டதாகவும், அப்படி பேசி இருக்கக்கூடாது என்றும் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் வருத்தம் தெரிவித்தார். மேலும், ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு மாறுவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

பணம் ஒன்றும் பெரிய விடயம் அல்ல. ஆழ்கடல் மீன் பிடிப்புக்காக, சிறப்பு திட்டம் ஒன்றை விரைவில் மத்திய அரசு உருவாக்கும். ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு மாறும்வரை இந்தப பிரச்சினை மனிதாபிமானத்துடன் அணுகப்பட வேண்டும் என்றார். (எ-11)

## அபிவிருத்திக்கு...

பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையுடன் மிக நெருங்கி நட்புறவை பேணி வந்த ஜப்பான் தொடர்ந்தும் இவ்வுறவை பேணும் என்றும் இலங்கையின் அபிவிருத்திப் பணிகளில் தொடர்ந்தும் ஜப்பான் அரசு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய ஒற்றுமைக்காக தற்போதைய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்றும் தான் அதனைப் பாராட்டுவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## உதவி...

ரிக்க இராஜாங்கத் திணைக்கள பிராந்திய வலய பிரதிப் பணிப்பாளர் நீல் க்ரோமாஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் கல்கத்தா நகரில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா பூரண ஒத்துழைப்பு வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

## ஐ.தே.கவில்...

ளுமன்ற உறுப்பினர் ஹெகலிய ரம்புக்வெல, புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்ணான்டோ, காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார ஆகியோரே இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி இவர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் யானை சின்னத்திலேயே போட்டியிடவுள்ளனர் என ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-11)

## சிறுபான்மை...

த்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சி மாற்றம் தேவை. என்பதை சிறுபான்மை மக்கள் தெரிவு செய்தார்கள். அந்த மாற்றத்தினூடாக நிலையான இனப் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை கைவிட்டுப் போய்விட்டது.

இன்று வட மாகாண முதலமைச்சரை பொய்க்காரன் என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். அதே போல் அத்துமீறும் இந்திய மீனவர்களை சுட்டுத்தள்ளுவது சரி என்று தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பு 'தலைவர் சம்பந்தனுக்கும் வடமாகாண முதலமைச் சர் விக்கினேஸ்வரனுக்கும் இடையில் விரிசலை ஏற்படுத்துகிறார்.

கருணாவை பிரித்து பிரபாகரனை வீழ்த்தியதை மீண்டும் செய்ய முயல்கின்றார். இதற்காகவா தமிழ் மக்கள் வாக்களித்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

ஐ.நா விசாரணை அறிக்கையை தள்ளிப் போடுவதன் மூலமாக சிங்கள மக்களை விக்கிரமசிங்க திருப்திப்படுத்தப் பார்க்கின்றார். அதற்கு தலைவர் சம்பந்தன் தாமதப்படுத்துவதன் மூலமாக மேலும் பல உண்மைகளை கொண்டு வரலாம் என்று சொல்கின்றார்.

யுத்தம் முடிவுற்று ஐந்து வருடத்திற்கு பின்பும் தாமதப்படுத்துவதன் மூலம் சாட்சிகள் அழிக்கப்படுமேயொழிய புதியதாக எதுவும் கிடைக்கப்பெறாது என்பதை தெரிந்து கொண்டும் சுமந்திரனின் வலையில் சம்பந்தன் விழுந்து விட்டாரா?

காணாமல் போனோரை கண்டுபிடித்து தருகிறோம் என்று 2007 களிலே ஆர்ப்பாட்டம் செய்து மகள வாக்குகளை காவிக்கொண்ட வரகள் இன்று அவர்களது அரசாங்கம் வந்து விட்ட பொழுதும் காணாமல் போனவர்களைப் பற்றி வாய் திறக்காமல் இருக்கின்றார்கள்.

பயங்கரவாத தடை சட்டத்தினூடாக தமிழ் கைதிகளை வைத்து ஆர்ப்பாட்டம் செய்து அரசியல் இலாபம் பெற்றுக் கொண்டவர்கள் இன்று ரணில் விக்கிரமசிங்கவின் காலடியில் விழுந்து கிடக்கிறார்கள்.

அடுத்த தேர்தலில் தனக்கும் தனது சகாக்களுக்கும் ஐக்கிய தேசிய கட்சி பட்டியலில் இடம் கிடைப்பதற்காக தாம் போட்ட வேடத்தினை கலைத்து நிற்கின்றார்கள்.

இப்படியானவர்களின் போலி அரசியலை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அநீதிக்கு உள்ளே சென்று எமது மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுத்ததை மக்கள் மறந்து விடக்கூடாது என குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# இலங்கை அணியுடன் குசால் பெரேரா இணைவு



உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் விளையாடி வரும் இலங்கை அணியில், காயம் அடைந்த தினேஷ் சந்திமாலுக்கு பதிலாக குசால் பெரேராவை அணியில் சேர்த்துக்கொள்ள ஐ.சி.சி.யின் தொழில் நுட்பக் குழு அனுமதித்துள்ளது.

இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர் தினேஷ் சந்திமால் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியின்போது தொடைப்பகுதியில் காயம் அடைந்தார். மருத்துவ பரிசோதனையில் அவர் தொடர்ந்து விளையாட முடியாது என தெரிவிக்கப்பட்டதால் அவருக்கு பதிலாக மாற்று வீரராக குசால் பெரேராவை அணியில் சேர்த்துக்கொள்ள இலங்கை அணி அனுமதி கோரியிருந்தது.

இதற்கு ஐ.சி.சி.யின் தொழில் நுட்ப குழு அனுமதி அளித்துவிட்டது. குசால் பெரேரா இலங்கை அணிக்காக 41 ஒரு நாள் போட்டியில் விளையாடி 839 ஓட்டங்களை எடுத்துள்ளார். (க)

## ஜனாதிபதிக்கு...

திபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக பிரிட்டிஷ் புலம்பெயர் தமிழர் அமைப்புகளால் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்கு முன்பாக வெஸ்ட்மின்ஸ்டர் அபே முன்றலில் பிரித்தானிய தமிழர் பேரவை ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

அதன் தொடர்ச்சியாக, காமன்வெல்த் தலைமையகமான மார்ல்பரோ ஹவுஸ் முன்றலில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் தமிழ் இளையோர் அமைப்பும் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கையில் ஆட்சி மாறினாலும் ஆட்சியாளர்கள் மாறவில்லை என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறினர். முன்னைய அரசாங்கத்தில் இருந்த அதே தலைவர்களே புதிய அரசாங்கத்திலும் இருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

இலங்கையில் இறுதி யுத்தத்தின் போது நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றங்களுக்கு உரிய விசாரணை நடத்தவும் கைது செய்யப்பட்டு காணாமல்போனவர்கள் தொடர்பான விபரங்களை வெளியிடுவதற்கும் புதிய அரசாங்கமும் தவறிவருவதாக பிரித்தானிய தமிழர் பேரவையின் ஊடகத் துறைகுப் பொறுப்பான சாம் சுதா தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னரும், இலங்கையில் தமிழர்கள் கைது செய்யப்படுவது நிறுத்தப்படவில்லை என்றும் அவர் கூறினார். (எ-11)

## தடுத்து...

திகதி கிளிநொச்சிப் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டில் தன்னுடைய 13 வயது மகளுடன் இருந்த போது, அந்த வீட்டை ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் சுற்றி வளைத்து ஜெயக்குமாரியையும் அவருடை மகள் விபூஷிகாவையும் கைது செய்திருந்தனர்.

பயங்கரவாத மீளுருவாக்கத்திற்கு உதவும் வகையில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவருக்கு ஜெயக்குமாரி அடைக்கலம் கொடுத்திருந்தார் என்றும் அந்த சந்தேக நபர் விசாரணைக்காகச்சென்ற படைச சிப்பாய் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைக் காயப்படுத்தினார் என்றும் கூறி ஜெயக்குமாரியும் அவர் மகளும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருடைய மகள் விபூஷிகா சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளின் பொறுப்பில் கிளிநொச்சியில் உளள ஒரு சிறுவர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றார்.

ஜெயக்குமாரி கைது செய்யப்பட்ட காலப்பகுதியில் பயங்கரவாத மீளுருவாக்கத்திற்குப் பலரும் உதவினார்கள் என்ற சந்தேகத்தில் மேலும் சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களில் 13 பேர் தொடர்ந்தும் சிறைச்சாலையில் முறையான நீதி விசாரணையோ பிணையோ இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் குற்றம் சுமத்தியிருந்தனர்.

அத்துடன் ஜெயக்குமாரியை முன்னிலைப்படுத்தி அவரை விடுதலை செய்ய வேண்டும் அல்லது பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என பெண்கள் அமைப்புக்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் குரல் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் இலங்கையில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றத்தையடுத்து செவ்வாயன்று பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி உட்பட 13 பேர் கொழும்பு மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். அவர்களில் 6 பெண்கள் 2 ஆண்கள் உள்ளிட்ட 8 பேரை பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதித்தது.

ஏனைய ஐந்து பேரையும் மேலும் இரண்டு வாரத்திற்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக இந்த வழக்கில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளில் ஒருவராகிய மங்களேஸ்வரி சங்கர் தெரிவித்தார்.

பிணையில் செல்ல அனுதிக்கப்பட்டிருப்பவர்களின் வழக்கு விசாரணை வரும் யூலை மாதம் 7 ஆம திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஜெயக்குமாரி தனது கடவுச் சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், தான் வசிக்கும் மாவட்டத்தில் இருந்து அனுமதி யின்றி வெளி மாவட்டங்களுக்குச் செல்ல முடியாது என்றும் மாதம் ஒரு தடவை அருகில் உள்ள காவல் நிலையத்திற்குச் சென்று கையெழுத்திட வேண்டும் என்றும் நீதிமன்றம் தனது பிணை உத்தரவில் கடும் நிபந்தனைகளை விதித்திருப்பதாகவும் சட்டத்தரணி மங்களேஸ்வரி சங்கர் தெரிவித்தார்.

காணாமல் போயுள்ள தமது மகனைத் தேடிக்கொண்டிருந்த ஜெயக்குமாரி காணாமல் போயிருப்பவர்கள் தொடர்பிலான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் பலவற்றில் தனது 14 வயதுடைய மகளுடன் தொடர்ந்து கலந்துகொண்டு குரல் கொடுத்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைக்காக அவர் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்தமைககாகவும், இலங்கை வந்திருந்த பிரித்தானிய பிரதமரின் கவனத்திற்குக் காணாமல் போனவர்களுடைய பிரச்சினையை கொண்டு செல்வதற்கு அவர் முன்னணியில் இருந்து செயற்பட்டிருந்தமையுமே இவரைக் கைது செய்வதற்கு இலங்கை அரசை தூண்டியிருந்ததாக மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். (எ-11)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தடுத்து வைக்கப்பட்டிருந்த...

மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தினால் நேற்று செவ்வாய்க்கிழமை பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

இவருடன் மேலும் 5 பெண்களும், இரண்டு ஆண்களுமாக 8 பேர் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. இவர்களுடன் ஒன்றரை வயதுடைய குழந்தையொன்றும் வீடு செல்ல வாய்ப்பு கிட்டியுள்ளது.

கணவன், மனைவி, கைக்குழந்தை என 3 பேர் அடங்கிய ஒரு குடும்பமும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த தாயும் கைக்குழந்தையும் பிணையில் செல்கின்றனர். தந்தை மட்டும் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம்

23ஆம் பக்கம் பார்க்க....


## பவளவிழா வாழ்த்து



முன்னாள் பேராயரும் யாழ்.பல்கலைக் கழக முதுகலைமாணி (தமிழ்) வருகை விரிவுரையாளருமான

**பேராயர் கலாநிதி ஜெபநேசன்**

அவர்களின் பவளவிழா சிறக்க உளமார வாழ்த்துகின்றோம்

வாழ்த்துவோர்:-
முதுகலைமாணி (தமிழ்)
உயர்பட்டப்படிப்புகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(சி-330)

## பதவி வெற்றிடங்களும் உடனடி வேலைவாய்ப்புக்களும்

30 ஆண்டுகளாக இயங்கி வரும் எமது Caneadian நிறுவனத்தின் புதிய கிளைகள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய இடங்களில் ஆரம்பமாக இருப்பதால்

- Stock Keeper
- Distuputer
- Supervisor
- Administation
- A.S.M
- Manager

போன்ற பதவிகளுக்கான பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட இருக்கின்றன.

- O/L, A/L முடிந்தவர்களும் உடனே அழையுங்கள்
- O/L சித்தி பெறாதவர்கள் இருப்பாராயின் சில விசேட பதவி வெற்றிடங்கள் உள்ளன
- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

நேர்முக தேர்வுக்கான முகவரி:-No 28, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

Contact:-0770771377, 0771908997, 0779660885

(9744)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af




- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

தைமாத வகுப்புகளுக்கு உடன் அழையுங்கள்

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## VACANCY

இலங்கையில் முன்னணி வகிக்கின்ற நிறுவனமான Granton International (pvt) Ltd இற்கு துடிப்பும் கடினமாக உழைக்கக் கூடிய ஆண், பெண் இருபாலாரும் குறுகிய காலத்தில் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற நினைப்பவர்களிற்கும், மேலதிக கல்வியை தொடர இயலாத இளம் சமுதாயத்திற்கும் அரியதொரு வாய்ப்பு!

- வயதெல்லை:-18-30
- தகைமை:-O/LorA/L
- அனுபவம் அவசியமற்றது
- பயிற்சியின் போது 12,000/= பயிற்சியின் பின் 40,000/=
- Administration
- Customer Service
- Supervisor
- Marketing trainee
- Management trainee

தொடர்பு:-0774458134

(9745)


# 19...

படி விடயம் தொடர்பாக விவாதிக்கப்பட்டு,இறுதிமுடிவு எடுக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்ட வரைவுஜனா திபதிக்கும் கட்சித் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் கூடிய அரசமைப்பு மறு சீரமைப்புக் குழுவும் இதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தேசிய நிறைவேற்றுச் சபையில் இதற்கு அனுமதிகிடைத்ததும், அது எதிர் வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றில் அவசர சட்ட மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளது. தேர்தல் முறைமையில் மாற்றம், அரசமைப்பின் 18 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்தல் ஆகிய விடயங்களும் புதிய சட்டவரைவில் உள்ளடக்கப்படவுள்ளது.

17ஆவது அரசமைப்பின்படி, புதிய சில ஆணைக்குழுக்களும் அமைக்கப்படவுள்ளன. அத்துடன், நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு மூன்றிலிரண்டுபேரின் அனுமதி அவசியம் என்ற விடயமும் 19 ஆவது திருத்தச் சட்ட வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போதைய அரசமைப்பின்படி நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்குரிய அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)


## FRENCH DOCUMENTARIES - JAFFNA

Alliance Française de Jaffna

cordially invites you to the screening of

LITTLE BY LITTLE

Another African documentary by Jean Rouch

(1970, 96 min)

on Thursday 12 March 2015 at 4:00 p.m. at Alliance Française de Jaffna, 61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone : 0212228093

French language. English subtitles. Free entrance.

(9729)

## சாரதி தேவை

ஆறுதல் நிறுவனத்திற்கு சாரதி உடன் தேவை. தகுதியானவர்கள் 18.03. 2015 திகதி 10.00 மணிக்கு உரிய ஆவணங்களுடன் நிறுவனத்திற்கு நேரில் சமுகமளிக்கவும். வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**ஆறுதல் நிறுவனம்**

இல.51, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 221 7092

(சி-326)

## 67ம் ஆண்டை முன்னிட்டு ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸின் அசத்தலான தள்ளுபடி விற்பனை

மலிவு மலிவு மலிவு

20% -50% வரையாக விசேட புத்தக கழிவுகள்....

மருத்துவ நூல்கள் ஆய்வுகூட உபகரணங்கள் நம்பமுடியா விலைக்கழிவில்...

"பிரமாண்டமான காட்சியறை எண்ண முடியாத தெரிவுகள் எண்ணம் போலவே எண்ணற்ற வகைத் தெரிவுகள்..."

மலிவு மலிவு மலிவு

உலக நடைமுறைகள் பொது அறிவுகள், நாவல்கள், சமையல் புத்தகங்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ்...

"பாலர் முதல் பல்கலைக்கழகம் வரையான அரிதான பொக்கிஷ நூல்கள் எண்ணற்ற வகைகளில்"

"இன்றே நாடுங்கள் கழிவினை பெற்றிடுங்கள்"

சொற்ப நாட்களே! இத்தள்ளுபடி முந்துங்கள் வெல்லுங்கள்...

சர்வதேச தரம் வாய்ந்த கோப்புக்கள் அப்பியாசக் கொப்பிகள், ஸ்ரேசனறிப் பொருட்கள் என அனைத்தும் ஒரே கூரையின் கீழ்..



இசைக் கருவிகள், புறொஜெக்டர்கள், வைற்போட்கள், கிறீன் போட்கள், பிளிப்சாட், ஸ்கிறீன் வகைகள் இன்னும் பற் பல..

மொத்தமாக கொள்வனவு செய்யும் திணைக்களங்கள், பாடசாலைகளுக்கு விசேட போக்குவரத்து வசதிகள்... (நிபந்தனை உண்டு)

"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"

இல.212 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:-021 222 5542, 021 567 1527
Email:-acdil@ymail.com

(சி-328)

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்கள், உத்தியோகத்தர்கள், மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்காகவும் நடைபெறுகிறது.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்

★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது

★ Excellent Teacher's Panel & Individual Attention

★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

(சி-327)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
14.03.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Starts On**

14.03.2015@10.00am
16.03.2015@ 9.00am
21.03.2015@ 9.00am
23.03.2015@ 9.00am
25.03.2015@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550

HotLine(S) 0777585913, 0777222422 0714299935



## வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 01 - 01 - 1936



மறைவு 10 - 02 - 2015

**அமரர் வீரசிங்கம் சகாதேவசங்கரி**

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி பதில் முகாமையாளரும் சமாதான நீதவானும்)

கடந்த 10.02.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் வீரசிங்கம் சகாதேவசங்கரி அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (12.03.2015) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சிவன் கோவில் தெற்கு வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

(9734)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org